மாலா

தீபாவளி மலர் '53.. ரூ 1/-

ஏ.வி.எம் புரொடக்ஷன்ஸ்

பெண்

Phone: 4818 Grams: ALANKAR

MODERN AND UP-TO DATE REAL DIAMOND JEWELS

Proprietor

GUARANTEED! SOVEREIGN GOLD SILVER AND RANGOON DIAMONDS

SMALL PROFIT! QUICK RETURN!

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

ஔவையார் பார்ப்பது யாவர்க்கும் நன்று

ஜெமினி

ஔவையார்

இப்பொழுது 60 தியேட்டர்களில்



மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்டது	,,	72,00,000
செலுத்தப்பட்டது	,,	57,80,000
ரிசர்வும் இதர நிதிகளும்	,,	73,50,000
டிபாசிட்டுகள் (30-1-'53)		22,15,09,878

எல்லாவித பாங்கி அலுவல்
களும் செய்யப்படும்

N. கோபால அய்யர்
காரியதரிசி.

இந்தியன் பாங்க் லிட்
தலைமை ஆபீஸ் — மதராஸ் 1

GREATEST ARTISTS — FINEST RECORDING

"HIS MASTER'S VOICE"

The Hallmark of Quality

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

புதிய ரிகார்டுகள்

C. S. ஜெயராம் & A. மோஹனா

N. 95067
- சீருலாவும் — Seerulavum
- **C. S. Jayaram** — **C. S. ஜெயராம்**
- நல்லதோர் வீணை — Nallador Veenai

K. R. செல்லமுத்து & A. P. கோமளா

N. 95068
- பாத்து பாத்து கண்ணு (காமிக்)—2 பாகங்கள்
- Pathu Pathu Kannu 2 Parts

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த

"திரும்பிப்பார்"

டாகி கதை செட்டு

N. 65168 to N. 65171

8 பாகங்கள்

இன்னும்

"தேவதாஸ்"—விநோதா பிக்சர்ஸ்
"திரும்பிப் பார்"—மாடர்ன் தியேடர்ஸ்
"பொன்னி"—பக்ஷிராஜா ஸ்டுடியோஸ்
"சண்டிராணி"—பரணி புரடக்ஷன்ஸ்
"அவன்"—ஆர். கெ. பிலிம்ஸ்
"இன்ஸ்பக்டர்"—ஜூபிடர் பிக்சர்ஸ்
"ஆசை மகன்"—அசோஸியேடட் புரொடக்ஷன்ஸ்

முதலிய படங்களிலிருந்து இனிய பாட்டுகளும் வெளி வந்துள்ளன.

இன்றே கேளுங்கள்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா—பம்பாய்—டெல்லி—மதருஸ்

"HIS MASTER'S VOICE"

நாட்டின் நல்வளம் பெருக

இன்னம் தேவை



அதிக சாலைகள்

அதிக விவசாய, மின்சார திட்டங்கள்



அதிக பள்ளிக்கூடங்கள்

அதிக ஆஸ்பத்திரிகள்

இவைகளை நன்கு நிருமிக்க

சங்கர் பிராண்ட் SANKAR I C BRAND **போர்ட்லண்ட் சிமெண்ட்**

இந்தியா சிமெண்ட்ஸ் லிட். மதராஸ்-1

சகோதரிகளே !

உங்களுக்கு

'அர்ஷா'வின் குதூகல

தீபாவளி வாழ்த்துக்கள்.

தங்கள் பிரியமுள்ள

அர்ஷா வாசனை சாந்து

எமது வாடிக்கைக்காரர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்

தீபாவளி

வாழ்த்துக்கள்.

★

உங்களுக்கு வேண்டிய சகலவிதமான இன்ஷ்யூரன்சிற்கும் நாங்கள் குறைந்த விகிதங்களில் உயர்ந்தபக்ஷ அனுகூலங்களும் சிறந்த வசதிகளும் வழங்குகிறோம்.

★

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

“வான்கார்டு ஹவுஸ்”
11 & 12, செகண்ட் லைன் பீச்—மதராஸ்-1.

SPRAY IT
BETTER
Spartan
AUTOMOBILE
LACQUER FINISHES
BLACK
Spartan
FINISHES
★ வர்ணம்
★ மேற்பூச்சு
★ உறுதிப்பாடு
★ எல்லா சீதோஷ்ணத்
திற்கும் உகந்தது
★ சிக்கனம்
Addisons Paints & Chemicals Ltd.
Madras-11.
APC. S. MAC.
விநியோகஸ்தர்களும், ஸ்டாக்கிஸ்டுகளும் இந்தியா முழுவதும் உள்ளனர்

Phone: 3450 Guptas

If you are in Madras

Lunch and Dine

at

NEHRU LUNCH HOME

NAINIAPPA NAICK STREET, MADRAS-3

Tasty Dishes, Dainty Sweets, Wholesome

Service, Special Varieties,

Menu of dishes

South Indian Styles,

Ideal Hotel to Dine and Lunch with

Family and Friends.

ஸ்டாண்டர்ட் வான்கார்ட்

...நாளைய தேவைக்கேற்ற புதுமோஸ்தரில் அமைந்தது

- ★ ஆறுபேர் சௌகரியமாக அமரலாம்
- ★ சொகுஸான ஓட்டம்
- ★ எளிதில் வேகம் அதிகரிக்கலாம்
- ★ பராமரிக்க சிக்கனமானது
- ★ சாமான் வைக்க தாராளமான இடம்



எமது ஷோரூம்களில் 1953 மாடலைப்
பரிசீலித்துப் பாருங்கள்
சென்னைத் தொழிற்சாலையில் விலை

ரூ 13,950

SMZ-3-TM

தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட்
மதராஸ் - பெங்களூர் - உதகமண்டலம்

MYSINDIA TILES

Used exclusively for Floors in the Building. The entire Marble work for Steps, Floor and Walls at the Entrance is done by Mysindia Co.

MYSINDIA Coloured tiles are used extensively in Modern Houses, Hospitals, Hotels, Factories, etc.

We have completely renovated our Factory with the latest Italian Machinery. All raw materials used are the best.

MYSINDIA TILES outshine, outwear and outlast any other brand of similar Flooring.

டயர் சிலவு குறைய
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் உதவும்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் கிளை. 1943-ஆம் வருடம் ஸ்தாபிக்கப்பட்டது. பத்து வருடங்களுக்கு முன், யுத்த கால ஏற்பாட்டில் டயர் கட்டுப்பாடு நிலவியது. டி. வி. எஸ். பழைய டயர் புதுப்பிக்கவும், பழுதான டயர் சீர்படுத்தவும், டயர் பஞ்சத்தை சமாளிக்கவும், உகந்த இயந்திரத் தொழில் ஸ்தாபனத்தை பணியாற்றும் முறையில் நிறுவியது. இந் நாளில் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பழைய டயர்களை, நம் ரஸ்தாக்களுக்கு உகந்த முறையிலும், சீராக நீடித்த உழைப்பிற்கும் புதுப்பிக்கின்றது. பழுதான டயர்களை இயந்திர முறையில் செப்பனிட்டு உருவாக்குகிறது.

ரீட்ரெட் செய்யு முன்பு | ரீட்ரெட் செய்த பின்பு





சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

புதுக்கோட்டை

டி. வி. எஸ். க்ரூப்பைச் சேர்ந்த ஸ்தாபனம்

தீபாவளி வாழ்த்துக்கள்

★ "ஸ்டாண்டர்டு" கம்பி மத்தாப்புக்கள்!

★ "ரெட்போர்ட்" பட்டாசு தினுசுகள்!

★ "தீபாவளி மார்க்" மத்தாப்புக்கள்!

★ "மயில் மார்க்" பல நூதன தினுசுகள்!

தயாரிப்பாளர்கள் :

தி ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

சி வ கா சி

நேயர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்!

சென்னையில் முன்னணியில் நிற்கும் பொடித் தொழிற்சாலை

N. V. ஷண்முகம் கம்பெனியார்

பட்டணம் பொடித் தயாரிப்பாளர்

சென்னை - 21

தந்தி: "மூக்குத்தூள்"—தபால் பெட்டி 555—டெலிபோன் 4071

வீட்டு உபயோகத்திற்கான

பிரகாசமான பாத்திரங்கள்



வீடுகள், சிற்றுண்டிச்சாலை, ஆஸ்பத்திரி மற்றும் சகல தேவைகளுக்கும் வேண்டிய ஏராளமான தினுசு பாத்திரவகைகள் எம்மிடம் உள்ளன.

●

எமது மகத்தான உத்தரவாதமுள்ள அலுமினியம் M. A. E. N. மார்க் கைத் தயாரிப்பு. மற்றும் வார்ப்பட வீட்டுப் பாத்திரங்கள் ஒரு விசேஷ அம்சம்.

●

கீழ்க்கண்டவற்றிற்கு அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள்

கிரௌன் பிராண்டு அலுமினியம் சமான்கள், ஸன்பிராண்டு அலுமினியம், பித்தளை, செப்பு, பிர்த் ஸ்டேபிரைட் ஸ்டீல் சாமான்கள், கல்கத்தா கலாய் பக்கெட்டுகள், எல்லா சைஸ்களிலும் ஸ்நானத் தொட்டிகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

●

டெலிபோன்: 4106

M.A. ETHIRAJULU NAIDU

7A, EVENING BAZAAR ROAD,
PARK TOWN, MADRAS

தீபாவளி
வெளியீடு
உங்கள் மனதுக்குகந்த
உல்லாச சித்திரம்...
மனம்போல
மாங்கல்யம்
நாராயணன் கம்பெனி தயாரிப்பு

தந்தி: "ப்ளைவுட்"—மதராஸ் | போன்: 2590

எம். என். எஸ். ராதாகிருஷ்ணய்யா

சோல் புரொப்ரைட்டர்

பிளைவுட் மர்சென்ட்:

10/14, அய்யா பிள்ளை தெரு, சென்னை-3

பெல்ஜியம் ஜன்னல் கண்ணாடிகள், கனமான பட்டைத் தீட்டிய கண்ணாடிகள், வெள்ளி முலாம் பூசிய கண்ணாடிகள் போன்ற சாமான்களை நேராக இறக்குமதி செய்பவர்கள்.

மேலும் குதிரை மார்க் முகம் பார்க்கும் கண்ணாடிகள், ப்ளைவுட் பலகைகள் சப்ளை செய்பவர்கள்

குறைந்த விலையும், குறிப்பிட்டபடி விநியோகிப்பதையும்

ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள்!

கிளைகள்:

33, தேவராஜ முதலி தெரு, சென்னை-3

இசுக்கா தெரு, ராஜமந்திரி,

மெயின் ரோட், காக்கினடா ★ பிக்குவாலி தெரு, விஜயநகரம்

For All Modern Buildings use

SALVE'S

Hydraulic Pressed

MOSAIC TILES

DESIGN & PLAN

Noted for Strength, Durability & Appearance

Lowest Price :: *Best Execution*

Contact:

SALVE TILES & MARBLE COMPANY

Mosaic Tiles Manufacturers, Engineering Contractors
and Suppliers to Govt. P.W.D. & Railways

75, PETERS ROAD, ROYAPETTAH

Grams: SALVETILES | Post Box No. 654. MADRAS-14 | PHONE: 85741.

மாலா

போஷகர்: குமாரி வைஜயந்திமாலா

மாலா 3 மலர் 7 & 8

நிர்வாக ஆசிரியர்: எம். டி. ராமன்

ஆசிரியர்: எஸ். எஸ். சர்மா

●

சமர்ப்பணம்	நிர்வாக ஆசிரியர்
ஸரஸ்வதிபாய்	கானப்ரியா
நாட்டிய பரம்பரை	ஈ. கிருஷ்ணய்யர்
சங்கீதகலாநிதிகள்	த. ரா. ரா.
மாளவிகா	எல்லார்வி
முதற்கேஸ்	எம். பி. சுப்பிரமண்யம்
சைதன்ய ஸ்வாமிகள்	சதாசிவம்
இதய ஒலி	எஸ். டி. ஸ்ரீநிவாசன்
அன்புக் காணிக்கை	கௌசல்யா
பிரதிபலன்	கோதண்டராமன்
பிழைக்கும் வழி படங்கள்	சந்தாமியன்

தலைவர் படங்கள், மூவர்ண ஆர்ட் படம்
இதர அம்சங்கள்.

மாலாவில் வரும் பெயர்கள்
யாவும் கற்பனையே

சமர்ப்பணம்



சகல கலாஸ்வரூபியான சரஸ்வதி தேவியின் திருவடிகளில் அரும்பாடு பட்டு வளர்த்த இந்தப் பொன் மலரை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம். மூன்று வருடங்களாக வளர்ந்துள்ள நமது மாலா வாசகர்களின் அபிமானத்திற்கேற்ப மேல் மேலும் ஓங்கி வளர அன்னை நமக்கு அருள் புரியட்டும். அன்னையின் அருளால் அஷ்ட ஐச்வர்யத்தையும் அடைய வழியுண்டு. அன்னையின் ஆசி பெறுவதின் பொருட்டு காளிதாசனுக்குக் கவிதை ஊட்டிய கலாதேவியைப்பற்றி ஆசிரியர் எஸ். எஸ். சர்மாவின் கட்டுரையும், அதற்கேற்ப லா. சு. ர. வின் படமும் அமைந்துள்ளது. பாலு பிரதர்ஸ் ஸாரின் காந்தி, ராஜாஜி படங்கள் அவர்களது கைத் திறனுக்கு எடுத்துக்காட்டு. மலருக்கு அணிகள். மகிழ்ச்சிகரமான தீபாவளித் திருநாளில் சங்கீதம் வளர்த்த கலாநிதிகளின் ஒப்பற்ற சேவையை யாவரும் பாராட்ட வேண்டும்



என்பதிற்கேற்ப த. ரா. ராவின் குறிப்புகள் அமைந்துள்ளன. நாட்டியத்தில் நவரசமும் காணவேண்டும் என்பதை விரிவாக ஈ. கிருஷ்ணய்யர் விளக்கியுள்ளார். ஸ்ரீமதி ஸரஸ்வதி பாய் ஓர் ஒப்பற்ற கலாநிதியாவர் என்பதை "கானப்பிரியா"வின் கட்டுரை காண்பிக்கிறது. கரூர் சந்தாமியன் போட்டோக்கள் 'பிழைக்கும் வழி"கள் எவ்வளவோ வகைகள் உள்ளன என்பதை அறிவிக்கின்றன. மற்றும் பிரபல எழுத்தாளர்களின் கதைகள் மிகவும் உன்னத முறையில் அமைந்துள்ளன என்பதைப் படித்துப் பார்த்தாலே புரியும். மாலாவின் மலருக்கென்று அமைந்துள்ள சில பகுதிகள் வாசகர்களின் மனதை மிகவும் ஆகர்ஷிக்கும் என்பதில் ஐயமில்லை. மலர் கொணர்வதற்கு உதவியாயிருந்த விளம்பரதாரர்களுக்கும், அச்சிடுபவர்களுக்கும், பிளாக் செய்பவர்களுக்கும், சைத்திரிகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாலாவின் அடுத்த இதழ் முதல் பிரபல எழுத்தாளர் வே. லட்சுமணன் அவர்களின் "கோஷவதி" தொடர்கதை வெளியாகிறது என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

(நிர்வாக ஆசிரியர்)

கவிதை தந்த கலாதேவி

பகுத்தறிவுள்ள மனிதர்கள் யாவரும் தெய்வத்தை ஏதோ ஒரு வகையில் வழிபட்டாலும் அவரவர் மனத்தில் தோன்றும் உருவங்கள் பல வகையாகத்தான் தோன்றுகின்றன. உருவங்கள் பல விதப் பட்டாலும் தெய்வமனைத்தும் ஒன்றேயாகும். தெய்வங்கள் மட்டுமென்ன? மனிதனும், தெய்வமும் கூட ஒன்றுதான். ஏதோ ஒரு வகையில் பரமாத்மா விடமிருந்து ஜீவாத்மாக்கள் பிரிந்தன. பிரிந்த ஜீவாத்மாக்களை பரமாத்மாவோடு ஐக்கியப் படுத்துவதற்கே மனிதன் முயற்சிக்க வேண்டும். ஆகாசத்திலிருந்துமழையாகப் பெய்த ஜலம் எங்ஙனம் “ குளம், கிணறு, நதி, சமுத்திரம் “ இவைகளில் விழுந்து சிலகாலத்திற்குப் பிறகு ஆவியாகமாறி மறுபடியும் ஆகாசத்திலேயே போய்ச் சேருகிறதோ” அதே போன்றுதான் ஜீவாத்மாக்களும், பரமாத்மாவோடு ஐக்கியம் ஆகவேண்டும் என்று கூறுவது. அது போன்று பல விஷயங்களை எடுத்துக் கூற நம் இந்தியக் கவிகள் அரும்பாடு பட்டிருக்கின்றனர். முன் காலத்தில் கவிகளுக்கு தனி மதிப்பை அந்தந்த தேசத்து மன்னர்கள் கொடுத்து வந்தனர். கவிகளைத் தமது உயிராகப் பாவித்து வந்தனர் பல மன்னர்கள். வடமொழிக் கவியான காளிதாஸரைப் போஜ மன்னன் ஆதரித்து வந்த வரலாற்றை அறிந்தாலே போதும். கவிகளின் வாக்கு தெய்வ வாக்காகவே அமைந்திருந்தது. கவிகளுள் சிறந்து விளங்கிய காளிதாஸன் தேவியின் அருள் பெற்று கவிதை புனையலானான். தேவியின் அருள்பெற்ற கவி என்பதினால் “தேவியின் தாஸன்” என்ற பெயரும் அமைந்தது. உபமான அணி வைத்துக் கவிதை புனைவதில் சமர்த்தரான காளிதாஸர் “ அம்பிகையைப் பல விதங்களில் வர்ணித்துள்ளார். தேவியின் அருள்பெற்ற வுடனேயே “ சியாமளா தண்டகம் ” என்ற கத்யத்தின் மூலம் தேவியை மிக அழகுபட வர்ணித்துள்ளார். அதில் ஆரம்பமாக சில சுலோகங்கள் சொல்லப்படுகின்றன. அச்சுலோகங்களின் ஒன்றான “ ஓங்கார பஞ்சாசுரீம் ” என்பதற்குத்தான் மறுபக்கத்தில் படத்தோடு விளக்கம் தரப்பட்டுள்ளது. சியாமளா தண்டகம் பக்தியுடன் படிக்கவேண்டிய நூல்.

ஓங்கார பஞ்சரசுகீம்
உபநிஷத் உத்யான கேலி கலகண்டீம்
ஆகம விபின மயூரீம்
ஆர்யாம் அந்தர் விபாவயே கௌரீம்"

ஓங்காரம் என்கிற கூட்டில் கிளி போன்றிருப்பவளும், உபநிஷத் என்கிற தோட்டத்தில் விளையாடுகின்ற குயில் போன்றவளும், வேதங்கள் என்கிற காட்டில் மயில் போன்று சஞ்சரிப்பவளும் பூஜிக்கத் தகுந்தவளுமான அம்பிகையை மனதில் அடைக்கலம் செய்து கொள்கிறேன்". என்ற கவி தன் ஹருதயத்தில் இருப்பதை எடுத்துக் கூறுகிறார்.

BALU BROS

மங்களகரமான தீபாவளித் திருநாளில் மாலா போஷக்கர் குமாரி- வைஜயந்திமாலா வாசகர்க[illegible]த்
தீபாவளி வாழ்த்துக்களை வணக்கமுடன் அளிக்கிறார்

பம்பாய் நடிகர்களுக்கு மாலாவின் போஷகர் வைஜயந்திமாலா அளித்த விருந்துபசாரம்

'லட்கி'யின்படத்தின் எல்லாபாகங்களும் முடிவடைந்து பம்பாய் நடிகர்கள் வடநாட்டிற்குப் புறப்பட்டனர். அதன் பொருட்டு "லட்கியின்" கதாநாயகிவைஜயந்தி மாலா அவர்கள் தன் பங்களாவில் ஓர் விருந்துபசாரத்தை பம்பாய் நடிகர்களுக்கு அளித்தார் பாரத்பூஷன், கிஷோர்குமார், ஓம்பிரகாஷ், ரணதீர் முதலியோரும்; லட்கியின் தயாரிப்பாளர் உயர் திரு ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்களும், டைரக்டர் எம். வி ராமன் அவர்களும், அஞ்சலிதேவியும் விருந்தில் கலந்து கொண்டனர். மற்றும் சென்னிந்திய நடிகர்களான டி. ஆர். ராமசந்திரன் கே. சாரங்கபாணி, நாகேந்திரராவ் முதலியோரும் சந்தோஷமாக கலந்து கொண்டனர். இவர்கள் தவிர வைஜயந்தி மாலாவின் குடும்ப சிநேகிதர்களும், உறவினர்களும் கலந்து கொண்டனர். சாப்பாட்டிற்குப் பிறகு அவரவர்கள் குதூஹலமாக சம்பாஷணையில் ஈடுபட்டனர். சில பத்திரிகை நிருபர்களும் வந்திருந்தனர். பிறகு ஓம்பிரகாஷ் ஒரு நடனம் செய்து காட்டினார். விருந்திற்குப் பின் வைஜயந்திமாலா அவர்கள் சில ஹிந்திப்பாட்டுக்களைப் பாடினார். வைஜயந்திமாலாவின போஷகர் யதுகிரிதேவியாரும், மாலா நிர்வாக ஆசிரியர் எம். டி. ராமன் அவர்களும் வந்திருந்தவர்களுக்கு மாலை கொடுத்து வந்தனோபசாரம் அளித்தனர். இனிதாக விருந்துபசாரம் முடிந்தது.

அஹிம்ஸா முறையில் சுதந்திரம் அடைவதற்கு முக்கிய காரணஸ்தரான
நம் அண்ணல் காந்தியை ஒவ்வொரு விசேஷ தினத்திலும் அவசியம்
நினைக்கவேண்டுமல்லவா !!



இந்திய மக்கள் அனைவரையும் நற்பாதையில் கொண்டுபோக அரும்பாடுபட்டுவரும் நம் பிரதம மந்திரி ''ஜவஹர்லால் நேரு ''சமீபத்தில்'' ஆந்திர ராஜ்யம்'' ஆரம்பித்து வைத் பட்டீ ததையே இப்படம் காட்டுகிறது.


என்ன இருந்தாலும் "நம் ராஜாஜி" போல் ஆகுமா! என்று அனைவர் சொல்வதையும் கேட்டு தம்மிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை எண்ணி உவகை கொள்கிறார் நம் முதன் மந்திரி.
BALU BROS



முதன் மந்திரி பதவிக்காக மட்டும் காங்கிரஸில் சேரவில்லை. ஆந்திர மக்கள் அனைவரையும் காங்கிரஸில் சேர்த்து ஆந்திர ராஜ்யத்தைச் செவ்வனே நடத்தவே பதவியை ஒப்புக் கொண்டார் ஸ்ரீ பிரகாசம் அவர்கள்.

வருகிறது!
விஜயாவின்
சந்திரஹாரம்
டைரக்ஷன்... K. காமேஸ்வரராவ்
தயாரிப்பு... நாகிரெட்டி & சக்ரபாணி

நாட்டியக் கலையின் பண்பை அழ
காக எடுத்துப் பேசி விட்டு கலையின்
உண்மையை பல ரூபங்களில் விளக்
கிக் காட்டுகிறார் வைஜயந்திமாலா
அவர்கள். ஏ. வி. எம் மின் 'பெண்'
படத்தில் இதுபோன்று பல அம்சங்
கள் புகுத்தப்பட்டுள்ளன.

அமெச்சூர் நடிகர் ஸி. ஜி. விஸ்வநாதன்

தென்னிந்திய அமெச்சூர் நடிகர் ஸி. ஜி. விஸ்வநாதன்

நாடக உலகிலே ஓர் சிறந்த அமெச்சூர் நடிகராய்த் திகழும், சி. ஜி. விஸ்வனதன் சென்னையிலே பிறந்தவர் தான். கூரிய புத்தியுள்ள இவர் 1942ம் ஆண்டிலே எம். ஏ. பட்டம் பெற்று அடுத்த வருடமே ஸ்டாண்டர்டு வாகுவம் ஆயில் கம்பெனியில் ஜில்லா விற்பனை மானேஜர் உத்தியோகம் பெற்ருர். இன்று அவர் இந்த ஸ்தாபனத்திலே சிப்பந்திகள் உறவு இலாகா மானேஜர்.

1950ம் ஆண்டிலே ஐக்கிய அமெரிக்காவிற்கு மேல் பயிற்சிக்காக கம்பெனியால் அனுப்பட்டார். சமீபத்தில் நடந்த நகரசபைத் தேர்தலில் நேபியர் பார்க் டிவிஷனுக்கு அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். நகர சபை காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்.

இவர் கல்லூரிப் படிப்புக் காலத்தில் குஸ்தி வீரராய்த் திகழ்ந்தாலும் இவரது முக்கிய விளையாட்டுகள், கிரிக்கெட், ஹாக்கி டென்னிஸ்களாகும்.

இவர் நாடக மேடையில் நடிப்பு விஷயத்தில் மிக்க அக்கரை கொண்டவர். பல நாடகங்களில் பிரதம பாகங்களில் தோன்றியுள்ளார். ஆங்கில நாடகங்களிலும் நடித்துள்ளாரிவர். அமெச்சூர் நடிகப் போட்டியில் 1951, 1952ம் வருடங்களில் மிகச் சிறந்த நடிகர் என அறிவிக்கப்பட்டார்.

தக்க நபரால் நன்கு டைரக்ட் செய்யப்படும் படத்தில் தக்க பாத்திரமாக நடிக்க இவருக்கு அவா உள்ளது. தென்னிந்தியாவில் குமாரி வைஜயந்திமாலா மிகச் சிறந்த பல்துறை நடிகையாக விளங்குகிருர் என்று கூறுகிருர்.

ஸாம்ஸன் டிலைலா என்ற நாடகத்தில் கதாநாயகனுகத் தோன்றி மிக அற்புதமாக நடித்துள்ளார் விஸ்வநாதன்

ஸி. ஜி. விஸ்வநாதன் "கவியின் கனவு" என்ற நாடகத்தில் ராஜ குருவாக நடித்து மிகவும் பிரக்யாதி பெற்றிருக்கிருர். இதில் இவரது நடிப்பு குண சித்திரமாக அமைந்துள்ளது.

பி.எஸ்.சரோஜா



ஜெயந்தி புரொடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பான பொன் வயலில் மனதிற்கிசைந்த பல காட்சிகள் புகுத்தப்பட்டுள்ளன. டி. ஆர். ராமச்சந்திரனும், அஞ்சலிதேவியும் பிரதம பாகம் ஏற்று பிரமாதமாக நடித்துள்ளார்கள். 1954ம் வருட ஆரம்ப படமாக 'பொன் வயல்'' இருக்கும். பொன் வயல் முதல் 1954ம் ஆண்டில் வெளியாகும் எல்லா படங்களும் மிகப் பிரமாதமாக இருக்கும்.

and BURMAH-SHELL DELIVER THE GOODS

Only Quality Pays

The standard of your organisation is judged by the standard of your office stationery . . . .

The standard of your product is judged by your advertising material

---

Ensure this by consulting

ASSOCIATED PRINTERS (MADRAS) LTD.

MADRAS & BANGALORE



ஹரி கதா காலக்ஷேபத் துறையில் இன்று முன்னணியில் நின்று ஸேவை செய்து வரும் ஸ்ரீமதி ஸரஸ்வதி பாயை இப்பாரத நாட்டில் பெரும்பான்மையோர் அறிவார்கள். பாயின் கதையின் சங்கீத ஸாஹித்யங்களில் பாவ, ராக, தாளங்களின் பெருமையையும், நவரஸங்களின் பரிமளிப்பையும், பக்திப் பிரவாகத்தையும் மெச்சின பலர் இவர்களை வரவழைத்து, தக்க விருதுகள் அளித்து ஸன்மானங்கள் செய்திருக்கிறார்கள். ஸரஸ்வதி பாயின் ஒப்பற்ற நிரூபணமான "ராமதாஸ்" சரித்திரத்தை கேட்ட பிடில் வித்வான் கோவிந்தஸாமி பிள்ளை, ஓர் தங்கத் தோடாவை ஸன்மானம் செய்தார். இந்த அம்மாள் சென்ற நாற்பது வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக ஸங்கீத உலகத்திற்கு ஒரு பெரிய திலகம் போல் விளங்கி வந்திருக்கிறார். வயது 60 ஆகியும், இவருடைய சாரீர மாதுரியமும், பாடும் அழகும், கதை சொல்லும் சாதுர்யமும், தெள்ளிய பாஷா ஞானமும் கொஞ்சமும் குன்றவில்லை.

ஸரஸ்வதிபாயிக்கு கிடைத்திருக்கும் மெடல்களும், தோடாக்களும், சால்வைகளும், பட்டங்களும், பனாரஸ் புடவைகளும், இதர பரிசுகளும், இவருடைய உயர்ந்த ஸங்கீத மேதையையும், நிகரற்ற வாக்கு வன்மையையும் விளக்குகின்றன. பகவத் பக்தியிலும், குருபக்தியிலும் சிறந்த இவர் தமிழ், ஸம்ஸ்கிருதம், மகாராஷ்டிரம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி முதலிய பல பாஷைகளில் பேசவும் பாடவும் பாண்டித்யம் உடையவர். பெண் குலத்தில் முதன்முதலாக காலக்ஷேபம் செய்து ஆயிரக்கணக்கான ஜனங்களை மகிழ்விக்கக் கூடுமா என்று நமக்குத் தோன்றலாம். கூடும் என்று எனக்கு சிறு பையனாயிருக்கும்பொழுது ஓரளவு புலப்பட்டது. கர்ணாடக ஸங்கீதத்துக்குத் தாயகம் என்று சொல்லப்படும் தஞ்சை ஜில்லாவில் நீடாமங்கலம் என்ற ஓர் கிராமம் இருக்கிறது. இவ்வூரில் சில வருஷங்களுக்கு முன் மாடபூசி திருவெங்கடாச்சாரியார் என்ற பரதஸாஸ்திர நிபுணரும், ஸ்வரக்காடு வெங்கடசுப்பையர் என்ற ஸங்கீத வித்வானும், சமீபத்தில் அபின வநந்திகேஸ்வர தவுல் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையும் வசித்து வந்ததை ரஸிகர்கள் அறிவார்கள். இங்கே ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்ட ஒரு ராமர் கோவிலும், ஒரு சிவாலயமும் உண்டு. இவைகளில் வருஷம் தோறும் திருவிழாக்காலங்களில் நாகஸ்வரக் கச்சேரி, ஸங்கீத வினிகைகள், ஹரிகதா காலக்ஷேபம், ஸதிர் முதலியவைகள் நடக்கும். அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்தும், பலவிடங்களிலும் உள்ள ஜனங்கள் கூடி திருவிழாவில் பங்கெடுத்துக் கொண்டு கச்சேரிகளைக் கேட்டு மகிழ்வார்கள்.

சுமார் இருபது வருஷம் முன்பு இங்கே உள்ள சிவாலயத்தின் பிராகாரத்தில் அமைந்திருந்தபெரும் கொட்டகையில் ஸ்ரீமதி ஸரஸ்வதி பாய் "நந்தனார் சரித்திரம் என்ற ஹரிகதா காலக்ஷேபம் செய்ய நேர்ந்தது. திரள் திரளாக ஸங்கீத வித்வான்களும், ரஸிகர்களும், கலாபி மாணிகளும், கோவில் சிப்பந்திகளும் கூடியிருந்த அந்த மகத்தான ஸபையில் நானும் நெருங்கி அடித்துக் கொண்டு பாகவதர் பெஞ்சிகு அருகில் அமர்ந்தேன். அந்த இளம் மாத்வப் பெண்ணின் வசீகரமான தோற்றமும், ஜொலிக்கும் மெடல்களும், கால்சிலம்பும், கைசிப்ளாக்கட்டையும் என்னைக் கவர்ந்தன. அவ்வளவுதான். கதை ஆரம்பித்தவுடன் அந்த பக்தி வெள்ளமானபிரவசனத்திலும், மனதை உருக்கும் ஸங்கீதத்திலும், கலகலப்பை உண்டாக்கும் ஹாஸ்யப் பேச்சிலும் அமிழ்ந்து விட்டேன். அடுக்கடுக்காக கோபால கிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனைகளையும் வசனங்களையும் அம்மான் அவர்கள் தங்குதடையில்லாமல் பொழிந்தார்கள். ஜனங்கள் மெய் மறந்து பரவசமடைந்தனர். அப்பொழுது பாடிய "சற்று விலகி இரும்பிள்ளாய்" என்ற பாட்டு என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. அச்சமயம் உண்மையாகவே அந்தப் பிரகாரத்தில் படுத்திருக்கும் சிலை உருவமான நந்தி நகர்வது போல் ஓர் மனக்காட்சியை நம்முன் சித்தரித்து விட்டார்கள். காலக்ஷேபம் முடிந்தவுடன், ஸரஸ்வதி பாய் பாடிய பாட்டுகளை மனனம் செய்து கொண்டு வீடுசென்றேன். இந்த சம்பவம் என் மனக்கண்முன் இப்பொழுதும் தோன்றுகிறது.

பிறகு, இம்மாதிரியான ஹரி கதைகளைக் கேட்க மிக்க அவா ஏற்பட்டு "ராமதாஸ் சரித்திரம்" "ருக்மிணி கல்யாணம்" "திரௌபதி மான ஸம்ரக்ஷணம், "ராம பட்டாபிஷேகம் "வத்ஸலா கல்யாணம்," "துருவ சரித்திரம்," "அஜாமிளோபாக்யானம்" இன்னும் பல காலக்ஷேபங்களை ஸரஸ்வதி பாயிடம் அடிக்கடி கேட்டதுண்டு. இத்துடன் இவருடன் நெருங்கிப் பழகும் பாக்யமும் ஏற்பட்டது. இவர்களுடைய கதா நிரூபணங்களில், உயர்ந்தபக்தி ரஸமும், மேன்மையான ஸங்கீத பாணியும் கேட்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும்.

ஸரஸ்வதி பாய் காலக்ஷேப வழிக்கு வந்ததே ஒரு கதையாகும். இவர்கள் பல்லாரி ஜில்லாவிலுள்ள, கூடி என்ற ஊரில், பிறந்தார்கள். தகப்பனார் ஜி. ராமாராவ் என்ற ஓர் மத்வ பிராம்மணர். சிறு வயதிலேயே ஸரஸ்வதி பாயிக்கு சேலத்தில் ராகவேந்திரராவ் என்பவருடன் கல்யாணம் ஆயிற்று. இவருக்கு எழுவயதாகும் பொழுது ஓர் தனவந்தர் வீட்டில் ஓர் பெண்ணுக்கு யாகுபலி வஸ்தாத் என்பவர் ஹிந்துஸ்தானி ஸங்கீதம் கற்பித்துக் கொண்டிருந்தார். அப்பெண்ணுக்குத் துணையாக இவரையும் சேர்த்துக் கொண்டனர். சொல்ப காலத்தில் ஸரஸ்வதி பாயிக்கு, சுருதி லய நிதானம் ஏற்பட்டு, பாடவும், ஸித்தார் ஹார் மோனியம் வாசிக்கவும் அப்பியாஸம் ஆயிற்று. இருந்தாலும், இவர்கள் பிறந்த வீட்டிலிருப்பவருக்கோ, புக்ககத்தினருக்கோ ஸரஸ்வதி பாயிக்கு ஸங்கீதம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமுமில்லை. இவ்வளவு இடஞ்சல்கள் நடுவிலும் ஸங்கீதத்தை தானே ஸாதகம் செய்து இனிமையாய் பாடி வந்தார்கள்.

ஒரு விசேஷ நாளன்று ஸரஸ்வதி பாய் தன் வீட்டில் பாட நேர்ந்தது. அந்த இன்னிசை விருந்தை வந்தவர்கள் எல்லோரும் இன்புற்றுப் பருகினார்கள். அவர்களில் ஒருவரான பண்டித டி. கிருஷ்ணாசார் இவருடைய சாரீர சம்பவத்தை மெச்சி சங்கீத ஞானம் பரிமளிக்கும்

பொருட்டு தம்மால் இயன்ற உதவி செய்வதாகச் சொன்னார். மறுநாளே பண்டிதர் இவர்களுக்கு ஸம்ஸ்கிருதம் சொல்லத் தொடங்கினார். இன்னும் அநேக ஸங்கீத வித்வான்களை அழைத்து வந்து கீர்த்தனங்கள், ஜாவளிகள், இதர உருப்படிகளைப் பாடம் சொல்லிவைக்கும்படி முயற்சி செய்தார். காலக்ஷேபத் துறையிலுள்ள பாகவதர்களும், ஸங்கீத வித்வான்களும், ரஸிகர்களும் இவருடைய ஸங்கீத ஞானத்தையும் தங்குதடையின்றி சஞ்சரிக்கும் சாரீரத்தையும் மிகவும் போற்றி புகழ்ந்தனர். ஒரு நாள் ஸரஸ்வதிபாய் பாடிய "முத்துக் குமரையனே" என்ற கீர்த்தனையை ரஸித்தபிடில் கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமக்கு மைசூர் ஸமஸ்தானத்தில் அளித்த உயர்ந்த சால்வையை இவருக்குப் பரிசாக அளித்தார்.

முதல் முதலில் ஸரஸ்வதி பாய் கதா காலக்ஷேபம்செய்வதற்கு காரணமாய் இருந்தவர் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்த ஸர். ஸி. சங்கரன் நாயர். இவரது பாரியையால் ஏற்படுத்தப்பட்ட ஸ்திரீகள் சங்கத்தில் தன் குருவிடம் பயின்ற "கருடகர்வபங்கம்" என்ற ஹரி கதையை ஸரஸ்வதிபாய் மிருதங்கம், பின் பாட்டுடன் செய்ய நேர்ந்தது. கதை முடிந்ததும் ஸர். சங்கரன் நாயரும், லேடி சங்கரன் நாயரும் இவர்களை மிகவும் பாராட்டி இவ்விதமான மேன்மையான ஸங்கீதத்தையும், பிரஸங்கத்தையும் ஸ்திரீ புருஷர் எல்லோர் எதிரிலும் செய்யலாம் என்று சொல்லி இவருக்கு ஊக்கமும், உத்ஸாகமும் அளித்தனர். அது முதல் ஸரஸ்வதி பாயிக்கும், அவருடைய போஷகரான பண்டித கிருஷ்ண சாருக்கும் மனதில் ஓர் தைரியம் ஏற்பட்டு, எது எப்படி இருப் இருப்பினும் கால க்ஷேபத் தொழிலைக்



ஸரஸ்வதிபாய்க்கு டாக்டர் ஸி. பி. ஒப்பற்ற வெகுமதியை அளிக்கிறார்

கடைபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் தீவிரமாய் குடிகொண்டது.

இப்படி இருக்க இப்பெண் பாகவதருடைய பிரதாபம் ஊரெங்கும் பரவவும், பொறாமையும் பொச்செரிப்பும் குடிகொண்ட வித்வான்களும், இதர பாகவதர்களும் இதைத் தடுப்பதற்குத் தங்களால் ஆன பிரயத்தனங்களைச் செய்து இவர்களையும் இனி கதா காலக்ஷேபம் செய்யக் கூடாது என்று எசசரிக்கை செய்யத் தொடங்கினர். "ஒரு ஸ்திரீயாவது, கதா காலக்ஷேபம் செய்வதாவது; அது தர்ம சாஸ்திரத்துக்கு விரோத மல்லவோ' என்று விபரீத பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் எப்படி வெளிப்படையாய் தங்கள் அருவருப்பையும் துவேஷத்தையும் தெரியப்படுத்தினதால் ஸரஸ்வதி பாயிக்கு அனேக இடையூறுகள் நேர்ந்தன. இதனால் சென்னையிலுள்ள ஸபாகாரியதரிசிகளும் இவருடைய கதா நிரூபணங்களை வைப்பதற்கு முன்வரவில்லை. இத்தருணத்தில் முறையூர் ஷண்முகய செட்டியார் என்பவர் பலகனவான்களை வரவழைத்து மைலாப்பூரில் உள்ள நாட்டு சுப்பராய முதலி தெருவில் இவரது கதையை ஏற்பாடு செய்தார்கள். அப்பொழுது வந்திருந்த புருஷர்கள் கூட்டத்து நடுவில் ஸரஸ்வதி பாயின் கதை அமோகமாக நடந்தது. குழுமி இருந்த அனைவரும் பாயின் உயர்ந்த நிரூபணத்தைப் போற்றினார்கள்.

இதற்குப் பிறகு ஸ்ரீமான்கள் வெங்கடேச பெருமாள் செட்டி, வீரராகவ ஐயங்கார் என்ற இருகனவான்களும், 1909 வருஷம் பிப்ரவரி மாதம் பகவத் கர்ணம்ருத வர்ஷனி சபை ஆதரவில் ஸரஸ்வதிபாய் கதையை ஏற்பாடு செய்து, தங்கசாலை தெரு ஹிந்து தியலாஜிகல் பள்ளிக்கூடத்தில் "கருட கர்வபங்கம்" என்ற கதை வெகு விமரிசையாய் நடந்தது. இதற்கு பக்கவாத்யத்துக்கு பிரபலமானவர்கள் எவரும் வர மறுத்ததால், மிருதங்கம் இராமாமிருத ஐயரும், ஒருபிடில் காரரையும் வாசிக்க பெரும் முயற்சி செய்து கதை ஏராளமான ஜனங்கள் கூடிய சபையில் வெற்றிகரமாய் முடிவு பெற்று ஸரஸ்வதி பாயின் மனோரதமும் ஒருவாறுபூர்த்தியடைந்தது. கூடியிருந்த ரஸிகர்களும் தனவந்தர்களும் காலக்ஷேபத்தை பாராட்டினார்கள். இவர்களில், ஸ்ரீமான் கத்தே ரங்கைய நாயுடு கதையை மிகவும் புகழ்ந்தார். இக்கதைக்கு வசூலான ரூ 640 ஸரஸ்வதி பாயிக்குக் கொடுக்கப்பட்டது. இது முதல் சென்னையில் வாரந்தவராது இவர்களுடை கதை பல விடங்களில் நடக்க ஆரம்பித்தது. இந்த காலக்ஷேபங்களுக்கு சுமார் ரூ 100 ஸம்மானம் கொடுக்கப்பட்டு தக்க ஆதரவும் ஏற்பட்டது. தஞ்சாவூரில் பிரபலமாய், விளங்கிய பஞ்சாபகேச பாகவதர் என்பவர், ஸரஸ்வதிபாயின் கதையை ஏற்பாடு செய்து, அனேக வித்வான்களையும், ரஸிகர்களையும் பாகவதர்களையும் வரவழைத்தது, விசேஷமாக கௌரவம் செய்து அனுப்பினார்கள்.

சுமார் 40 வருஷகாலமாக கதா காலக்ஷேபத்துறையில் ஸரஸ்வதிபாய், ஆயிரக்கணக்கான ஜனங்களை இந்தியா மாத்திரமல்ல பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், கொழும்பு முதலிய பல இடங்களில் மகிழ்விக்கச் செய்திருக்கிறார்கள். சங்கீதத்திலும் சரி, கதா பிரஸங்கத்திலும் சரி இவர்களுக்குஅனேக பட்டங்கள் சென்ற விடங்களில் எல்லாம் அளிக்கப் பட்டனர். பண்டித விஷ்ணுதிகம்பர் பம்பாய் காந்தர்வ மஹா வித்யாலயத்தின் சார்பாய் இவருக்கு "காயனபடு" எற்ற பட்டமும் (1916) லோகமான்யதிலகர் பூனா ஜனங்கள் சார்பாய் 1920 ல் "கீர்த்தனபடு" என்ற பட்டத்தையும் அளித்தார்கள். சிறுபிராய முதல் இவருடைய அரிய சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்த வர்களுள், தஞ்சாவூர் பஞ்சாப கேச பாகவதர், ஸ்ரீ சபேச ஐயர், பிடில் கோவிந்தசாமி

பிள்ளை காயக சிகாமணி முத்தையா பாகவதர், டபிள்யூ துரைசாமி ஐயங்கார் இவர்களைக் குறிப்பிடலாம்.

ஸரஸ்வதி பாயிக்கு அறுபது ஆண்டு பூர்த்தியானது ஞாபகார்த்தமாக சென்னையில் நடந்த வைபவத்தில் "ஹரிகதா கலாநிதி" என்ற பிருது, மஹாத்மா ஜி ஸேவா சங்க சார்பில் பிரதிவாதித் பயஸ்கரம் அண்ணங்கராச்சாரியார் வழங்கினார். ரஸிக ரஞ்சனி சபாவில் நடந்த பெரும் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஸர். ஸி பி ராமஸ்வாமி ஐயர், இவரது ஹரி கதையை மிகவும் பாராட்டிப் புகழ்ந்து ஜனங்களின் சார்பாக, ரூ. 5,000மும் பல பிரமுகர்களும் நண்பர்களும அளித்த, தியாகராஜ, படம், சால்வை, பனாரஸ் புடவை, தங்க தோடா. முதலிய ஸன்மானங்களையும் இவருக்குக் கொடுத்தார். அனேக ஸங்கீத வித்வான்களும், பாகவதர்களும், ரஸிகர்களும் குழுமி இருந்த இந்த ஸபையில் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் இன்னிசை விருந்து நடத்தினார். கனம் ராஜாஜி அவர்கள் பக்தியின் பிரபாவத்தைப் பற்றி பேசியபின் ஸரஸ்வதிபாயின் உயர்ந்த ஹரி கதா நிருபணங்களைப் போற்றி கடவுள் பக்தி குறைந்து கொண்டு வரும் தற்காலத்தில் இம்மாதிரி கதா காலக்ஷேபங்கள் ஜனங்களுக்கு உயர்ந்த மனப்பான்மையை அடைவதற்கு தக்க சாதனம் என்று கூறினார். ஸரஸ்வதி பாய் வயதுக் கிரமத்தினால் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போதிலும், அவ்வப்போது ரேடியோவிலும், ஸங்கீத வித்வத்ஸபையிலும் இவருடைய காலக்ஷேபங்களை ரஸிகர்கள் கேட்டு மகிழ்கிறார்கள். இந்த குரு சிஷ்யர்கள் இன்னும் பல வருஷம் பகவத் குணபிரவசனத்துக்கும், நிஜ ஸங்கீதத்திற்கும் பூர்ணமாய் தொண்டு செய்வார்கள் என்று பகவானை மனமாரப் பிரார்த்திக்கிறேன்.



ராஜாஜி சரஸ்வதிபாய்க்கு பட்டுப் புடவையை அளிக்கும் காட்சி

விருந்தளிப்பதில்

இணையற்றவள்

சாமிஸ்

காபி

விருந்தளிப்பதில் பெயர் பெற்ற குடும்பத் தலைவிகள், எல்லாவிடங்களில் இதையே விரும்புகின்றனர். அபூர்வ ரகத்தைச் சேர்ந்த இவை சகலருக்கும் வேண்டிய தரங்களில் கிடைக்கும்.

வறுக்காதது, வறுந்தது, பொடி



சாமீஸ் காபி
மான்யுபாக்சரிங் கம்பெனி
சென்னை - 1
போன்: 3637



You, too must see



THE New PHILCO

RADIO B 3640

You will thrill to the life-like shortwave reception of the NEW PHILCO B 3640. Band spread Tuning, Elegant walnut finished cabinet, 10" Permanent Magnet speaker.

MAHOMED EBRAHIM & CO. LTD.,

VICTORY HOUSE,
MOUNT ROAD, MADRAS.

MEZ 29

ரஸ—பாவம்

(ஈ கிருஷ்ணய்யர்)

உலகத்திலுள்ள நடனவகைகளிலெல்லாம், லயத்தத்துவத்தைப் பிரதிபலிக்கும் தாளங்களுக் கேற்றபடி, உடலுறுப்புகளின் நிலை, நடை, நெளிவுகளாலான நடனச் சித்திர ஆடல்களுண்டு. அவைகள் அந்தந்த நாட்டின் நாகரிகத்துக் கேற்ப, பல தரப்பட்ட அழகுவடிவங்களாயிருக்கும் இந்திய சம்பிரதாய நடன வகைகளிலும் அத்தகைய நடனச்சித்திரங்களுக்குக்குறைவில்லை. சதிர் பாதநாட்டியத்தில் அவ்வாடல்கள் விசேஷவனப்புக்கொண்டிருக்கின்றன. பலதாளங்களில், நடைபேதங்களுடனும், நுட்பமானவேலைப்பாடுகளுடனும், அடவு ஜாதிக்கோவைகள் ஆடப்படும்போது, "சிறப்புற்ற பண்டையச் சிற்பங்களும் ஓவியங்களும் உயிரொடுத்து ஆடுகின்றனவோ" எனும்படிப் பார்ப்போரை வியக்க வைப்பதாயிருக்கின்றன. ஒவ்வொரு காலடிக்கும் எற்ற ஒரு உடல் நிலை, ஒரு எழில் கை, இம்மூன்றும் சேர்ந்ததே ஒரு ஆடல் துணுக்காகும் என்று முன்பு சொல்லியிருக்கிறோம். இவ்வாடல் துணுக்குகள் ஒன்றைப் போல் மற்றொன்று இருக்காது, வெவ்வேறு எழில் கொண்ட பலவகையாய்ச் சேர்க்கப்பட்டு வரிசைவரிசையாயும், லாகவமாயும் ஆடப்படும்போது, நடனத்தின் அழகு உச்சத்தைக் காண்கிறோம். ஆதலால்தான் மற்ற இந்திய நடன வகைகள், பிறநாட்டு வகைகள் எல்லாவற்றிற்கும் மேலாக பாதநாட்டிய ஆடல்கள் தலைசிறந்த வனப்புக் கொண்டிருப்பதாக உலகெங்கும் பாராட்டப்படுகின்றன.

இப்படி ஆடலழகு இணையற்றதாயிருப்பினும், பாத நாட்டியம் அத்துடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. அத்துடன் இயற்கையையும் கருத்துக்களையும், மனதில் எழும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி விளக்கும் அபிநயம் என்ற சமிக்ஞை பாஷைச்சிறப்பையும் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இந்தச்சமிக்ஞை பாஷையானது உடலுறுப்பு நிலை நடைகளுடன் அர்த்தம் மிகுந்த கைமுத்திரைகளாலும் முகபாவவேறுபாடுகளாலுமானது. இந்தச்சமிக்

ஞைபாஷை சேர்ந்திருப்பதுதான் பரதநாட்டியத்துக்கு வேறெந்த உலக நடன வகைகளிலுமில்லாததோர் தனிச்சிறப்பையும் பெருமையையும் கொடுக்கிறது.

மலையாளக்கதைகளியிலும் இந்தச் சமிக்ஞைபாஷை அமோகமாய் வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் பலபாகங்களில் இயற்கையைப்பச்சையாய்ப் பிரதிபலிக்கும்படி மிகைப்பட்ட விரிவாயிருக்கும். சிலசமயங்களில் சிறிது கிராமியமாகக்கூட இருக்கும். பரதநாட்டியத்தில், இந்த சமிக்ஞை அம்சம், கூடமாயும், அடக்கமாயும். லாகவமாயும் நாஸூக்காயும் கற்பனையை எழுப்புவதாயுமிருக்கும். இயற்கையை அழகுபடுத்திக் காட்டுவதாயிருக்கும். கதகளியின் அபிநயமும் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை ஒருவாறு பின்பற்றியபோதிலும், அந்த இலக்கணத்திலிருந்து வெகுவாக மாறுபட்டுமிருக்கிறது. பரதநாட்டிய அபிநயம் சாஸ்திரத்தை முற்றிலும் தழுவியிருக்கிறது.

இந்தச்சமிக்ஞை பாஷையான அபிநயமானது பார்ப்போரின் உள்ளங்களில் பலவிதரஸங்களை எழுப்புவதாயிருக்கும். மனிதர்கள் ஒரு காலத்திலோ, சந்தர்ப்பத்திலோ அனுபவிக்கும் மனோநிலைமையே ரஸமாகும். ஒருகவிதையையோ, பாடலையோ, நாட்டியநாடகத்தையோ விளக்கும்போது உண்டாகும் பொதுவான உள்ளக்கிளர்ச்சியே ரஸம் அல்லது சுவையாகும். இந்தரஸம் அல்லது சுவை ஒன்பது வகைப்பட்டதாக நாட்டிய நூலாசிரியர்கள் வகுத்திருக்கிறார்கள். அவை சிருங்காரம், வீரம் காருண்யம், அத்புதம், ஹாஸ்யம், பயம், பீபத்ஸம், ரௌத்ரம் எனப்படும்.

ஸ்ரீராமபிரானைப்பற்றிய பின்வரும் ஒரு சுலோகத்தில் இவைகளின் தன்மை சுருக்கமாக விளக்கப்படிருப்பதை கவனித்துக் கொள்ளலாம்.

“ச்ருங்காரம் க்ஷிதிநந்தினிவிஹாரணே
வீரம் தனுர்பஞ்ஜனே.
காருண்யம் பலிபோஜனே, அத்புதம்
ஸிந்தௌ கிரிஸ்தாபனே.
ஹாஸ்யம் சூர்ப்பனகாமுகே, பய
மகே, பீபத்ஸமன்யாமுகே.
ரௌத்ரம் ராவணமர்தனே, முனி
ஜனே சாந்தம் மஹா: பாதுந:”

அதன் பொருள் : “பூமாதேவியின் புதல்வி (ஸீதை) யுடன் விளையாடும் காதல், வில்லைமுறித்த வீரம், கொடுமையைச்செய்த காக்கைக்குக் காட்டிய கருணை, அணைகட்டுவதற்காகக் கடலில் மலைகளை வீழ்த்தி அடுக்கிய அற்புதம், மூக்கறுந்த சூர்ப்பனகையைப் பார்த்து எற்பட்ட நகைப்பு, பாபத்தைக் கண்டதால் அச்சம், அன்னிய ஸ்திரீயின்முகத்தைப் பார்ப்பதில் அறுவறுப்பு, ராவணனைக்கொல்வதில் கோபாவேசம், ரிஷிகளின் முன் சாந்தம், இவையெல்லாம் பொருந்திய தேஜஸான (ராமன்) நம்மைரக்ஷிப்பாராக.”

இந்த ஒவ்வொரு ரஸமும், சந்தர்ப்பம், காரணம், சேஷ்டை இவைகளைக் குறிக்கும் செய்கைகளாலும், மனோநிலையை விளக்கும் முகவிலாஸமாறுதலாலும் சித்திரித்துக்காட்டுவதால் எற்படும். அத்தகைய சித்திரிப்புத்துணுக்குத்தான் பாவம் எனப்படும். இந்த பாவம், விபாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் அல்லது சஞ்சாரிபாவம் என்ற பிரிவுகளைக் கொண்டது. **விபாவம்** என்பது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று மனதில் தீர்மானிப்பதற்கான காரண சூசனையாகும்.

அனுபாவம் என்பது அதைச்செய்ய வேண்டுமெனத் தீர்மானம் செய்து கொள்வது.

வியபிசாரிபாவம் என்பது அந்தத் தீர்மானத்துக்கு ஆதாரவாயிருந்து அதை வெளிப்படுத்தும் சேஷ்டையாகும்.

இவையெல்லாம் சேர்ந்ததால் எற்படும் பொதுவான மனோநிலைமையை

ஸ்தாயி பாவம் என்பார்கள். உதாரணமாக.

ச்ருங்காரத்துக்கு ஸ்தாயிபாவம் ரதீ அல்லது நாயகன் நாயகிகளின் காதல் கைகூடுவது. விபாவமான காரணம், நாயகன் நாயகிகளாயிருத்தல், அவர்களின் இளைமைப்பருவம், குணம், அலங்காரம், சந்தனம், புஷ்பம், ஸங்கீதம், தென்றல் நிலா, ஒருவரையொருவர் பார்ப்பது முதலியவையாகும். அனுபாவமான தீர்மானம் ஒருவரையொருவர் காதலிப்பது வியபிசாரி பாவமான சேஷ்டைகள், ஆசைப்படுதல், உற்சாகமுறுதல், யோசனையில் ஆழ்தல் முதலியனவாகும். சதிர் பரதநாட்டியத்தில் ச்ருங்காரரஸமே முக்கியமாயிருக்கிறது. மற்றரஸங்களும் அதற்கு ஒருவாறு ஒத்தாசையாயிருந்து அதைப் போஷித்துப் பூர்த்தி செய்வதாயிருக்கும். எனவே ஒரு ரஸத்தைப் பற்றியவிளக்கத்தில் மற்ற ரஸங்களின் சாயையும் தென்படும்.

ஒவ்வொருரஸத்திலும் பலவகைகளுண்டு. உதாரணமாக ச்ருங்காரத்தில் விப்ரலம்பம், ஸம்போகம் என இருவகையுண்டு, நாயிகாநாயகர்கள் பிரிந்திருத்தலால் உண்டாகும் மனோநிலைமை விப்ரலம்பச்ருங்கார மெனப்படும். அவர்கள் கூடுவதாலான மனோநிலைமை சம்போக ச்ருங்காரம் எனப்படும். இந்த இரண்டு வகைகளில் ஒவ்வொன்றுக்கும் பலபிரிவுகளுண்டு.

விப்ரலம்ப ச்ருங்காரத்தில் அயோகம் (ஒருவர் மேல் ஒருவர் ஆசை, கொள்ளுதல்), விரஹம் (சேரமுடியாம விருப்பதால் எற்படும் மனோ நிலைமை) ம[illegible]னம் (ஒருவர் விருப்பத்துக்கு மற்றவர் முரணாக நடப்பது தன்னைவிட்டு வேறொருவரைக்காதலிப்பது இவைகளால் உண்டாகும் மனோ நிலைமை), ப்ரவாஸம் (காதலன் தூரதேசத்துக்குப் போயிருப்பதால் உண்டாகும் ஏக்கம்) சாபம் (அதனாலுண்டாகும் கோபம்) என ஐந்து பிரிவுகளுண்டு. இந்த விப்ரலம்பசிருங்காரத்தை

விளக்குவதற்கு போஜனம் நித்திரை அணியலங்காரம் இவைபோன்றவைகளில் வெறுப்புக் கொள்வது, உடல் இளைப்பது, பெருமூச்சு விடுவது, ஏக்கம் கொள்வது, பார்ப்பவையெல்லாம் நாயகனாகத்தோன்வது, கனவு கண்டு திடுக்கெட்டு எழுவது இவை போன்றவை சேஷ்டைகளாகும்.

ஸம்போக ச்ருங்காரத்தில், ஸம்க்ஷிப்தம் (நாயகனும் நாயகியும் போதிய உபசாரங்களுடன் சேர்ந்திருத்தல்), ஸம்பன்னம் (முதலில் சேர்ந்து பிறகு பிரிந்து மறுபடியும் கூடியிருத்தல் என இரு பிரிவுகளுண்டு. ஆனந்தத்தால் கண்களைவிரித்துக் காட்டுதல், உள்ளம் பூரித்துப் பொங்குதல் பரபரப்பும் பரவசமும் மேலீட்டிருத்தல், சொல்லொணுமகிழ்ச்சியால் மயிர்க் கூச்சலெடுத்தல் முதலியன சேஷ்டைகளாகும்.

நமது பூர்வீககலை நூலாசிரியர்கள் இயற்கையை நுட்பமாய் ஆராய்ச்சிச் செய்து அறிந்து மக்களின் ரஸபா

PACKED ON THE ESTATE THIS FINE HIGH
GRADE NILGIRI TEA COMES TO YOU WITH
ALL GARDEN FRESHNESS.

SPENCER'S RED BAND TEA

Phone: 4138

P. V. R. C. B.

IS THE NAME FOR BUILDERS' HARDWARE AND PLASTIC,

catering the Exquisite Tastes of the Modern builders.

P. V. RATHAKRISHNA CHETTY & BROS.,

MANUFACTURERS & FOUNDERS
45, VENKATACHELLA MUDALY STREET
MADRAS - 3

வங்களை இப்படிவிவரமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்றால் இந்த ரஸபாவங்களை அனுபவித்து விளக்கிக் காட்டும் நாயிகாநாயகர்களின் இயல்பையும் அலசியெடுத்து அவர்களின் இனங்களையும் மாறுபாடுகளையும் விரிவாகக்குறித்திருக்கிறார்கள். ரஸபாவங்களையும் நாயிகாநாயகர்களையும் பற்றிய பாகு பாடுகளையெல்லாம் அறிந்து கொள்வதில் தலைசுற்றும்.

ச்ருங்காரஸத்தில் ஈடுபட்ட நாயிகைகள் முதலில் ஸ்வீயா, பரகீயா ஸாமான்யா என மூன்றுவகையாவார்கள்.

ஸ்வீயா நாயிகை, தான் மணந்த புருஷனையே காதலித்து இன்பமுறுபவள் **பரகீயா** நாயிகை தான்மணந்த புருஷனிருந்தும் அவனறியாமல் பரபுருஷனைக்காதலிப்பவள். **ஸாமான்யா**நாயிகை பணத்துக்காசைகொண்டு கிடைத்த புருஷர்களுக்கெல்லாம் இணங்குபவள்.

ஸ்வீயாவிலேயே முக்தா, மத்யா, பிரகல்பா என மூன்று பிரிவுகளுண்டு **முக்தா**, பருவமடைந்தும் காதல் கேளிகைகளுக்கு இணங்காது நாணம் கொள்பவள். **மத்யா** காதலனுடன் சங்கோசத்தால் இணங்கியும் இணங்காமலும் இருப்பவள். ப்ரகல்பா காதலை நன்கறிந்து அனுபவிப்பவள்.

முக்தாவே, ஞாதயௌவனா (தனக்குப்பருவம் வந்ததை அறிந்தவள்), அஞ்ஞாதயௌவனா (அறியாதவள்) என இருஇனமாகும். மத்யாவில், தீரா (தன்னிடம் சரியாயில்லாத காதலனிடம் குத்தலாக நாஸூக்குடன்பேசுபவள், அதீரா (அவன் மனம்புண்படும்படி கோபமாய் வாதாடுபவள்), தீராதீரா (அவனை கண்டவுடனேயே கண்ணீர்பொழிந்து கொடுமையாய்ப் பேசுபவள்) என மூன்றுவகையுண்டு. பிரகல்பாநாயிகைகளிலும் மேற்குறித்தபடி தீரா, அதீரா, தீரா என்ற மூன்று பிரிவுகளுண்டு. தீரா, நாயகனை அவமதிப்பாள், அதீரா, அவனைபயமுறுத்துவாள், தீராதீரா பயமுறுத்தலோடு வசையும் மொழிவாள்.

மத்யா, ப்ரகல்பா, ஒவ்வொன்றிலும் ஜ்யேஷ்டா (காதலினின் அதிக அன்புக்குப் பாத்திரமானவள் கனிஷ்டா (அப்படியில் லாதவள்) என இருபாகுபாடுகள் உண்டு. இப்படிஸ்வீயா நாயிகையிலேயே சுமார் 14 பேதங்களுண்டு.

பாகீயா நாயிகைகள், கன்யகா, பரோடா, என இருவகைப்படுவார். **கன்யகா**. காதலி பருவமடைந்து பெற்றோர் சம்ரக்ஷணையிலிருந்தபோதிலும், தான்விரும்பும் காதலனிடம் நாணத்துடன் தனது காதலை அறிவிப்பவள், **பரோடா**, மணந்தபுருஷனுடன் அனுசாரணையாய் வாழ்த்தாலும், பவுரஷியாமல் அன்னிய புருஷனைக் காதலிப்பவள்.

இப்படி ரஸபாவங்களை அனுபவிக்கும் நாயிகைகள், ஸ்வாதீனபதிகா, வாஸகஸஜ்ஜிகா,விரஹோத்கண்டிதா, விப்ரலப்தா, கண்டிதா, கலகாந்தரிதா ப்ரோக்ஷிதபர்திருகா, அபிஸாரிகா, அன்னியஸம்போக துக்கிதா எனவும் அழைக்கப்படுவார்கள். மேற்குறித்த பாகுபாடுகள் பலவிருந்தும், மொத்தத்தில் நாயிகைகளை யெல்லாம் உத்தமா மத்யமா, அதமா என மூன்று வகையாகவும் பிரிக்கலாம். உத்தம நாயிகை தனது நாயகனிடத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் கற்புக்கரசியாய் அன்பு செலுத்துபவள். மத்யமநாயிகை புருஷன் அப்பப்போது கொள்ளும் குணத்துக்குத்தக்கவாறு நேசிப்பவள். அதம நாயிகை நாயகன் சரியாயிருந்தாலும் தான்முரண்பட்டுநடப்பதும், விதரணையில்லாது காதலிப்பது மாயிருப்பவள்.

இந்த நாயிகைகளின் சிருங்காரரஸ அனுபவத்துக்கு உதவியாயிருக்கும் ஸ்திரீவர்க்கங்கள், தூதீ, தாஸீ, ஸகீ, சேடீ, தாத்ரேயி, ப்ராதிவேசினீ, லிங்கினீ, சில்பினீ எனப்பலவகைப் படுவார்கள்.

காதலரான நாயகர்கள், ஸ்வீயா நாயகிக்கு உரித்த **பதி** என்னும், பர

கீயா நாயிகைக்கு ஏற்ற உபபதி என்றும், சாமான்யாவுக்குகந்த வைசிகள் என்றும் மூன்று வகைப்படுவார்கள் ஸீதையும் ராமனும், கோபிகையும் கிருஷ்ணனும், சாதாரண வேசியும் விடனும், மேற்குறித்த மூன்று வகுப்பினருக்கும் முறையே உதாரணமாவார்கள். நாயிகைகளில் இருப்பது போலவே நாயகர்களிலும், அனுகூலன், தக்ஷிணன், த்ருஷ்டன்; சடன் என்ற பல பிரிவுகளுண்டு.

இத்தனை வகையான நாயிகா-நாயகர்கள் பலவிதமான ரஸபாவங்களை அனுபவித்துக் காட்டுவதற்கு உதவியாக, கருத்து நிறைந்த கைமுத்திரைகளையும், முகபாவங்களையும் பெரியோர்கள் வகுத்து விவரித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நன்கு கற்று அறிந்து விளக்கும் அபிநயம் தான் சம்பிரதாயச் சிறப்புற்ற கலையாகும். அதற்கு அறிவிற்சிறந்த ஆசிரியரிடம் போதிய பயிற்சியும், சாஸ்திர ஞானமும், தன் ஆராய்ச்சியும் பழுத்த அனுபவமும் வேண்டும். இவையில்லாது அபிநயம் இயற்கையாகவே தனியே வந்து விடும் என்று இக்காலநடிகைகளில் பலர் நினைப்பது மனப்பால் குடிப்பதாகும். இப்படி எண்ணிறந்த நாயிகா-நாயக பேதங்களையும், ரஸபாவமாறுபாடுகளையும் நுட்பங்களையும் சாங்கோபாங்கமாய் விளக்கும் முறையிலேயே க்ஷேத்ரய்யர் ஏராளமானபதங்களைப் பொழிந்திருக்கின்றார். பாதநாட்டியத்தில் அபிநயச்சிறப் படைய வேண்டுவதற்கு அப்பதங்களை நன்குகற்றுகையாளுவது அவசியமாகும்.

—O—

மாலா

கலை, இலக்கிய மாசிகை

O

தனிப் பிரதி ரூ. 0 6 0

வருடச் சந்தா ரூ. 4 8 0

O

மாலா

தேனாம்பேட்டை, சென்னை-18



அடுத்த பக்கம் உள்ள ஹனுமான் சித்திரம் வரைந்தவர் ஸ்ரீ.டி.வி. ரங்கசாமி



ஓவியக்கலை பலவித ரூபத்தில் முன்னேறி வருகிறது. அவ்வித முன்னேற்றத்தில் ஒரு படத்தை ஒரே கோட்டில் ஆரம்பித்து முடிப்பதென்பதும் ஒருவகை. மேலே இருக்கும் ஹனுமானை ஒரே கோட்டில் வரைந்து, வாசகர்களுக்கு மகிழ்ச்சியளித்திருக்கிறார் ஓவிய அன்பர் **T. V. ரங்கசாமி.** ஹனுமானது ராமபக்தியை எல்லோருக்கும் நிரூபிப்பதுபோல் அமைந்திருக்கிறது இப்படம்.



போட்டோ : சந்தாமியன்

சிற்பமும்

இந்த போட்டோ படம் முதற்கொண்டு அடுத்து வரும் 15-போட்டோ படங்களும் கரூர் சந்தாமியன் அவர்களால் எடுக்கப்பட்டவை.

சிறுமியும்



சண்டையும்

பிழைக்கும் வழி (கட்டை வெட்டி)



கொடும்பசியைப் போக்கிக்கொள்ள இவ்வீரன் இக்கொடிய மரத்தினைக் கோடாரிகொண்டு கிழிக்கிறான்போலும்.

பிழைக்கும் வழி (தட்டி முடைதல்)



தரையின்மீது தட்டி முடைந்தாலும் "தன் கைகளே தனக்குதவி" என்பதைக் காட்டுகிறான்.

Sensational

MOTORICK

THE ALL PURPOSE 3 WHEELER

BUILT ON ROBUST EX-ARMY & RECONDITIONED MOTOR CYCLES

FOUR STROKE ENGINE-NO BREAK DOWNS

PRICE
Rs. 3950/-
Ex-MADRAS



STANDARD
5 SEATER

IDEAL AS LIGHT TAXIS-Annas four per mile.

TO SEAT FOUR PASSENGERS. VERY ECONOMICAL

PRICE
Rs. 3650/-
Ex-MADRAS



LIGHT
DELIVERY
VAN

MOTORICK INDUSTRIES, MADRAS - 17

Telephone: 86888

For Terms Apply to:

RAJAGOPAL MOTOR WORKS

3/186, MOUNT ROAD, MADRAS - 2

Exquisite Jewellery

சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய பிரத்யேகமான மாதிரிகளுக்கும் உயர்தரத்திற்கும் உறுதி கூறுகிறோம். பதிக்கப்பட்ட வைரங்களின் அழகை விளங்கச் செய்யும் நேர்த்தியான முறையில் நகைகள் அமைக்கப்படுகின்றன. நீங்கள் வைரங்களை வாங்கும்போது குறிப்பாக நம்பிக்கைக்குப் பாத்திரமான அநுபவமுள்ள நகைவியாபாரியின் ஆலோசனையைப் பெற வேண்டும். உம்மிடியாரின் நகைகளை வாங்குகையில் உள்ளுறுப்பான மதிப்பைப் பெற்றுள்ள இனங்களைப் பெறுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.



VUMMIDIAR

VUMMIDI RAMIAH CHETTY, GURUSWAMY CHETTY & CO.,

JEWELLERS

23-25, CHINA BAZAR ROAD, MADRAS.

சங்கீதம் வளர்த்த கலாநிதிகள்

த.ரா.ரா.

சங்கீதக்கலையை லலித கலைகளிலெல்லாம் லலித கலை என்று வர்ணித்தார் ஓர் ஆங்கில இலக்கிய கர்த்தா. அதிலும் கர்ணாடக சங்கீதத்தின் சிறப்பைப்பற்றி எவ்வளவுவேண்டுமானாலும் எழுதலாம். பலவிதராகபேதங்கள் லய விளக்கங்கள் கொண்டு மகத்தான கலையாய்த் திகழ்ந்து கொண்டு வருகிறது இச்சங்கீதம். வேங்கடமகி போன்ற மேதைகள் இக்கலை பற்றி அரிய நூல்களை இயற்றினர். இது போல் பலரால் பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

இக்கர்ணாடகசங்கீதம் வாழையடி வாழையாய் பொலிவுடன் விளங்கி வருவதற்குக் காரணம் அவ்வப்போது தோன்றி மறைந்த சாஹித்யகர்த்தர்களதும், சங்கீத விற்பன்னர்களதுமான அரிய தொண்டேயாகும். 18,19 வது நூற்றாண்டுகள் சங்கீதக் கலையின் பொற்காலமாகும். இந்நூற்றாண்டுகளிலே சிறந்து விளங்கிய சங்கீத திருமூர்த்திகள் தான் இன்று கர்ணாடக சங்கீதம் மங்காது வாழ்ந்துவர ஆக்கம் தேடினர். மேற்கூறிய திருமூர்த்திகளினது காலத்திற்குப் பின்னர் பல மேதைகள் தோன்றி கலை வளர்த்தனர். அவர்களது காலத்திற்குப் பின்னர், பல பெரிய விற்பன்னர்கள் தோன்றினர். அவர் பலர் ஜீவியவந்தர்களாக இன்றும் சிறப்புடன் விளங்குகின்றனர்.

சங்கீத திருமூர்த்திகளில் அதிக ஜனங்களால் அறியப் பட்டமஹான் தியாகய்யராவர். இவரது ராமபக்திக்குச் சாதனமாயமைந்தது சங்கீதக் கலை.

பல ராகங்களில் பலவித மெட்டுக்களில் எண்ணற்றகிருதிகளை வழங்கினார். சங்கதி அம்சம் இவரிடம் சிறப்புப் பெற்றது. பாவபூர்வமான இவரது கிருதிகள் பாடப்பாட, கேட்க கேட்கத் தெவிட்டாது. பக்தி பாவத்திலே பல விதமுறைகளில் வழிபட்ட கிருதிகளோடு, சங்கீதத்தின் மேன்மை பற்றியும், உலக மக்களுக்கு உபதேச முறையிலும் பல கிருதிகள் பாடியருளியவர் இவர். திருவையாற்றிலே இவரது சாமதியில் ஆண்டு தோறும் ஆராதனை விழா நடைபெறுகிறது. தியாகய்யர் கிருதிகளே கச்சேரிகளில் பெரும்பான்மையகப்பாடப்படுவதிலிருந்து இவரது பெருமை விளங்கும்.



தியாகய்யர்

தியாகய்யர் சங்கீத உலகில் ஒரு ஜோதி.

முத்துஸ்வாமி தீக்ஷிதர்

சங்கீத திரு மூர்த்திகளில் ஒருவர் முத்துஸ்வாமி தீக்ஷிதர். வடமொழியிலே அபாரபாண்டித்யம் பெற்றவர். சங்கீத விற்பன்னரின் குமாரனாய்ப் பிறந்தவர். பால்யத்திலேயே சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். குருகுல வாசம் செய்து பயின்ற பாஷா ஞானம், கலாஞானம் இவரது சாஹித்தியங்களுக்கு பெரிதும் உதவின. முருகனால் அருள்பாலிக்கப்பட்டு 'குருகுஹ' என்ற முத்திரையுடன் கீர்த்தனங்களைப் பொழிந்தார். வேத ரகஸ்யங்கள், மந்த்ர சாஸ்திரம் இவை இவரது கிருதிகளின் உள்ளுறை. பலகிருதிகள் ஸ்தலபுராணங்களாக விளங்குகின்றன. இவரதுகம்பீரமான, சவுக்ககால நடைக்கிருதிகளைப் பயிலவும்பாடவும் அதிக பிரயாசை வேண்டும். இவர் தியாகய்யர் காலத்தவர்.

O

ஸ்யாமா சாஸ்திரிகள்

அன்னை காமாக்ஷி தேவி மீது அபாரபக்தி கொண்டவர். சங்கீத மேதை. திருமூர்த்திகளுள் ஒருவர். ராக பாவச் சிறப்போடு லயச்சிறப்பிற்கும் பெயர் போன கிருதிகளை வழங்கிய பெரியார். தெலுங்கில் மட்டுமல்லாது தமிழிலும் சாஹித்யம் அருளியவர். ஸ்வரஜதிகளும் இயற்றியுள்ளார். கிருதிகளில் தனயன்தாயுடன் மன்றாடும் பாவம் கன அற்புதம். இவர் வாழ்விலே நிம்மதி கண்டவர். ஸ்யாமகிருஷ்ண என்ற முத்திரை இவரது கிருதிகளில் அமையப் பெற்றுள்ளது. இவர் தியாகய்யர், தீக்ஷிதர் காலத்தவரே.

இவர் தஞ்சையில் கோயில் கொண்டுள்ள காமாக்ஷி தேவி மீதே பெரும்பாலான கிருதிகளைப் பாடியுள்ளார்.



மஹாவைத்தினாதய்யர்

சங்கீத உலகில் தலை சிறந்து விளங்கிய சங்கீத மேதை, மகா வைத்தினாதய்யர். சங்கீதக் கலையில் எவ்வளவு பற்றிருந்ததோ அவ்வளவு பற்று கடவுள் தொண்டிலும் இவருக்கு இருந்தது. இளமைப் பருவத்திலேயே வித்தையில் தேர்ச்சி பெற்றவர் இவர். புதுக்கோட்டை அரசர், சேதுபதி முதலியவர்களது பாராட்டும், ஆதரவும் பெற்றவர். இவரது திறமை காரணமாகவே 'மஹா' என்ற பட்டப் பெயர் திருவாவடுதுறை ஆதினகர்த்தாரால் அளிக்கப்பட்டவர். இவர் வாய்ப்பாட்டுமட்டுமல்லாது சிவ கதைகள் செய்வதிலும் சிறந்து விளங்கினார். வடமொழி, தமிழ் இரண்டிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்.

இவர் 72 மேளகர்த்தாராக மாலிகையைச் சரிப்படுத்தி அரிய சேவை செய்தவர்.

உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யர்

தியாகப் பிரம்மத்தின் சிஷ்யர்களான உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தரபாகவதரின் சிஷ்யர். பின்னர் மஹாவைத்தினாதய்யரிடமும் சிக்ஷை பயிலும் பேறு பெற்றவர். நல்ல ஆஸ்திகர். கலையில் பிரமாதமான ஞானம் வாய்க்கப் பெற்ற இவர் திருவாவடுதுறை ஆதினகர்த்தாரால் ஆதரிக்கப் பெற்றவர். பல பிரபல முன்னணி வித்வான்கள் இவரிடம் பயின்றிருக்கின்றனர்.



பட்டணம் சுப்பிரமண்ய அய்யர்

பட்டணம் சுப்பிரமண்ய அய்யர் கர்னாடக சங்கீதத்திற்கு ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. தியாகப் பிரம்மத்தின் நேர் சிஷ்யரான மானம்பூச்சாவடி வெங்கட சுப்பய்யரின் சிஷ்யரான இவர் ஓர் சங்கீத மேதை. இவரது சாஹித்யங்களே இதற்கு அத்தாட்சி. 'வெங்கடேச' முத்திரை இவரது. சங்கீத சாஸ்திர திலகரும் ஆஸ்திக சிகாமணியுமான மஹாவைத்தினாதய்யரின் சம காலத்தவர். இன்னாரது சிஷ்யர்களில் பிரசித்தி பெற்றவர் மூவர், பூச்சி ஸ்ரீநிவாச அய்யங்கார், டைகர் வரதாச்சாரியார், மைசூர் வாஸுதேவாச்சாரியராவர்.



○

டைகர் வரதாச்சாரியார்

சங்கீத புலியாக விளங்கினார் வரதாச்சாரியார். பெயருக்கு முன் உள்ள ஆங்கில அடைமொழி அதற்காகவே சேர்க்கப்பட்டது. இவரது குருவோ பிரபல வித்வான், வாகேயகாரர் பட்டணம் சுப்ரமண்ய அய்யர். ஆகவே பழுத்தஞானம் பெற்றார் இவர். ராக ஆலாபனையிலும் நிரவலிலும் இவரது தனி பாணி அபாரமானது. சென்னைச் சர்வகலாகலை சங்கீதத் துறை முதல் தலைவர். அண்ணாமலை சர்வகலாசாலையில் அதே பதவி வகித்தவர். இவரிடம் பயின்று பயன் பெற்றவர்கள் அநேகர்.

பூச்சி அய்யங்கார்

பட்டணம் சுப்பிரமண்ய அய்யரின் சிஷ்யராய் விளங்கி அவருக்குப் பின் பிரமாதமான பெயர் விளங்க வித்தையில் சிறந்து விளங்கியவர், ராமநாதபுரம் ஸ்ரீநிவாசய்யங்கார். இவருடைய சாரீர சம்பத்து காரணமாய் இவருக்கு பூச்சி என்ற அடைமொழி கிடைத்தது போலும். இவரது சாஹித்யங்கள் மிக்க எழில் வாய்ந்தவை. ஸ்ரீநிவாச முத்திரை இவரது. இவரது சிஷ்யர்களில் பிரசித்தி பெற்று விளங்கும் அரியக்குடி ராமாநுஜமய்யங்காரை அறியாதவர் இல்லை.

O

அரியக்குடி ராமாநுஜமய்யங்கார்

முப்பது வருடங்களுக்கு மேலாக புகழுடன் விளங்கி வருகிறார். சுகமான சாரீரம், குறைந்த சுருதியில் பாடினாலும் கம்பீரமான நாதம், உயரிய பாணி, அபார ஞானம், முதிர்ந்த அனுபவம் இவை கொண்டு புகழ் பெற்று விளங்குபவர் இவர். பாடாந்திரம் அமோகம். கச்சேரிகளை அமைத்துக் கொள்வதில் மகா நிபுணர். பாடல்களுக்கு மெட்டுகள் போட்டு புழக்கத்திற்குக் கொண்டு வருவதில் தலை சிறந்து விளங்குகிறார் இவர். கர்னாடக சங்கீதத்தில் வாய் பாட்டிற்காக ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட முதல் வித்வான். சங்கீத ரத்னாகர என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர்.

சபேசய்யர்

சபேசய்யர் சங்கீத உலகில் பெரிய புள்ளியாய் விளங்கியவர். மஹா வைத்தியனுதய்யரின் சிஷ்யர்களுள் ஒருவர். மஹாவைத்தியனுதய்யரிடம் பயில்வதற்கு முன் பல வித்வன்னர்களிடம் பயின்றவர். பெரிய சங்கீத பரம்பரையில் வந்தவர். இவரது தகப்பனர் வயலின் சாம்பசிவய்யர் மஹா வைத்தியனுதய்யருக்கு வயலின் வாசித்தவர். ஆகவே இவர் அபாரமான ஞானம் பெற்று விளங்கியதில் என்ன ஆச்சர்யம். இவர் அண்ணமலை சர்வ கலாசாலையிலே சங்கீதப் பிரிவின் முதல் தலைவர். அண்ணமலை சர்வ கலாசாலையின் சங்கீத பிரிவு சிறப்புறுவதற்கு இவர் செய்த தொண்டு மகத்தானது. இவரிடம் பயின்ற பலர் தற்காலம் பிரகாசிக்கின்றனர். முசிரி சுப்ரமண்ய அய்யர் இவரிடம் பயின்றவரே.

o

முசிரி சுப்ரமண்ய அய்யர்



நல்ல சன்னமான சாரீரம், குரலைத் தாழ்த்தியும் உயர்த்தியும் அங்கங்கு பாவரஸத்தோடு பாட உதவும் சாரீரம் நல்ல ஞானம், கச்சிதமான கச்சேரி, "பிளான்" ஆக இவரது பெயர் வெகு சீக்கிரத்தில் பிரசித்தமடைந்தது. பாடல்களை உணர்ச்சி தோன்றப் பாடுவதில் மன்னன். ரஸமறிந்து பொருளறிந்து பாடுபவர். இவர் கர்னுடக சங்கீதக்கல்லூரியின் பிரின்ஸ்பால் தியாகப் பிரம்ம மஹோத்ஸவ சபைக் காரியதரிசி.

ஹரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர்

சுந்தரமான ரூபம், இனிமையான சாரீரம், சிறந்த வித்வத்துள்ள இடத்திலிருந்து இசைப் பயிற்சி, இவை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற முத்தய்யா பாகவதர் சங்கீதக் கலை, ஹரி கதைத் துறை இரண்டிற்கும் செய்துள்ள தொண்டு மகத்தானது. முதலில் பாடகராய் இருந்த இவர் பின்னர் ஹரி கதையில் சிறந்து விளங்கினர். மைசூர் மஹாராஜாவால் பெரிதும் கௌரவிக்கப்பட்டவர். காயக சிகாமணி என்ற பிருது அளிக்கப்பெற்றவர். திருவநந்தபுர சமஸ்தானத்தில் சங்கீதக் கலைக்கு அரும் தொண்டு புரிந்தவர்.

○



மதுரை மணி அய்யர்

நல்ல உழைப்பு, ரஞ்சிதமான கற்பனை சக்தி, ஸாகரம் போன்ற அபார ஸ்வர ஞானம் இவைகள் இவரது சங்கீதத்தில் நாம் காணும் விசேஷ அம்சங்கள். இவர் கற்பனைஸ்வரம்பாடி வருகையில் விஸ்தாரமாகப் பாடுகிறார். கேட்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை. சில அபூர்வராகங்களை விஸ்தாரமாக ஆலாபனம் செய்வதோடு அவ்விராகங்களில் உள்ள கிருதிகளுக்கு விஸ்தாரமாக ஸ்வரம்பாடுகையில் இவரது திறன் நன்கு விளங்குகிறது. இவர் கானகலாதரார் என்ற பிருது பெற்றவர். இவர் பிரபல சங்கீதக் குடும்பத்தில் பிறந்தவர்.

மஹாராஜபுரம் விஸ்வனுதய்யர்



சங்கீத உலகில் சிறந்த கற்பனுசக்தியும் சொந்தமான தன்னறிவு வழியும் நிறைந்த சங்கீதத்திற்கு இருப்பிடம் மஹாராஜபுரம் விஸ்வனுதய்யர். ஒரே ராக ஆலாபனத்தை அடிக்கடி கேட்டாலும் ஒவ்வொரு தரமும் புதிய அம்சங்களை அனுபவிக்கலாம் இவரிடம். அபாரமான பாடாந்திரம். கம்பீரமானநடை. ஜாவளிகள், ஹிந்துஸ்தானி, பதங்கள் இவைகள் இவரிடம் ஏராளமாகக் கேட்கலாம். சங்கீத பூபதி என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பெற்றவர். கம்பீரமான தோற்றம் உடையவர்.

○

செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர்

பாவபூர்வமாகப்பாடும் வித்வான்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களுள் நம் செம்மக்குடி ஸ்ரீநிவாசய்யர் ஒருவர். இவர் தன்னை மறந்து பாடும் அடியார்களில் ஒருவராய் விளங்குகிருர். ராக ஆலாபனங்களில் மனோதர்மம் பூர்ணமாய் அமைகிறது. உழைத்துப் பாடுபவர். பிரபல வாகேயகாரர்களது கிருதிகளோடு சதாசிவபிரும்மேந்திரர், ஸ்வாதிதிருநாள் போன்றவர்கள் கிருதிகளை அதிகம் பாடி வழி காட்டியவர். பாரதி பாடங்களை சுவையுடன் பாபு அப்பாடல்களின் எழிலை அனுபவித்தறியச் செய்துள்ளார். திருவநந்தபுரம் ஆஸ்தான வித்வான். ஸ்வாதித்திருநாள் சங்கிதக் கல்லூரி தலைவர். சமீபத்தில் ஜனுதிபதியினல் கௌரவிக்கப்பட்டார்.

செம்பை வைத்திநாத பாகவதர்



சாரீர சம்பத்து பூர்ணமாயமைத்துள்ள வித்வான். வெங்கலத்வனி போன்று கணீரென்று இருக்கும் இவரது சாரீரம். இவரது ராக ஆலாபனைகள் விரிவானவை. ஆங்காங்கே வாணவேடிக்கை சஞ்சாரங்களும் உண்டு கொஞ்சமேனும் பிரயாசைப்படாமல் மேல்பிடிகள் அழகாய் அமையும். நிரவல் செய்வதிலும், ஸ்வரம் பாடுவதிலும் நல்ல திறமையுண்டு. அங்கங்கு ஜால வித்தைகளும் உண்டு. நீண்ட நேரம் சலிப்பில்லாமல் பாடுவார்.

○



ஜி. என். பாலசுப்ரமண்யம்

நல்ல சாரீர சம்பத்துப் பெற்றுள்ளவர். அநாயஸமாக சஞ்சரிக்க உதவுகிறது இவரது சாரீரம். துரித காலத்தில் இவர் பாடுகையில் பிரமிக்க வேண்டியுள்ளது. அபூர்வ ராகங்களைப் பாடி ரஸிகர்களை மகிழ்விக்கிறார். புதிய பாடல்களை அமோகமாகப் பாடுவார் இவர். கீர்த்தனங்களில் சங்கதி போடுகையிலும் ஸ்வரம் பாடும்போதும் இவரது அகார ஸாதக பலனைக் கண்டு வியக்க வேண்டியுள்ளது. சில்லரை உருப்படிகள் இவரிடத்தில் தனி சோபை பெறுகின்றன. இவர் ஓர் ஹானர்ஸ் பட்டதாரி.



தியாகய்யரின் நேர் சிஷ்யரான தில்லைஸ்தானம் ராம ஐயங்காரின் உறவினரான டாக்டர் ஸ்ரீநிவாசராகவன் அவர்கள் சிறந்த சங்கீத மேதை, பல அபூர்வக் கிருதிகள் பாடமுண்டு. அவர் சிறந்த பக்திமான். அவரது குமாரர் ஸ்ரீ எஸ். பார்த்தசாரதியும் அவர்மனைவியான ரங்கநாயகியும் கலைச் சேவை புரிகிறார்கள். படத்தில் டாக்டர், அவர் மனைவி, பார்த்தசாரதி தம்பதிகள்.

இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரம் உலகிலே ஒரு அற்புத நகரம். இந் நகரமாந்தர்களுக்கு தினம் தெப்போற்சவம் தான். நகரில் ஜலத்தால் சூழப்பட்டுள்ள மிதக்கும் வீடுகளை படத்தில் காண்கிறோம்.

அல்லல் பட்டவர்கள் முடிவில் சுகம் அடைவது, வாழ்க்கையில் ஏற்படும் ஓர் இயற்கை நியதி தான்.

புதையலைக் கண்டவர்கள் போல் எல்லோரும் கேசவனைச் சூழ்ந்து கொண்டு விசாரிக்கத் தொடங்கினார்கள். "நீ இப்பொழுது எங்கிருந்து வருகிறாய்? இரவு எங்கே போயிருந்தாய்? மாளவிகாவை எங்காவது பார்த்தாயா?" என்றல்லாம் கேள்விகளை அடுக்கினார்கள். மாளவிகா காணப்படவில்லை என்ற செய்தியைக் கேட்டுக் கேசவன் திடுக்கிட்டுப் போய்விடவில்லை. ஏனென்றால் மாளவிகா எங்கே இருக்கிறாள் என்பது கேசவனுக்குத் தெரியும். அத்துடன் புதிதாகச் சில உண்மைகளையும் அவன் உள்ளம் அறிந்திருந்தது. எனவே உடம்பிலோ, உள்ளத்திலோ சிறிதும் பதற்றமின்றிச் சோபாவிலே உட்கார்ந்து கொண்டு வெகு நிதானமாய் செய்திகளைச் சொல்ல ஆரம்பித்தான். அவன் மனத்தில் ஆயாசம் நிரம்பியிருந்தது. அது உடலிலும் பரவியிருந்தது; பேச்சிலும் வெளிப்பட்டது. மெல்லிய தொனியில் தயங்கித் தயங்கிச் செய்திகளைச் சொன்னான்.

முன்னாள் மாலையில் மாளவிகாவை அவன் கடற்கரையில் சந்தித்தான்.

மாளவிகா

எல்லார்வி

(பூர்வ கதை)

விரூபாட்சிபுரத்திலே பொருளும் பெயரும் மிக்கு வாழ்ந்து மறைந்தார் வேதாந்த பாகவதர். அவர் மறைவிற்குப்பின் அவர் மனைவியும் பெண் மாளவிகாவும் வீடுவாசலற்று உண்ண உணவின்றி, உடுக்க சரியான உடையின்றித் தவிக்கின்றனர். அவ்வூர் பெரிய தனிகர் ஒருவர் வீட்டில் தாயும் மகளும் வேலைக்கமர்கின்றனர். தனிகாது மகள் அலமேலு மாளவிசாவிடம் தனி அன்பு காட்டுகிறாள். அலமேலுவிற்கு மண ஏற்பாடுகள் நடக்கின்றன. அவளைப் பார்க்க சுந்தரராஜன் என்பவன் வருகிறான். அவன் மாளவிகாவைக் கண்டு மனம் ஈடுபடுகிறான். மாளவிகாவிற்கும் அவனிடத்தில் பற்றுதல் ஏற்படுகிறது. மாளவிகாமீது நாட்டம்கொண்ட தனிகரது மகன் பத்மநாபனுக்கு இது தெரிந்துவிடுகிறது. சுந்தரராஜன் அலமேலுவை ஏற்கச் சம்மதியாததைக் கண்டு தன் பெற்றோர்களைத் தூண்டிவிடுகிறான் பத்மநாபன். மாளவிகாவும் அவள் தாயும் தனிகர் வீட்டைவிட்டு வெளியேறுகின்றனர். பாகவதரின் ஒன்றுவிட்ட மைத்துனன் நடேசன் ஆதரவில் இருந்து வருகின்றனர். தாய் இறக்க மாளவிகா நடேசனின் சூழ்ச்சிக்குத் தப்பி ஓடும் ரயிலில் ஏறி விமலா என்ற பெண்ணைச் சந்திக்கிறாள். அவளுடன் சென்னை சென்று அவளாலும் அவள் குடும்பத்தாராலும் ஆதரிக்கப்படுகிறாள். அங்கு பத்மநாபன் தன் தங்கை அலலேலுவிற்கு விமலாவின் சகோதரன் கேசவனைப் பேச வருகிறான். மாளவிகா கலவரமடைகிறாள். விமலாவின் வீட்டிலே செல்வமாக வாழ ஆரம்பிக்கிறாள் மாளவிகா. எல்லோரிடமும் சகஜமாகப் பழகுகிறாள். ஆனால் கேசவன் மாளவிகா ஒருவரோடொருவர் சகஜமாய்ப் பழகாதது கண்டு விட்டிலுள்ளோர் இருவரையும் ஜோடி சேர்த்துப் பார்க்கின்றனர். ஒரு தினம் பத்மநாபன் இருவரையும் அருகருகே பார்த்துவிடுகிறான். அவன் திகைப்புறுகிறான். அவன் அலமேலு கேசவன் சம்பந்தம்பற்றிப் பேசி கேசவனை பெண் பார்த்து வர ஏற்பாடுகள் செய்கிறான். இந்நிலையில் சுந்தரராஜன் விமலாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றைப் பார்த்த மாளவிகா திகைப்புறுகிறாள். அவளைச் சந்தேகப் பேய் பிடித்துக்கொள்கிறது. மனதில் பலபல எண்ணியவண்ணம் கடற்கரை வழியே போகிறாள். தூரத்திலே மணலிலே சுந்தரராஜனும் விமலாவும் அருகருகே அமர்ந்து பேசுவதை கண்டுவிடுகிறாள். மனம் வெதும்புகிறாள். அச்சமயம் பத்பநாபன் காரில் வந்து அவளை பலவந்தமாக ஏற்றிக்கொண்டு செல்கிறான். சிறிது நேரத்தில் பஸ்ஸில் எதிர்த்திசையில் சென்ற சுந்தரராஜன் இதைக் கண்டு பஸ்ஸைவிட்டிறங்கி தற்செயலாய் அங்கு வந்த நண்பன் வாசுகாரில் பத்மநாபனை பின்பற்றுகிறான், ஒரு தெருவில் பத்பநாபனது கார் ஒரு லாரிமீது மோதி விபத்து ஏற்படுகிறது. மாளவிகா பத்மநாபன் இருவருக்கும் நல்ல அடி, இருவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர், இதற்கிடையில் கேசவன், மாளவிகா இருவரும் வெளியே சென்றவர்கள் வெகுநேரம் ஆகியும் வீடு திரும்பாதது கண்டு விமலா வீட்டில் கலவரம் நிலவுகிறது. மறுநாள் அதிகாலையில் கேசவன் வீடு வந்து சேருகிறான்.

எந்த நிலையிலே சந்தித்தான்? பத்மநாபன் அவளைக் காரில் ஏற்றிக்கொண்டு கிளம்பினபோது தொலைவிலிருந்து பார்த்தான். இமைப் பொழுதில் கார் ஓடிப்போய்விட்டது. அடுத்த கணத்தில் எதிரே வந்துகொண்டிருந்த பஸ்ஸிலிருந்து சுந்தரராஜன் இறங்குவதையும் பத்மநாபனின் கார் சென்ற திசையில் தலைதெறிக்க ஓடுவதையுங் கண்டான். ஆனால் அப்போது அவனுக்கு, மாளவிகாவுக்கும் சுந்தரராஜனுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியாது. எனினும் சுந்தரராஜனைப் போலவே யோசனையின்றி வேகமாக ஓடிவந்து கொண்டிருந்த அவனுக்கு, பஸ்ஸிலிருந்து இறங்கிய சுந்தரராஜனும் வேகமாக ஓடுவதற்கு மாளவிகா விஷயந்தவிர வேறு அவசியம் ஏதும் இராது என்று மட்டும் தோன்றிற்று. கூப்பிடு தூரத்தில் முன்னும் பின்னுமாக அவர்கள், ஒருவரை அறியாது ஒருவர் ஒரே விஷயத்தை முன்னிட்டு ஓடிக்கொண்டிருக்கையில் பின்னாலிருந்து வந்த வாசுவின் காரில் சுந்தரராஜன் ஏறிக்கொண்டான். கார் பறந்தது. கேசவன் களைத்து நின்றான்

சில நிமிஷங்கள் சென்றன. அவ்வழியே ஆட்டோரிக்ஷா ஒன்று வந்தது. கேசவன் அதில் பிரயாணமானான். தொலைதூரத்தில் வாசுவின் கார் மட்டும் தெரிந்தது; பத்மநாபனின் கார் தெரியவில்லை. இருப்பினும் சபலத்தினால் ஆட்டோ ரிக்ஷாகாரனை ஊக்கினான்.

வாசுவின் கார் தொலைவில் ஒரு திருப்பத்தில் திரும்புவதைக் கண்டதும் கேசவனுக்கு நிராசை ஏற்பட்டுவிட்டது. அதற்கேற்றாற் போல ஆட்டோரிக்ஷாவிலும் கோளாறு ஏற்பட்டு நின்றுவிட்டது. அதைச் சீர் செய்து கொண்டு புறப்பட்டுச்சென்று குறிப்பிட்ட திருப்பத்தில் திரும்பிச் சென்றபோது அங்கே சிறு கூட்டமும் லாரியும் பத்மநாபனின் உடைந்த காருந்தான் பார்க்கக் கிடைத்தன. விசாரித்ததில் ஓரளவு விவரங்கிடைத்தது. கேசவன் திகைத்தான். கடைசியில் ஜனரல் ஆஸ்பத்திரிக்குப் போவதெனத் தீர்மானித்தான். மாளவிகாவுக்கு அதிக அடி இல்லை என்று அங்கிருந்தோர் கூறக் கேட்டதில் ஓர் ஆறுதல்.

சுந்தரராஜன் வசித்த அறை இருந்த வீடு ஆஸ்பத்திரிக்குப் போகிற வழியிலேதான் இருந்தது. அங்கே போனால் ஏதாவது தகவல் கிடைக்குமோ என்கிற குருட்டுச் சபலத்தால் வண்டியினின்றும் இறங்கி அந்த வீட்டின் மாடிப் படிகளில் ஏறி மேலே சென்றான். அறையைச் சமீபித்த போது மாளவிகாவின் குரல் கணீரென்று கேட்டது. சற்று நின்று உற்றுக்கேட்டான்.

மாளவிகா—சுந்தரராஜன் சம்பாஷணை கேசவன் கனவிலும் எதிர்பாராததாக இருந்தது. நீண்டநாள் கூடிவாழ்ந்த தம்பதிகளின் உரையாடல் போன்று இருந்தது. காலத்திலிருந்து பூமிநழுவிச் செல்வது போன்ற உணர்ச்சியோடு சுவரில் சாய்ந்தான் கேசவன்.

தற்செயலாக வெளியே வந்த சுந்தரராஜன் கேசவனைப் பார்த்து விட்டான். "ஹலோ!" என்று ஓடிவந்து கேசவனின் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். அறையின் ஒரு புறத்தில் கிடந்த கட்டிலில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்த மாளவிகா கேசவனை கண்டதும் திடுக்கிட்டுத் தன் நிலை குறித்து நாணமுற்றவளாய் எழுந்து மரியாதையுடன் ஒரு புறமாக நின்றாள். அவள் தலையிலும் கையிலும் கட்டுக்கள் இருந்தன.

அந்த நிமிஷம் வரையில் கேசவன் அவளோடு பேசியதில்லை. சந்தர்ப்பம் பேசவைத்தது. "உட்கார்ந்துகொள் மாளவிகா. உனக்கு ஏதோ விபத்து என்று கேள்விப்பட்டேன். நல்லவேளையாக அதிக அடி இல்லை என்

றும் தெரிந்தது" என்று ஏதோ சொல்லி வைத்தான்.

இதற்குள் சுந்தரராஜன் குறுக்கிட்டு நடந்ததைச் சொன்னான். அவன் சொல்லி முடித்ததும் கேசவனும் தன் அநுபவத்தைச் சொன்னான். இவ்வளவையும் கேட்டபின் மாளவிகா மெல்லச்சிரித்துவிட்டு, "இத்தனையும் என் மடமையால் ஏற்பட்டதுதான்" என்றான்.

அது பொறுக்கவில்லை சுந்தரராஜனுக்கு "நீ என்ன செய்வாய் மாளவி. அந்தப் பயல் அடிநாள் முதலே உன்னைக் கறுவிக் கொண்டிருந்தவன் தானே? சமயம் வாய்த்ததும் தன் சொரூபத்தைக் காட்டிவிட்டான்" என்றான்.

"அது சரி, அப்படி ஒரு சந்தர்ப்பத்தை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தவள் நான் தானே? "என்றாள் மாளவிகா.

"என்ன உளறுகிறாய் மாளவி?

"நான் ஒன்றும் உளறவில்லை. துணையின்றித் தனியிடம் சென்றது என் தவறில்லையா?

கேசவனுக்கு அவர்கள் பேசிக்கொள்ளும்முறை அளவற்ற வியப்பை உண்டுபண்ணிற்று. 'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமோ என்கிற முறையில் நேற்று வரை வளைய வந்து கொண்டிருந்த மாளவிகாவா இப்போது சுந்தரராஜனிடம் இப்படிப் பேசுகிறாள்!' என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டான். 'இவர்களுக்குள் ஏற்கனவே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்' என்றும் தீர்மானித்துக் கொண்டான்.

"எனக்கு மனசு சரியாக இல்லை. உயிரை மாய்த்துக் கொண்டு விட வேண்டும் என்று தோன்றிற்று, வெறி



ஸ்விட்ஸர்லாந்தில் செங்குத்து ரயில்

பிடித்தவளாக வீட்டை விட்டுக் கிளம்பினேன். கடற்கரைப் பக்கம் வந்தேன்" என்று மாளவிகா சொல்லிக் கொண்டே வருகையில் சுந்தரராஜன் இடைமறித்து, "நல்ல காரியத்தைச் செய்ய எண்ணினாய், வெண்ணெய் திரண்டுவருகிற சமயத்தில் தாழி உடைவது போல நீ பிறந்தது முதல் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரம் ஏற்பட்டு, சுகம் பெறவேண்டிய தறுவாயில் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ள நினைத்தாயா? இத்தனை காலமும் இல்லாமல் அப்படி என்ன மனக்கசப்பு ஏற்பட்டு விட்டது உனக்குத் திடீரென்று? உன்னைச் சந்திப்பதற்குச் சற்று முன்புதான் விமலாவைச் சந்தித்தேன். உன் க்ஷேமத்தையும் சந்தோஷத்தையும் விளக்கி, மேற்கொண்டு நடைபெறவேண்டிய காரியங்களுக்கு வெகு சாதுரியமாகத் திட்டமும் வகுத்தாள். இயற்கையாகவே உன்னிடம் கொண்ட அநுதாபத்தோடும் அன்போடும் கூட எனக்காக வேறு உன்னிடம் அளவற்ற அன்பும் அக்கரையும் கொண்டு அவள் நடந்து கொள்வதையும் அவளது திட்டங்களையும் கேட்கக் கேட்க அவளைக் கோயிலில் வைத்து வலம் வந்து வழிபட வேண்டும் போலிருந்தது. உன் விஷயத்திலே நாங்கள் இத்தனை பேர் இவ்வளவு பொறுப்பும் அன்பும் கொண்டிருக்க, நீ என்னடா என்றால் இப்படி யெல்லாம் செய்கிறாய். அப்படி என்ன மாளவி உனக்கு நேர்ந்தது? அதைத்தான் கொஞ்சம் சொல்லேன் கேட்கலாம்" என்றான் கேசவன்.

திருடனுக்குத்தேள் கொட்டினாற்

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

GRAMS...GRANDARTS

பாலு
பிரதர்ஸ்
ஆர்டிஸ்ட்ஸ்
2.தாயார் சாயிப் தெரு, மவுண்ட்ரோட், சென்னை-2

போல் இருந்தது மாளவிகாவின் மன நிலை. சுந்தரராஜனே தனக்கும் விம லாவுக்கும் உள்ள நெருங்கிய பழக் கத்தை விமலாவின் சகோதரன் கேச வன் எதிரிலேயே பட்டவர்த்தனமாக விவரிக்கிறான். அவன் புகைப்படங் களோ மங்களவிலாசத்தில் பல இடங் களில் காணப்படுகின்றன. அப்படி யானல் சுந்தரராஜன் விமலாவுக்கும் அந்தக் குடும்பத்திற்கும் மிகநெருங்கிய நண்பன் என்று தோன்றுகிறது, அப்படிப்பட்ட நட்பிலே களங்கம் கற் பித்துக் கொண்டது பெண்மனத்தின் அசட்டுத்தனத்தால் நேர்ந்ததுதான். ஆனல் அந்த விமலா சுந்தரராஜனுக் கும் தனக்கும் நெருங்கிய பரிச்சயம் உண்டு என்று ஏன் சொல்ல வில்லை அந்தக் கடிதம்...அது என்ன கடிதம் ? கடற்கரையில் அவன் அவள் கரங் களில் முத்தமிட்டது?

இந்த இடத்தில் வந்ததும் அவள் சிந்தனை டக்கென்று நின்றது. முகத் திலே பாவங்கள் ஜாலங்காட்டின. அவள் முகத்தையே கூர்ந்து கவனித் துக் கொண்டிருந்த சுந்தரராஜன், "சரி. நீ சொல்ல வேண்டாம். வீணுக அவஸ்தைப்படாதே" என்று கூறி விட்டுக் கேசவனின் பக்கமாகத்திரும் பிப் பேச ஆரம்பித்தான்.

அப்போது ஓட்டல் பையன் சாப் பாடு கொணர்ந்தான். அதைக் கண் டதும் கேசவன் சட்டென்று கைக் கடிகாரத்தைப் பார்த்தான். உடனே எழுந்தான். சுந்தரராஜன் அவன் தோளைப் பிடித்து இருத்தி விட்டு மற் றும் ஒரு சாப்பாடு கொண்டு வரும் படி ஓட்டல் பையனிடம் கூறினன். கேசவன் தடுத்தான். சுந்தரராஜன் பிடிவாதம் செய்தான். "தமாஷாக எல்லோரும் சாப்பிட்டு விட்டு மங்கள விலாசத்திற்குப் போகலாம்" என் ருன். கேசவனல் தட்டிப் பேச முடி யவில்லை. ஓட்டல் பையன் போய் விட்டான்.

கீழேயிருந்து ஆட்டோ ரிக்ஷாக் காரன் குரல் கேட்டது, அதுவரை அவனை மறந்துபோயிருந்த கேசவன் சட்டென்று கீழேசென்று அவனுக் குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்து விட்டு மேலே வந்தான். வந்ததும் சிறிது நேரமாக அவன் மனத்திலே போராடிக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டான்.

"பத்மநாபன் என்ன ஆனன் சுந்த ராஜன்?"

"அவனை ஆஸ்பத்திரியில் சேர்த் திருக்கிறது."

"விபத்து நேர்ந்தது பற்றிப்போலீ ஸில்..."

"தற்செயலாக நேர்ந்தது என்று தள்ளுபடி செய்தாகிவிட்டது. வழி யிலேயே மாளவிகா தெளிவு பெற்று விட்டதாலும் அதிகக் காயங்கள் இல் லாததாலும் அவளை ஆஸ்பத்திரியில் சேர்க்கவில்லை."

"மாளவிகாவை உனக்கு முன்பே தெரியுமா? சுந்தரராஜன் சிரித்து விட்டு, "அது ஒரு பெரிய கதை கேசவா" என்று நீட்டி முழக்கிக் கொண்டு ஆரம்பித்தவன் கோணல் பார்வையாக மாளவிகாவைப் பார்த் தான். அதுவரை வேறு விஷயங் களில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவள் உள்ளம் அவன் இப்படிக் கூறி னதும் லஜ்ஜையால் விம்மிற்று. அதன் சாயை முகத்திலே விகசித்தது. 'சொல் லட்டுமா?' என்று கேட்டது அவன் பார்வை. 'சொல்லத்தான் போகி றீர்களா?' என்று கெஞ்சிற்று அவள் பார்வை. இதற்குள் ஓட்டல் பையன் மீண்டும் அங்கே பிரசன்ன மானன்.

உடனே மூவரும் எழுந்து கைகால் கழுவிக்கொண்டு உணவு கொள்ள அமர்ந்தனர். என்னதான் சாமளித் துக் கொண்டாலும் மாளவிகாவின் உள்ளமும் உடலும் நிதானத்தில் இல்லை. பலவிதத் தாக்குதல்களால் அவை உளைந்து போயிருந்தன. உள் ளுக்குள் ஜுரம் அடிப்பது போன்ற ஓர் உணர்வு. அதனல் உணவு கொள்ள வில்லை.

சாப்பாடு முடிந்ததும் சுந்தரராஜன் விருபாட்சிபுரத்திற்குத்தான் போய் வந்த கதையை ஆரம்பித்தான். அவன் சொல்லிக்கொண்டேவருகையில் இடைஇடையே அலமேலுவைப் பற்றிய பிரஸ்தாபம் வருகிறபோதெல்லாம் மாளவிகா குறுக்கிட்டு அவளை வானுறப் புகழ்ந்தாள். கேசவன் உள்ளத்திலே அலமேலுவின் பால் அநுதாபம் ஜனித்தது; வளர்ந்தது; வளர்ந்து கொண்டே போயிற்று.

கதை லேசில் முடியவில்லை. மாளவிகா உடல் அயர்வினால் இடையே தூங்கி விட்டாள். வெளியே மழை. மணி பன்னிரண்டு.

"கேசவா, இந்த மழையில் எப்படி வெளியே சென்று டாக்ஸிகொண்டு வருகிறது? இந்த அகாலத்திலேதான் நலிந்த நிலையில் உள்ள மாளவிகாவைத் தொந்தரவு செய்து எதற்காக அழைத்துக் கொண்டுபோக வேண்டும்? அவள் இங்கேயே தூங்கட்டும். நாம் வெளிவராந்தாவிலே படுப்போம். ஆயிற்று; இன்னும் சில மணி நேரத்தில் பொழுது புலர்ந்து விடும். விடிந்ததும் எல்லோரும் மங்களவிலாசத்திற்குப் போகலாம்" என்றான் சுந்தரராஜன்.

கேசவனுக்கு மறுப்புச் சொல்ல வகையில்லை. நண்பன் அபிப்பிராயத்திற்கு இணங்கினான். ஆனால், விடியுந் தறுவாயில் கவனித்தபோது மாளவிகா கடுமையான ஜுரத்தில் அயர்ந்து கிடப்பது தெரிந்தது. தான் சென்று விமலாவை அழைத்து வருவதாகக் கூறி விடைபெற்றுக் கிளம்பினான் கேசவன். அதன்படி விடியற்காலம் மங்களவிலாசத்தை அடைந்தான். நடந்ததைக் கூறினான் எல்லோரிடமும் அல்ல; கோபாலன், விமலா இருவரிடம் மட்டும் நடந்ததை நடந்தவாறு கூறினான். மற்றவர்களிடம் ஏதோ கதை அளந்தான்.

Insist on

CASINO TALCUM POWDER

for a smooth unblemished face and to keep your skin firm and young for the lovelinees that lasts a life time! During Summer it keeps this baby Cool Comfortable & Sweet-Smelling.



16. மலர்ச்சி

உடனே விமலாவும் கோபாலனும் கேசவனோடு புறப்பட்டுச் சென்றார்கள். இதற்குள் சுந்தரராஜன் டாக்டரைத் தருவித்து மாளவிகாவுக்குத் தக்க சிகிச்சை செய்திருந்தான்.

விமலாவைக் கண்டதும் மாளவிகா ஓவென்று அழுதாள். விமலா அவளை அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறினாள். சிறிதுநேரம் எல்லோரும் பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு சுந்தரராஜன் தவிர ஏனையோர் மங்கள விலாசத்திற்குப் புறப்பட்டார்கள். அப்பொழுதும் மாளவிகாவின் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுந்தது. இந்த நிலையிலும் ஏன் அவர் அங்கே வரவில்லை? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அது என்ன?

அது என்ன என்பது வெகு சீக்கிரத்திலேயே அவளுக்கு விளங்கிவிட்டது. விமலாவும் மாளவிகாவும் மங்கள விலாசத்தின் அறையொன்றிலே தனித்திருந்தபோது விமலாவே அனைத்தும் சொன்னாள். மாளவிகா திறந்தவாய் மூடாது கேட்டுக்கொண்டிருந்தாள்.

"மாளவி, நான் சின்னப்பிராயத்திலேயே வாழ்வை இழந்தவள். அது எங்கள் குடும்பம், சுந்தரராஜன் குடும்பம், எங்கள் கிராமம் இவற்றில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரியும். நான் இல்வாழ்வின் ஸ்மரணை அற்றவளாகப் படித்துக்கொண்டிருந்தேன். சுந்தரராஜன் என்னோடு, எனக்குமேல் வகுப்பில் படித்துவந்தார். அவரும் எங்கள் ஊர்க்காரர்தாம். எங்களுக்குள் நட்பு ஏற்பட்டுக் காதலாகப் பரிணமித்தது. இருவரும் மணம் புரிந்து கொள்ள உறுதி பூண்டோம். என் வீட்டில் அனைவரும் சம்மதித்தனர். ஆனால் சுந்தரராஜனின் பெற்றோர் அனுமதிக்கவில்லை. உள்ளம் உடைந்து சென்னை திரும்பிய சுந்தரராஜன் என் தகப்பனாரிடம் வந்து விவரங்கூறிய போது அவர் சுந்தரராஜன் மீது அர்த்தமற்று எரிந்து விழுந்து ஏசிப் பேசினார். அதன் விளைவாகச் சுந்தரராஜன் இனி மங்களவிலாசத்தில் காலடி வைப்பதில்லை என்று சபதம் கூறி வெளிப் போந்தார். அதற்குமுன் நாள் தவறாமல் இங்கே வந்து போவார்.

"என் உள்ளம் ஏக்கத்தால் உடைந்துபோயிற்று. என் தகப்பனாரும் ஆத்திர மேலீட்டால் பரபரப்புடன் பல இடங்களில் ஆராய்ந்து என் நிலையை எடுத்துக்கூறி அதற்குச் சம்மதிக்கக் கூடிய வரனைத் தேடுவதில் முனைந்தார். முயற்சி வீண்போகவில்லை. ஒரு வரன் கிடைத்தது. எல்லா வகையிலும் சிலாக்கியமானதுதான். ஆனால் என்மனம் இணங்கவில்லை. சுந்தரராஜனிடம் ஒட்டிய உள்ளம் அவரிடமிருந்து பிரிய மறுத்துவிட்டது. எனவே இந்த ஜன்மாவில் வேறு எவரையும் மணப்பதில்லை என உறுதி பூண்டேன். இதேபோலச் சுந்தரராஜனுக்கும் அவர் பெற்றோர் பல இடங்களில் பெண்பேசி நிச்சயித்தனர். என்னைப் போல அவரும் நிர்த்தாட்சிண்யமாக மறுத்துவிட்டார். கோபங்கொண்ட அவர் தகப்பனார் "உன்னைப் பெற்றதுமுதல் இது வரை உனக்காகப் பத்தாயிரம் ரூபாய் வரை அழுதிருக்கிறேன். அதைக் கீழே வைத்துவிட்டு உன் இஷ்டம் போல ஒழிந்துபோ!" என்றாராம்.

"தகப்பனாரின் மனப்பான்மை சுந்தரராஜனை வருத்து 'எடுத்தது. உத்தியோகம் பார்த்துத் தகப்பனார் கடனைத் தீர்க்க முடியாது என்றெண்ணியவர் தொழிலில் ஈடு பட்டார். கிட்டத்தட்டப் பத்தாயிரமும் சேர்த்து விட்டார். இதற்கிடையில் சிறு சம்பவம் ஒன்று குறுக்கிட்டது. சுந்தரராஜனின் தாய் நோய்வாய்ப்பட்டாள். படுக்கையில் கிடந்து அழுதுபுலம்பினாள். தன் மூச்சு அடங்குவதற்குள் சுந்தரராஜனை இல்லறத்தை மேற்கொள்ள வேண்டும் என வேண்டினாள். சுந்தரராஜன்

தர்மசங்கடத்தில் சிக்கிக் கஷ்டப் பட்டார். மனம் என்னிடம் ஒன்றியிருந்தாலும் தாயின் மனோரதத்தை நிறைவேற்றிவிடுவது எனத்தீர்மானித்தார். தகப்பனாரின் கடனையும் தீர்த்துவிடுவது என்று முடிவு கொண்டார். அவருடைய இந்த முடிவுக்கு நானே ஓரளவு தூண்டுகோல். ஆம், 'இது என் தலைவிதி. அவர் ஏன் வாழ்வை இழக்க வேண்டும்?'

"இங்கிலையில் பத்மநாபன் அவரை வலைவீசிப் பிடித்து விருபாட்சிபுரம் அழைத்துச் சென்றான். அதன் விளைவு தான் உனக்குத் தெரியும். தெய்வச் செயலாகச் சுந்தரராஜானின் தாய் பிழைத்துக் கொண்டாள். ஆனால் தகப்பனார் கோரிய பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு உன்னை மணந்து கொள்ளவேண்டும் என்பது சுந்தரராஜன் எண்ணம். தொகை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. அதனால் உடனடியாக உனக்குவிடுதலை அளிக்க முடியவில்லை. இங்கிலையில் நான் அவரைச் சந்தித்து நீ என்னிடம் இருந்து வருவதைத் தெரிவித்தேன். அப்போது அவருக்கு ஏற்பட்ட சந்தோஷம்!

"கடிதத்தில் குறித்திருந்த அடையாளப்படி கடற்கரையில் முன்னதாகவே வந்து காத்திருந்தார். நான் சொன்ன விஷயங்களைக் கேட்டதும் உணர்ச்சி வசமாகி வாய்திறந்து பாராட்டு மொழிகள் கூறக் கூடத் திறனற்று என் இருகைகளையும் எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்—'

"ஆ!......என்று வீரிட்டாள் மாளவிகா. படுக்கையிலிருந்து பாய்ந்தெழுந்து, "அக்கா‥…" என்று விமலாவைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அதற்கு மேலும் அவளால் தன் உள்ளத்தில் உள்ளவற்றைக் கொட்டாமல் இருக்க முடியவில்லை. அந்தக் கடிதத்தைப் பார்த்துச் சந்தேகித்தது; கடற்கரையில்

SECURITY

We believe that from the Security of the Policyholder comes the Security of the Institution. Our Policyholders' interest is secured with us as revealed in our latest Valuation Report. Our whole Life & Endowment Policyholders earn a BONUS of Rs. 8/- and Rs. 6/- respectively each year.

"HINDUSTHAN IDEAL'S" Representatives are also assured of a secured future under our Perpectual Renewal Commissions Plan.

If you wish to secure your properties against the hazards of Fire & Accident and provide against economic insecurity in old age, please Demand of our services:

THE HINDUSTHAN IDEAL INSURANCE CO., LTD.,

(Incorporated in India in 1935)
MASULIPATAM

General Office: Post Box No. 1601
32/33, Linghi Chetty Street MADRAS-1
GENERAL MANAGER: S. RAMACHAR

அவர்களைப் பார்த்து ஆத்திரமடைந்தது அனைத்தையுங் கூறி மன்னிப்புக் கோரி அழுதாள்.

"பைத்தியமே! அழாதே. பெண் மனத்தின் இயற்கையே அப்படித்தான். அதிலும் நீ சிறிசு; உலக அநுபவமற்றவள். கிடக்கிறது தள்ளு" என்று சமாதானம் சொன்னாள் விமலா. பிறகு, "பாவம், கேசவன் தான் அநியாயமாக மனம் உடைந்து போய் விட்டான். நான் செய்தது தவறு" என்றாள்.

"இல்லை, என் மனம் உடையவில்லை. அந்த அலமேலுவை நான் ஏற்றுக் கொள்ளப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் கேசவன். இதைக் கேட்டுப் பெண்மணிகள் பிரமித்துப் போயினர்.

"ஆனால் பத்மநாபன் இனி நம் முகத்திலே விழிக்கமாட்டாரே?" என்றாள் விமலா.

"இல்லை, நான் அவரைக் கண்டு பேசி எல்லா முடிவும் செய்து கொண்டு வந்து விட்டேன். அவர் மனம் தம் பிழைகளை எண்ணிப் புண்பட்டுக் கிடக்கிறது. தவறுக்குக் கடவுள் தந்த தண்டனை இது என்று உணர்ந்து கொண்டு விட்டார். உடல் நிலை சாதகமானதும் நேரே இங்கே தான் வரப்போகிறார். முதலில் மாளவிகாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகு தான் மறுவேலையாம். இரண்டு கல்யாணங்களையும் விருபாட்சி புரத்திலேயே பிரமாதமாக நடத்தப் போகிறாராம்" என்றான் கேசவன்.

"அப்படியானால் அப்பாவை உடனே வர வழைக்க வேண்டியது தான்" என்று விமலா கூறி வாய் மூடு முன், "விமலா" என்று கீழேயிருந்து அந்த அப்பாவின் குரலே ஒலித்தது.

அண்ணனும் தங்கையும் ஓட்டமாக

Deepavali Greetings to our Customers

Phone: 6232 | Established 1865

BY APPOINTMENT TO H. E. GOVERNOR OF BOMBAY

BHAGWANDAS & SON

MANUFACTURING JEWELLERS

Diamonds and Emeralds Merchants
Gold and Silversmiths, Curio Dealers

Commissioner Road, OOTACAMUND | 95, Dareeba Kalan DELHI

ஓடிவந்தனர். மாளவிகாவும் உடல் நிலையைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் பின்னாலேயே வந்தாள்.

* * *

அடுத்த சில தினங்களுக்குப்பின் ஒரு நாள் விருபாட்சிபுரம் அமளி துமளிப்பட்டது. பண்ணையார் வீட்டிலே இரட்டைக் கல்யாணம் என்பதே எங்கும் பேச்சாக முழங்கிற்று. பாகவதரை அறிந்திருந்தவர்கள், "கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே என்பதை இந்தப் பெண் மாளவிகாவின் அதிருஷ்டம் நிரூபித்துவிட்டதே!" என்று பேசிக் கொண்டார்கள். அலமேலு, மாளவிகா இருவரும் மீளவும் சந்தித்ததும், ஒரே சமயத்தில் மனமொத்த கணவன்மாரை அடைந்ததும் வைபவம் சிறப்பாக நடந்ததும் அவர்கள் உள்ளத்திலே அளவற்ற ஆனந்தத்தை உண்டு பண்ணின. பத்மநாபன் புது மனிதனாக மாறிப் பொறுப்புடனும் உற்சாகத்துடனும் அனைத்தையும் நடத்தி வைத்தான். விமலாவுக்கு ஒரே குதூகலம். தான் பங்கெடுத்துக்கொண்டு சுந்தரராஜன்—மாளவிகா வாழ்வை மலரச் செய்ததில் பேரானந்தம். மாளவிகாவுக்கு மட்டும் சிறிது துயரம் இருக்கத்தான் இருந்தது, தாயின் நினைவால். அதை ஊகித்துணர்ந்த சுந்தரராஜன் அவளைத் தேற்றினான். கேசவன் மனமாற்றந்தான் இந்த வைபவம், விருபாட்சி புரத்திலே இத்தனை சிறப்பாக நடந்ததற்குக் காரணம் என்று எல்லோரும் அவனைப் போற்றினர். அங்கே ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடிற்று.

சுபம். சுபம். சுபம்.

—x—



உயர் ரகம்

உத்திரவாதமுள்ள

வைரங்கள்

விரும்புபவர்களுக்கு

Manilal & SONS

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட், மதருஸ் - 1.

மணமகளுக்கு அலங்காரம் செய்வதில் நம் தமிழ் நாட்டு ஸ்திரீகளுக்கு எத்தகைய குதூஹலமும், ஆர்வமும் உண்டாகிறது என்பதையே இப்படம் எடுத்துக் காட்டுகிறது.

By Courtesy of
AMUDA SURABI



முதற் கேஸ்

எம்.பி.சுப்ரமணியம்

காட்சி 1

இடம்: சேகரின் வீடு (ஒரு புசிய வக்கீல்).

காலம்: காலை எழு மணி.

(மணி எழு அடிக்கின்றது).

முனுசாமி: இன்னும் இவரு எழுந்திக்கலேயே; சாமி. மணி எழா யிடுத்து எழுந்திருங்கோ.

சேகர்: (மெதுவாக எழுந்து கொட்டாவி விட்டுக்கொண்டே) என்னடா இது! சங்கரன்கிட்ட காப்பி கொண்டுவரச் சொல்லு.

முனுசாமி: சமயக்கார அய்யா தான் வரலேயே. பால்காரன் பால் கொண்டுவந்தான். வாங்கி மூடிவச்சிருக்கேன்.

சேகர்: அட சே! இந்தச் சனியன் பிடித்தவன் வாரத்திலே மூன்று நாள் மட்டம் போட்டுடரான், கழுதை! காலையிலே காப்பி இல்லாவிட்டா மனுஷன் என்னுகிறது!

முனுசாமி: சாமி நான் போய் பக்கத்து ஓட்டலேத்து காப்பி வாங்கி வாரேன்.

சேகர்: வேண்டாம்பா! காப்பி குடிக்காபோனு தலைவலி கொஞ்ச நேரம் கழிச்சுத்தான் வரும்; ஆனு அந்த கோதண்ட விலாஸ் காப்பியைக் குடிச்சா இப்பவே தலைவலியோடெ வாந்தியும் வந்துவிடும்.

முனுசாமி: அப்பாவுக்கு காலையிலே காப்பி இல்லாபோனு தலைவலி வரும். எனக்கும் தெரிஞ்சா காப்பி போட்டுடுவேங்கோ.

சேகர்: ஊம்! போயி அடுப்பங்கரையிலே கட்டை கரி எல்லாம் எடுத்து வை, இதோ நானே வந்து காப்பி போடரேன்,

(முனுசாமி உள்ளே போகிருன். தொடர்ந்து சேகரும் போகிருன்.)

சேகர்: டேய்! அந்தத் தவலையிலே தண்ணி புடிச்சுவைச்சிட்டு வெளியிலே போய் இரு. யாரு கட்சிக்காரர் வருவாங்கோ.

முனுசாமி: அ.......யார் வரப் போருங்கோ! நீங்க போர்டு மாட்டி பத்து நாளாச்சு இன்னும் ஈ காக்கா கூட காணேம்.

சேகர்: சீ கழுதை! போடன்னு.

(முனுசாமி போகிருன். சேகர் அடுப்புடன் மன்ருடுகிருன்).

அப்பா என்ன புகை! கண்ணெல்லாம் போகுதே.

முனுசாமி: சாமி! சாமி!! யாரோ ஒருத்தரு வந்திருக்காரு ஓடிவாங்கோ.

சேகா: என்டா இப்படி ஆளைக் கண்ட சமுத்திரம் மாதிரி இரயரே? யாரையுமே காணுத மாதிரியில்லே கூத்தாடரே!

முனுசாமி: இதுவரைக்கும் நம்ம யாரைக் கண்டோமுங்கொ.

சேகச்: போடா அவர் போய்

விடப்போரூரு. உட்காரச் சொல்லு. நான் இதோ வந்துவிடறேன்.

முனுசாமி: இதோ போறேனுங்கோ; மொதமொதல்லே வந்த கட்சிக்காரரு அவரு போறதின்னு நா வுட்டுடுவேனு. இஸ்துக் கொண்டாந்து போட்டுடறேன்.

(காமிரா அறைக்குப் போகிறான்.)

உட்காருங்கோ வக்கீல் அய்யா இதோ வந்திடுவாரு.

சேகர்: அட நீயா!!............ யாரோன்னு நினைச்சேன்.

ராமு: சொல்லித் தொலையேண்டா, முழிக்கிறயே ஏதோ கட்சிக்காரன்னு நினைச்சே.

சேகர்: உனக்கு எப்பவும் விளையாட்டுதான் ஆமா திடீரென்று என்ன இப்பொ மெட்ராஸுக்கு வந்தே? ஒரு லெட்டர் போடக்கூடாது.

ராமு: லெட்டர் போட 'டைம்' இருந்தா போடமாட்டேனு என்ன? ......ஆமா என்னடாது மூக்கிலே கரியாயிருக்கு.

சேகர்: அதையேன் கேட்கறே, ஐ. ஸி. எஸ். வேலை செய்துகொண்டிருந்தேன்.

ராமு: ஏன் இம்படி கஷ்டப்படனும்? பேசாமெ அந்தப் பெண்ணை கலியாணம் பண்ணிக்கக்கூடாது; நிஜமா சொல்றேன் சேகர். நீ கொடுத்து வைக்காவதன் அந்த மாதிரிப் பெண் உனக்குக் கிடைக்காது.

சேகர்: ஆமா உங்க பெரியப்பா பெண்ணே இல்லையோ அந்தமாதிரி கிடைக்குமா என்ன!

ராமு: சரி அதைப்பற்றி இப்பொழுது பேசி என்ன? சாவகாசமா பேசிக்கலாம். எனக்கு பதினேரு மணிக்கு 'இண்டர்வியூ'ன்னு போட்டிருக்கான் நான் போயிட்டு சாயந்திரம்வரேன்.

சேகர்: எதுக்கு 'இண்டர்வியூ' ஒண்ணுமே சொல்லவில்லையே.

ராமு: அதுவா, குபேரா பாங்க்ன்னு புதிசா ஆரம்பிக்கிறாளாம் அதற்கு மானேஜர்கள் தேவை என்று போட்டிருந்தார்கள். அப்ளிகேஷன் போட்டிருந்தேன் 'இண்டர் வியூ' விற்கு கூப்பிட்டிருக்கிறார்கள்,

சேகர், ஆமா உன் பெட்டி படுக்கையெல்லாம் எங்கே?

ராமு: எல்லாம் ஸ்டேஷன் பக்கத்திலேயே ஒரு ஓட்டல்லே போட்டிருக்கேன்.

சேகர்: ஏண்டா நான் இங்கே இருக்கும்போது நீ.........

ராமு: அதுக்குள்ளே கோவிச்சிக்கிறயே, என்கூட வந்தவன் அங்கே ரூம் எடுத்திருக்கான் அவன் ரூமிலே வச்சிருக்கேன். அதெயெல்லாம் இங்கே தூக்கிக்கொண்டுவந்து நான் குளிச்சு சாப்பிட்டு எப்போ இண்டர் வியூக்குப் போறது. அதான் கொண்டு வரலே. சாயந்திரம்பெட்டி படுக்கை யெல்லாம் கொண்டு வந்து விடுகிறேன்.

(போகிறான்)

சேகர்: முனுசாமி நீ இங்கேயே இரு.

(உள்ளே போய் திரும்பவும் அடும்பண்டை உட்கார்ந்துக் கொண்டு பாத்திரங்களை இங்குமங்குமாக போடுகிறான்)

(சுமார் ஐம்பது வயதுள்ள ஒருவரும் பதினெட்டு வயதுடைய ஒரு இள நங்கையும் வருகிறார்கள்)

பெரியவர்: வக்கீல் இருக்கிறாரா?

முனு: உட்காருங்கோ இதோ வந்திடுவாரு,

(உள்ளே போய்) சாமி யாரோ வந்திருக்காங்க

சேகர்: இதென்னடா இது, இன்னிக்குத்தான் ஆளுக்கு மேலே ஆள்வந்து; முன்னே வந்தாரே அவரு தானே?

முனு: இல்லீங்க, யாரோ ஒரு பெரியவரும் பொண்ணும் வந்திருக்காங்கோ.

(சேகர் காமிரா அறைக்கு வருகிறான்)

FOR

Bright

Light

& LESS ENERGY USE

MYSORE

LAMPS





குறைந்த மின்சாரச் செலவில் பிரகாச
மான வெளிச்சம் பெற மைசூர் பல்பு
களையே உபயோகியுங்கள்.

மைசூர் பல்புகள் நீண்டநாள் எரிவதால்
அடிக்கடி மாற்ற வேண்டிய செலவில்லை.
5 முதல் 1000 வாட்டுகள் வரை, எல்லா
தினுசுகளிலும் சைஸ்களிலும் கிடைக்
கும். வாயு நிரப்பப்பட்டவை.

தயாரிப்பவர்கள் :

தி மைசூர் லாம்ப் ஒர்க்ஸ் லிமிடெட்

ஸ்தாபிதம் : 1936

மல்லேஸ்வரம், பெங்களூர்-3

தந்தி : "MYSORE LAMP" டெலிபோன் : 2026

சென்னை ராஜ்யம், ஆந்திர ராஜ்யம் & திருவாங்கூர், கொச்சி ஏகபோக
விநியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ் த்வாரகாநாத் ஏஜன்ஸீஸ்

71, வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி சென்னை

போன் : 86109 தந்தி : "ENERGY"

சேகர்: நமஸ்காரம் உட்காருங்கோ.

பெரியவர்: நமஸ்காரம். நான் பக்கத்துத் தெருவிலே இருக்கேன்; ஆமா, நீங்கதான் வக்கீலோ

சேகர்: ஆமாம் நான் தான்

பெரியவர்: ஒரு கேஸ் விஷயமா வந்தேன், எனக்கு இந்த ஊரிலே யாரையும் தெரியாது. கொஞ்சம் டீரிட்மென்ட் கோஸரம் பட்டணத்திலே இருக்கணம். அதுக்காக என் நண்பர் ஒருவர் மூலமாக ஒரு வீட்டை ஏற்பாடு பண்ணிக்கொண்டேன். வீடு கிடைக்கிற கஷ்டம் தான் உங்களுக்குத் தெரியுமே!

சேகர்: அதையேன் சொல்றய. நான் இந்த வீட்டுக்கு வந்து ஒருமாதந் தான் ஆகிறது, இது கிடைக்க நான் பட்ட பாடு!!

பெரியவர்: அதான், நான் இருக்கிறது மெத்தை மாத்திரம் தான், மூன்று அறை ஒரு சின்ன வராண்டா இத்யாதி. அதற்கு எழுபத்தைந்து ரூபாய் வாடகை கொடுக்கிறேன். ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ்னு சொல்லி வாங்கி விட்டான். அதற்கு ரசீது இல்லே. இப்பொ காலி பண்ணுன்னு நோட்டீஸ்கொடுத்திருக்கான்.

சேகர்: ரொம்ப அநியாயமாயிருக்கே!

பெரியவர்: என்ன பண்ணறது? நீங்கதான் ஒரு வழி சொல்லணும்.

சேகர்: நோட்டீஸ் எங்கே பார்க்கட்டும்.

பெரியவர்: நோட்டீஸ் எங்கே ஹேமலதா?

ஹேமா உங்கிட்டே தப்பா, இருக்கு. நீங்கதான் வெச்சிண்டிருந்தயள்.

பெரியவர்: எங்கோயே மறந்து வச்சிட்டேன் போலிருக்கு, அப்புறம்

முனு: சாமி! பொங்கிடுச்சி! பொங்கிடுச்சி!!

(கத்திக்கொண்டே ஓடிவருகிறான்)

(சேகர் நாற்காலியைத் தள்ளிவிட்டு உள்ளே ஓட இரும்பு நாற்காலி படார் என்று விழுகிறது)

ஹேமா: என்ன இது ஒரே கலாட்டா

பெரியவர்: என்ன என்று தெரியவில்லையே!

சேகர்: (திரும்பி வந்து) மன்னிக்க வேண்டும் அடுப்பிலே பால் பொங்கி வழிந்துக் கொண்டிருந்தது... ஏண்டா முனுசாமி தண்ணியை தெளிச்சா அடங்கிடறது, அதுக்கா இப்படி கூச்சல் போடறது!

முனு: எனக்கின்னுங்கோ தெரியும்.

சேகர்: வீட்டிலே இன்னிக்கு சமயற்காரன் வரலே. காப்பிபோட்டு சகப்பிடலாமென்று புறப்பட்டேன். ஒட்டல்லே வாங்கினு நன்னுவே இல்லே.

பெரியவர்: என் வீட்டிலே யாரும்......!

சேகர்: (சிரித்துக் கொண்டே) எனக்கு இன்னும் கல்யாணமாகவில்லே.

பெரியவர்: அப்படியா! இதோ ஒரு நொடியிலே காப்பி போட்டு விடுவா என் பெண் ஹேமா, என்ன ஹேமா?

ஹேமா: இதோ தயார் பண்ணிக் கொண்டு வந்து விடுகிறேன்.

சேகர்: வேண்டாம் வேண்டாம், உங்களுக்கு எதற்கு சிரமம்.

ஹேமா: எனக்கொன்றும் சிரமமில்லே.

பெரியவர்: நீங்க சும்மா இருங்க சார், ரொம்ப ஜோரா காப்பி போடுவா, வீட்டு வேலே யெல்லாம் நன்றாகச் செய்வா, ரெண்டுவருஷமா அவ கல்யாணத்துக்காக படாத கஷ்டமில்லே ரெண்டு மாதம் முன்னே கூட ஒரு நல்ல ஜாதகம் கிடைச்சுது. ஆனு பிராப்தம் தான் இல்லே.

சேகர்: ஏன் அப்பொ கல்யாணம் ஆகல்லே

பெரியவ: பையனுடைய தகப்பனுருக்குக் கூட இஷ்டம்தான். ஆனு

பையன்தான் இப்பொ கல்யாணம் வேண்டா முன்னு பிடிவாதமா யிருக்கானும்

சேகர்: பொண்ணை வந்து பார்த்துட்டுப் போகச் சொல்லி பையனுக்கு எழுதக் கூடாதோ?

பெரியவர்: எல்லாம் எழுதினேன் ஸார்; அவன் தான் கல்யாணமே வேண்டா மென்னும் போது பொண்ணை பார்ப்பானேன் என்று என்று அவன் தகப்பனர் எழுதி விட்டார்.

சேகர்: கவலைப் படாதிங்கோ ஸார்

பெரியவர்: கவலைப்படாமே என்ன பண்றது ஸார். இந்த வீட்டு சமாசாரம் என்ன பண்ணறது.

சேகர்: எதற்காக காலி பண்ண வேண்டுமாம்.

சேகர்: நீங்க சொன்னபடி வீட்டுக்காரனுக்கே வீடு வேண்டு மென்றால் காலி செய்து விட நேரிடும்.

பெரியவர்: நிஜமாவா! எப்படியோ ஒரு வீடு கிடைச்சிதுன்னு பார்த்தேன். அதுக்குள்ளே இப்படி காலி பண்ணி நானும் பெண்ணும் எங்கே போவது!

சேகர்: கவலைப்படாதீர்கள் கேஸ் முடிய சில மாதங்கள் ஆகும். அதுக்கு மேலே அப்பீல் இருக்கிறது. அதற்குள்ளே எதுை வழி கிடைக்காதா?

(ஹேமா கையில் டம்ளருடன் வருகிருள்)

பெரியவர்: அதற்குள்ளே தயார் பண்ணி விட்டாயா? அவருக்குக் முதல்லே கொடு ஹேமா.



சமீபத்தில் வெள்ள நிவாரண நிதிக்காக பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் கிரிக்கட் பந்தயம் ஆடினர். அச்சமயம் ஒரு கோஷ்டியின் தலைவரான பண்டித நேரு ஹரிந்திரநாத் சடோபாத்யாவுடன், கை குலுக்கும் காட்சி.

சேகர்: (கையில் வாங்கிக் கொண்டு கொஞ்சம் குடிக்கிறான்) காப்பி ரொம்ப ஜோர்!! ஆமா நீங்க குடிக்கலேயே?

ஹேமா: அப்பா குடிக்கிறதில்லே. இன்னும் வேண்டியது உள்ளே இருக்கு நான் குடிக்கிறேன்.

சேகர்: இதே நான் கொண்டு வருகிறேன்.

ஹேமா: வேண்டாம் வேண்டாம், நான் எடுத்துக் கொள்கிறேன்.

பெரியவர்: நீ உள்ளே போய் குடிச்சிட்டுவா ஹேமா. அப்போ இந்த நோட்டீஸ் விஷயம் அந்த நோட்டீஸ் விஷயம் அந்த நோட்டீஸை நீங்க பார்க்கணும் இல்லையா?

சேகர்: ஆமாம்

பெரியவர்: எப்போ வந்து உங்களைப் பார்க்கிறது?

சேகர்: சாயந்திரம் ஐந்துமணிக் கெல்லாம் கோர்ட்டிலிருந்து திரும்பி விடுவேன். நீங்க ஒரு ஆறுமணிக்கு நோட்டீஸையும் எடுத்துக் கொண்டு வாங்க.

பெரியவர்: என்ன ஹேமா போகலாமா

ஹேமா: நான் அப்பவே தயார், போகலாம்.

பெரியவர்: சரி நாங்கள் விடை பெற்றுக் கொள்கிறோம்.

சேகர்: நமஸ்காரம்.

(பெரியவரும் ஹேமாவும் கை கூப்பி வணங்குகிறார்கள்)

ஹேமா: இந்தாப்பா கொடை, அதை மறந்து விட்டாயே;

(பெரியவரும் ஹேமாவும் போகிறார்கள்)

சேகர்: டே முனுசாமி! வீட்டை ஜாக்கிரதையா பார்த்துக்கொள். நான் ஓட்டல்லே சாப்பிட்டு அப்படியே கோர்ட்டுக்குப் போறேன். நீ சாப்பாட்டிற்குப் போகும்போகும் போது வீட்டை நன்றாகப் பூட்டி விட்டுப் போ.

முனுசாமி: சரி சாமி.

(சேகர் போகிறான்)

காட்சி 2

சேகர் வீடு.
மாலை 5-30 மணி.

சேகர்: வாடா...என்னாச்சு உன் இண்டர்வியூ.

ராமு: என்ன இண்டர் வியூடா இது! மானேஜரா இருக்கவேண்டியவன் கிட்டே, ஆப்பிரிக்காவில் எந்த ஜாதிக்கு கழுத்து அதிக நீளம், சமுத்திரத்தின் ஆழமென்ன இதெல்லாம்



என் தெரியணும் என்று எனக்குப் புரியவில்லே.

சேகர்: நீ என்ன எல்லா கேள்விக்கும் ஏதாவது உளறி இருப்பே.

ராமு: ஏதோ சொன்னேன், தேர்ந்தெடுத்தா கடிதம் வருமாம். ஆமா நீ என்ன இடிச்ச புளி மாதிரி இப்படி உட்கார்ந்து இருக்கே: கிளம்பு பீச்சுக்குப் போகலாம்.

சேகர்: இல்லே ஆறுமணிக்கு ஒத்தர் வரேணிருக்காரு.

ராமு: அது யாரா அது?

சேகர்: ஒரு கட்சிக்காரர் வந்திருந்தார். ரென்ட்கன்ட்ரோல் கேஸ். காலேயிலே நீ போனதும் இங்கே வந்திருந்தார் அவர் பெண்கூட வந்திருந்தாள். இருக்கிற வீட்டை விட்டுக் காலிபண்ண வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறுனும் சொந்தக்காரன்.

ராமு: ஊம்

சேகர்: நமக்கு முதல் கேஸ், டயத்திற்கு இருக்க வேண்டாமா? அவருடைய பெண்! நான் என்ன சொல்ல!! அவளுடைய அழகு அவள் குரலினிமை!! அவள் தந்த காப்பியைப் போல நான் இதுவரைக் குடித்த தேயில்லே போ! அமிர்தம்தான் போ!

ராமு: ஏது வரபோது வக்கீலுக்கு காப்பிகூட Flask கிலே கொண்டு வந்தாப் போலிருக்கு

சேகர்: இல்லேடா, இங்கே வந்ததே நான் காப்பிசாப்பிடாமே இருக்க பெண்ணிடம் காப்பி போடச் சொன்ஞர். ஒரு நிமிஷத்திலே காப்பி போட்டுக் கொண்டு வந்துட்டா. கைவளே குலுங்க அவள் கொண்டுவந்த அழகைச் சொல்வதா அல்லது அந்தக் காப்பியின் ருசியை வர்ணிப்பதா!! இன்னும் அவளுக்குக் கல்யாணம் கூட ஆகலே, யாரோ ஒரு இடியட் அவளேப் பார்க்காமலேயே வேண்டாமென்று சொல்லிவிட்டானும்.

ராமு: நீ எங்க பெரியப்பா விஷயத்திலே என்ன பண்ணினயாம், அதே மாதிரிதான்.

சேகர்: போடா, அதை விட்டுத் தள்ளு; இவ ஏதோ அன்றலர்ந்த மலர் போல் இருக்கிருள், அவள் என்னே கடைக் கண்ணுல் பார்த்த பார்வை!!

ராமு: எண்டா ஏதோ கேஸ் விஷயமா ஆரம்பிச்சு வேறு ஏதோ கேஸா இல்லே போறது. உனக்குக் கூட காதல் கீதல்னு ஏதினு வியாதி வந்துடுத்தா என்ன?

சேகர்: அந்தப் பெண்ணேக் கண்டு காதலிக்காவிட்டா நான் ஒரு மனிதஞ

ராமு: எருமைக் கிடாவா!... ஏதோ டிராமாவிலேயோ ஸினிமாவிலேயோ நடிக்கிறதாக எண்ணமா... ஊம்...எப்படித் தோணுது! மனுஷனுக்கு வேலே வேணும், கவலே வேணும். இது ஒண்ணும் கிடையாது. புள்ளே இங்கே கிழிக்கிற வேலேக்கு ஒருவீடு, சமயற்காரன், வேலேக்காரன்: நீ என்னடா என்ருல் வாரத்திற்கு இரண்டு காதல் சித்திரம் கற்பனேக் களஞ்சியம் அப்படிங்கிற சினிமா, வீட்டுக்கு வந்தா, ரயிலிலே காதல், பஸ்ஸிலே காதல், கண்டதும் காதல், தூங்கினு காதல், எழுந்தா காதல், இடறி விழுந்தா காதல் அப்படின்னு கதைகளேப் படிக்கிறது.

சேகர்: போடா! உனக்கு எல்லாம் கிண்டல்தான்.

ராகு: என்னடா கிண்டல், கண்ட கதையெல்லாம் படிச்சு இப்பொ யாராவது ஒரு அழகிய பெண்ணேக் கண்டுவிட்டால் அவள் பேரிலேயே காதல் கொண்டுவிட்டதாக எண்ணிக் கொண்டு தன்னேயே பைத்தியமாக்கிக்கிறது ....யாரோ வந்தாளாம். காப்பி கொடுத்தாளாம். காதல் வந்துவிட்டதாம்.

சேகர்: என்னடா நீ கூட இப்படி யெல்லாம் பேசறே.

ராமு: சரி உன் முதல் கேஸை 'டார்பிடோ' பண்ணலே; நானும் இங்கேயே இருந்து அந்த அப்ஸரஸை பார்க்கட்டும். இப்பொவும் அவ வருவாளோ இல்லேயோ,

சேகர்: கட்டாயம் வருவான் என்றுதான் சொல்வேன். போகும் போது அவ என்னை ஒரு பார்வை பார்த்தா, 'ஹா இட் ஸ்போக் வால்ம் யூஸ்' அதனுலே இப்பொ கட்டாயம் வருவா.

ராமு: மணி ஏழாயிடுத்தே, இன்னும் உன் ரம்பை வசக்காணேமே!

(பால்கான் வருகிருன்).

பால்காரன்: ஸார் பால்.

சேகர்: டேய் முனியா உள்ளே போய் கூஜாவைக் கொண்டு வந்து பாலே வாங்கி வை.

முனுசாமி: (உள்ளே போய்விட்டு வந்து) சாமி! வெள்ளிக் கூஜாவை காணேமே!

சேகர் - என்னடாது? காணுமா! (உள்ளே போய் பார்த்து) அட இருந்த வெள்ளி டம்ளர் ஒன்றும் காணமே! அலமாரி திறந்துகிடக்கு! (மேஜை டிராயரைத் திறந்து பார்க்கிருன்). இங்கே இருந்த பத்து ரூபாயைக் காணமே! என்னடா இது முனியா?

முனுசாமி: நான் உள்ளேயே போகலீங்களே.

சேகர்: அநியாயமாக இருக்கே! நான் காலையிலே அவங்க போனப்பிறகு நான் உள்ளேயே போகலேயே. 'டொஸ்' பண்ணிக்கொண்டு கோர்ட்டுக்குப் போய்விட்டேன்.

ராமு: எல்லாம் உன் அப்ஸரஸ் பண்ணின வேலைதான்போலிருக்கு. அதுதான் அவர்கள் சாயந்திரம் வரவேயில்லை. இந்த மாதிரி செய்து கொண்டு திரிகிருர்கள் என்று நாள் முன்புதான் பத்திரிகையில் படித்தேன். இது அவர்கள் வேலைதான். சந்தேகமில்லை.

சேகர்: இங்கிருந்த குடையைக் கூட கொண்டுபோய் விட்டார்காள. இப்பொ ஞாபகம் வரது......என் எதிரிலேயே 'குடையை மறந்துவிட்டாயே' என்று தகப்பனுரிடம் எடுத்துக் கொடுத்தாள் அந்த ஜாலக்காரி.

ராமு: பகல் கொள்ளை! போலீஸில் போய் பிராது ரொடுக்கலாம் வா; நல்ல வக்கீல் நீ! உன் முதல் கேஸில் நீயேதான் பிராது கொடுப்பவன்.

சேகர்: தலைவிதி?

(எல்லாரும் போகிருர்கள்).

O

நம்பிக்கையானதும் உத்திரவாதமான
வாட்சுக்கும், ரிப்பேர்களுக்கும்
நம்பிக்கையான இடம்

வசந்த் வாட்சு கம்பெனி
ஈவினிங் பஜார் ரோட்
மதராஸ்

பிரபல நக்ஷத்திரம்

டி. ஆர். ராஜகுமாரி

கூறுகிறார்.

நான் பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியமளிக்கும் ஓர் சிறந்த கூந்தல் தைலம் என அனுபவத்தில் கண்டேன்.

Rathod Trading Co.

Sowcarpet :: Madras-1.

நாட்டியாலயா

[பரதநாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்குமட்டும்

போஷகர் :

குமாரி வைஜயந்திமாலா

*

தற்போது நாட்டிய வகுப்புகள் நடந்துகொண்டு வருகின்றன. பெண்களைச் சேர்க்க விரும்புபவர்கள் நேரில் வந்து விசாரிக்கவும்.

*

விபரம் :

நாட்டிய மாலா

சதர்ன் அவின்யூ-ஆள்வார்பேட்டை

மதராஸ்-18

சைதன்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ கௌராங்கர் என்கின்ற ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்

ஸ்ரீ எஸ். சதாசிவம்

கோபீபாவம்

இப்பொழுதெல்லாம் கௌரங்கருக்கு சங்கீதத்தில் அதிக பற்றுதலில்லை. நடுநடுவில் வருவார். சில சமயம் பக்தர்களின் வேண்டுகோளின் மேல் ஆரம்பம் செய்தார். ஸதா தான் எதையோ சிந்தித்துக்கொண்டு அழுது கொண்டும், சில சமயங்களில் சிரித்துக் கொண்டுமிருக்கலானுர். சில சமயம் ராதையின் பாவமடைந்து அழ ஆரம்பித்துவிடுகிறார். கிருஷ்ணனைவிட்டுப் பிரிந்த ராதையாகவும், கிருஷ்ணனை அக்ரூரர் ப்ருந்தாவனத்திலிருந்து கூட்டிக்கொண்டு போனபொழுது துக்கமடைந்த கோபியாகவும், க்ருஷ்ணனின் பாவம் கொண்டு கோபங்களுடன் வ்ரஜ லீலையையும் அனுகாணம் செய்வார். சில சமயம் ப்ரஹ்லாதர் மாதிரியும், துருவன் மாதிரியும் நடிப்பார். விரஹம் கொண்டவனின் நிலைமையை அடைந்து நகங்களால் பூமியைத்தோண்ட ஆரம்பிப்பார். இவைகளெல்லாம் பார்த்து மாத்ரு ஸ்நேகத்தால் சசீமாதா நிமாயிக்கு ஏதோ வியாதி என்று நினைத்து துக்கமடைந்தாள். பக்தர்கள் அவளைத் தேற்றினார்கள்.

இப்பொழுது அவர் ஸங்கீர்த்தனத்தால் பரவிக்கொண்டிருந்த தேச வ்யாபியான தன் கீர்த்தியை முறித்துத் தள்ள எத்தனித்து ஓடிக் கொண்டிருப்பவர்போல் காணப்பட்டார். வீடு வாசல், குடும்பம், பரிவாரம், தர்ம பத்னி, தாயார் இவர்களிடம் ஒரே அடியாக வைராக்கியம் அடைந்துவிட்டார்.

ஸந்யாஸத்திற்கு ப்ரயத்தனமும், க்ரஹத்யாகமும்

வீட்டிலிருந்து கொண்டே லக்ஷக் கணக்கான ஆண் பெண்களுக்கு க்ஷேமமுண்டாக்கிக் கொண்டிருந்தார். ஆனால் இவ்வளவோடு மட்டும் அவர் ஸந்தோஷமடையவில்லை. பகவன்னமத்தை உலகம் முழுதும் பரவச்செய்ய எண்ணினர். அப்படிச்செய்ய வீடு வாசல்களை துறந்த சன்னியாஸி ஆனல்தான்முடியும், ஆகையால் அவர் யோஜித்தார். "இப்பொழுது நாம் ஸன்னியாஸி ஆகி, தலையைமொட்டை அடித்து, வீடுவீடாக பிக்ஷை எடுக்காத வரை நம்முடைய ஆத்மாவும் முழு சாந்தி அடையாது. நம்முடைய விரோதிகள் கரையேறுவது என்பது ஏற்படாது. நம்முடைய விரோதிகளின் உத்தாரம் நம்முடையமகத்தான த்யாகத்தின் மூலம்தான் செய்யமுடியும் என்று தீர்மானித்துவிட்டார்.

சசீமாதாவிற்கு ஏற்கனவே மூத்த பிள்ளையான விச்வம்பரன் ஸன்னியாஸியாகி ஓடிவிட்டான். அப்பொழுது பதியாவது இருந்தார். இப்பொழுது அவரும் காலமாகி தன் ஒரே ஆதாரமான நிமாயியும் ஸன்னியாஸம் பெற ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான் என்ற விஷயத்தை சிநேகிதர்கள் மூலம் கேள்விப்பட்டபொழுது அவள் அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை. அவள் நிமாயியைப் பார்த்து தான் கேள்விப்பட்டது நிஜமா என்று

கேட்டாள். அவரும் அவள் கேள்விப்பட்டது உண்மைதான் என்றார்.

இதைக்கேட்டு தாயார் ஓவென்று அழுது கண்ணீர் வடித்தாள். மேலும், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ஒன்றுமறியாத அப்பாவி சிறு பெண் விஷ்ணுப்ரியாவுக்கு ஏதாவது ஏற்பாடு செய்துவிட்டு, நானும் இறந்துபோன பின் நீ சந்தோஷமாக ஸன்னியாசங் கொள்ளலாமென்றாள்.

ப்ரபு தைர்யத்துடன் சொன்னார், "தாயே! நீ இவ்வளவு அதைரியமடைய வேண்டாம். அதிர்ஷ்டத்தை மாற்ற எனக்கு ஸாமர்த்தியம் கிடையாது. ப்ரஹ்மன் உனக்கும் எனக்கும் சேர்க்கை இவ்வளவு நாட்களுக்குத் தான் என்று எழுதியுள்ளான். இப்பொழுது இதற்குமேல் லக்ஷம் ப்ரயத்ணம் செய்தாலும்கூட என்னால் இருந்து கொண்டிருக்க முடியாது. பகவான் வாஸுதேவன் எல்லோரையும் ரக்ஷிக்கிறார். அவர் பெயர் விச்வாம்பரர் அல்லவா. உலகத்தின் பாணம், போஷணம் இவ்விரண்டும் அவருடைய பொறுப்பல்லவா. நீ உன் மனத்திலுள்ள அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட மோஹத்தை வெளியேற்றித் தள்ளிவிடு. நான் யதி தர்மத்தை கைக்கொள்ளும்படி ப்ரேமையுடன் மனப்பூர்வமாக அனுமதி கொடு," என்றார்.

தாயார் அழுதுகொண்டே, "உன் ஸ்வபாவம் குழந்தையிலிருந்தே எனக் தெரியும். உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைச் செய்தேவிடுவாய். அதை ஸாக்ஷாத் ப்ரஹ்மா வந்தாலும் நிறுத்தமுடியாது. உன்னிஷ்டம்போல் செய். எது உனக்கு சந்தோஷமோ அதே எனக்கும் சந்தோஷம். நீ எங்காவது சௌக்யமாயிரு. நீ க்ருஹதனாயிருந்தாலும் சரி, ஸன்னியாஸியாயிருந்தாலும் சரி, என்னால் உன்னை மறக்கமுடியாது. பகவான் உனக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும். நீ போகும்பொழுது என்னிடம் சொல்லாமல் மட்டும் போய்விடக் கூடாது," என்றாள்.

தன் தகப்பனார் வீட்டிலிருந்த விஷ்ணுப்ரியா இந்தசமாசாரம் கேள்விப்பட்டு துக்கமடைந்து வீடு வந்து சேர்ந்தாள். அன்று சீக்கிரமாகவே ப்ரபு கங்கையிலிருந்துஸ்னானம்செய்துவிட்டு பக்தர்களுடன் வீடு வந்தார். போஜனம் முடிந்ததும் பக்தர்கள் தங்கள் வீட்டுக்குப்போய் விட்டார்கள். ப்ரபுவும் தன்னுடைய சயன அறைக்குச் சென்று படுத்துக்கொண்டார்.

ப்ரபு விஷ்ணுப்ரியையத் தேற்றிக்

கொண்டே சொன்னார், "பார், உலகத்தில் எல்லா ஜீவன்களும் ப்ராரப்த கர்மத்திற்கு அதீனமானவைகளாக இருக்கின்றன. எவ்வளவு நாட்கள் வரை எவருக்கு யாருடன்கூட இருக்க லபிதம் உண்டோ அவர் அவருடன் கூட அவ்வளவு நாட்கள் மட்டுமே தான் கூட வஸித்து இருக்கமுடியும். எல்லோருக்கும் ஆச்ரயம் கொடுப்பவா அந்த ஸ்ரீ ஹரியே. நீ ஸதா க்ருஷ்ணனை சிந்தனை செய்து கொண்டிருப்பாயானல் நான் போவதால் உனக்குக் கொஞ்சம்கூட துக்கமே ஏற்படமாட்டாது." அழுதுகொண்டே விஷ்ணு ப்ரியையயானவள், "தேவரே உங்களைக்காட்டிலும் வேறான ஒரு க்ருஷ்ணன் இருக்கிறாரு என்ன. இதை இதுவரை நான் தெரிந்து கொண்டதே இல்லை. பின்னும் எனக்குத் தெரிந்துகொள்ள வேண்டிய இச்சையும் கிடையாது. எனக்கோ நீரே தான் ஈச்வரர், ஹரி, பரமாத்மா இன்னும் வேறு எவரும் சரி. தங்களுடைய ஸ்ரீ சரணங்களின் சிந்தனையைக் காட்டிலும் வேறு சிந்திக்கக்கூடிய பதார்த்தங்கள் என் த்ருஷ்டியில் ஒன்றுமே கிடையவே கிடையாதே. நான் தங்களுடைய சரண ஸேவையிலேயே என் வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறேன். எனக்கு ஒருவிதமான உலகசுகத்திலும் இச்சை கிடையாது," என்று சொன்னாள்.

மனதைச் கடினமாகச் செய்து கொண்டும், தன் துக்கத்தின் வேகத்தை முயற்சியுடன் தடுத்துக் கொண்டும் விஷ்ணு ப்ரியையயானவள், "தாயார் தங்களுக்கு ஸன்யாஸம் பெற உத்திரவு கொடுத்துவிட்டிருந்தால் நான் உங்கள் காரியத்தில் குறுக்க நிற்கவில்லை. தங்களுடைய சந்தோஷத்தில் தான் என்னுடைய சந்தோஷமும். தாங்கள் எந்த நிலைமையிலிருந்து கொண்டு ஸந்தோஷப்பட ஏற்பட்டாலும் அது எனக்கு ஸம்மதமே. ஆனல் ப்ராணேச்வரரே! என்னை மறந்து போய்விடக் கூடாது. தங்களுடைய ஸ்ரீ சரணங்களை இடைவிடாமல் த்யானம் செய்து கொண்டிருக்கும்படியான ஆசீர்வாதத்தை எனக்கு அளித்துவிட்டுச்செல்ல வேண்டும். சந்தோஷத்துடன் நான் எப்படி சொல்லக்கூடும், ஆனாலும் தங்களுடைய சந்தோஷத்திற்கு முன் எனக்கு எல்லாம் சம்மதமே. தாங்கள் சமர்த்தர், எனக்கு சுவாமி, ஸ்வதந்திரர், பதிதர்களின் உத்தாரகள். நானோ தங்கள் காலடியில் கிடக்கும் தாசி. யஜமானனின் சுகத்திற்காக வேலைக்காரி எல்லாவற்றையும்ஸஹித்துக் கொள்ளமுடியும். ஆனல் என் நினைவு இருக்கவேண்டும், இதுதான் என்னுடைய பிரார்த்தனை" என்று சொன்னாள்.

ப்ரபுவும் ப்ரியையை ப்ரேமையுடன் ஆலிங்கனம் செய்துகொண்டு அவளைப் பார்த்து "நீ புண்யசாலி, நீ ஒரு வீரபத்னிபோலவே இந்தப் பேச்சைபேசியிருக்கிறாய். இவ்வளவு தைரியம் உன் போன்றபதிபராயணையானஸதி,ஸாத்விகளான ஸ்திரீகள்தான் செய்யக் கூடும். நீ எப்பொழுதும் என் ஹ்ருதயத்தில் வைக்கப்பட்டிருப்பவளாகவே இருப்பாய். இப்பொழுது போவது எனக்குமிகவும் சுலபமே. எப்பொழுது செல்ல வேண்டுமோ அப்பொழுது சொல்லுகிறேன்," என்றார்.

இந்தப்படி இரவும் கழிந்தது. காலையில்எழுந்திருந்து அவர் நித்ய கர்மத்திற்குச் சென்றுவிட்டார். இப்பொழுது அவர் ஸன்னியாஸம் கொள்ளப் போகும் விஷயம் நவத்வீபம் பாவிவிட்டது. பக்தர்களின் வருத்தத்திற்கு எல்லையேயில்லை. ப்ரபு நித்யானந்தரிடம்தான் வீட்டைவிட்டுப் போகும் நாளை அறிவித்து, தன் தாயார், சித்தப்பா, சந்திரசேகர ஆசாரியர், கதாதரர், முகுந்தர், பிரஹ்மானந்தர் இந்த ஐந்து பெயர்களைத் தவிற மற்றவர்களிடம் சொல்லக்கூடாது என்று வற்புறுத்திச சொன்னார்.

இப்பொழுது ப்ரபு நவத்வீவத்தை விட்டுப்போகும் நாள் வந்துவிட்டது. அன்று பகல் எல்லா பக்தர்களும்

வந்து கூடினார்கள். ஸங்கீர்த்தனம் நடந்தது. பிறகு பக்தர்கள் விடை பெற்றுக்கொண்டு தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். இரவு எல்லோரும் படுத்துத் தூங்கிவிட்டார்கள். ஆனால் ப்ரபுவுக்குத் தூக்கம் எங்கிருந்து வரும். அவர் மெதுவாக எழுந்து பாட நித்ரையிலிருந்த விஷ்ணு ப்ரியை ஒருதரம் பார்த்து மனதில் ஆசீர்வதித்துவிட்டு மெள்ள வெளியில் வந்தார். சசிமாதா கதவண்டை பிரஞ்ஞை அற்றுக்கிடந்தாள். தாயாரை மனதினாலேயே நமஸ்காரம் செய்தார். வெளியில் வந்து கங்கைப்புரம் ஓட்டம் பிடித்துச்சென்றார். கங்கைத் துறையில் நின்று கொண்டு கத்கதஸ்வரத்துடன், "ஹே தர்மமே! நீ என்னுடைய எல்லாச்செய்கைகளையும் அறிந்து கொள்ளக்கூடியவராக இருக்கிறீர். நான் ஜீவர்களின் க்ஷேமத்திற்காக வீடுவாசலை விட்டுக் கொண்டிருக்கிறேன். விச்வமண்டலத்தைக் காப்பாற்றுகிறவரே! நான் என்னுடைய வயதான தாயாரையும், யுவதியான பெண் ஜாதியையும் உம்முடைய உதவியிலேயே விட்டிருக்கிறேன். உம்முடைய பெயர் விச்வம்பார் நீர் எல்லா ப்ராணிகளையும் காப்பாற்றுதீர், காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். ஆகையால் நான் கவலையற்று சென்று கொண்டிருக்கிறேன். என்று சொல்லி, நவத்வீபத்திற்கும்பகவதி பாகீரதிக்கும் நமஸ்காரம் செய்து கங்கையில் குதித்து நீந்தி அக்கரையை அடைந்தார். ஈர வஸ்திரத்துடன் கட்வா (கண்டக நகரம்)வில் கங்கைக் கரையிலுள்ள கேசவபாரதியின் ஆச்ரமத்தை அடைந்தார்.

விழித்துக்கொண்ட விஷ்ணுபிரியையும் சசீ மாதாவும் பிரபு சென்றுவிட்டதையறிந்து அடைந்த வருத்தம் சொல்ல இயலாது. பொழுது விடிந்ததும் ஊர் பூறாவும் இந்த சமாசாரம் பறவி எல்லா ஜனங்களும் வருத்தமுற்றார்கள்.

(தொடரும்)

தக்ஷிண ரெயில்வே

வட இந்தியாவுக்கு யாத்திரை செய்யுங்கள்

II, இண்டர், III வகுப்புகளுக்கு ஸ்டாண்டர்டு
சுற்றுப் பிரயாண டிக்கட்டுகள்

பல புண்ணிய ஸ்தலங்கள், முக்கிய நகரங்கள் அடங்கிய
நான்கு குறிப்பிடப்பட்ட யாத்திரா மார்க்கங்கள்

பிரயாணங்களை மூன்று மாத காலத்திற்குள்
முடித்துக்கொள்ளவேண்டும்

மற்ற விவரங்களுக்கு

அருகாமையிலுள்ள ஸ்டேஷன் மாஸ்டரைக் கேளுங்கள்

அல்லது

சென்னை, சீப் கமர்ஷியல் ஸுபரிண்டெண்டெண்டுக்கு எழுதுங்கள்

எமது
அபிமானிகளுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும்
மங்களகரமான தீபாவளி வாழ்த்துக்கள்

எங்களிடம் இரங்கூன் தேக்கு மரங்களும், சைஸ்களும் மைசூர் தேக்கு மரங்களும், சைஸ்களும், பிள்ளைமருது, கருமருது, வெங்தேக்கு, ஆயினி மரங்களும், சைஸ்களும், மாம்பலகைகளும் ஏராளமாய் ஸ்டாக் இருக்கின்றன. விலை சகாயமாய் தருகிறோம்.

நாங்கள் பெரிய கவர்ன்மெண்ட் கட்டிடங்களுக்கும், பெரிய கண்டிராக்ட்காரர்களுக்கும், பெரிய கம்பெனிகளுக்கும் பல வருஷங்களாய் மரம் சப்ளை செய்து வருகிறோம். உங்கள் தேவைக்கும் எங்கள் விலாசத்திற்கு எழுதவும்.

The Brilliant Trading Corporation Ltd.,

TIMBER MERCHANTS,
4-A, BASIN BRIDGE ROAD
MADRAS-1

Telegram: "YESKAR" Phone: 3876

எமது அபிமானிகளுக்கும் வாடிக்கைக் காரர்களுக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

அணங்குகளுக்கு அழகு அளிப்பது ஆடைகள்
ஆடைகளில் சிறந்தது பட்டாடைகள்
பட்டாடைகளில் சிறந்தது ஆரணி ஸில்க்
ஆரணி ஸில்க் கிடைக்குமிடம் ஆரணி ஸில்க் ஹவுஸ்

மற்றும் எங்களிடம் கொள்ளேகாலம், காஞ்சீபுரம் பட்டுச்
சேலைகளோடு உறையூர், துகிலி நூல் சேலைகளும்
மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

மைலாப்பூர் ஸன்னதி தெரு, மதறாஸ்

இதய ஒலி

எஸ் டி சீனிவாசன்

இரண்டாம் ஜாமத்தை அறிவிக்கும் கோட்டை மணி ஒலித்து நின்றது. மெதுவாகத் தன் படுக்கையினின்று எழுந்தாள் காஞ்சனா. சந்தடி செய்ய மல் கட்டிலை விட்டிறங்கினாள். அறையில் எரிந்து கொண்டிருந்த தூங்கா விளக்கின் ஒளியைச் சின்னதாக்கினாள்.

அறையின் ஒரு மூலையில் இருந்த பெட்டியைச் சப்தம் செய்யாமல் திறந்தாள், அதிலிருந்து கருநீல நிறத்தாவணி யொன்றை யெடுத்து மடித்துக் கையில் வைத்துக் கொண்டாள். பெட்டியை மூடிவிட்டு மங்கள சிம்மன் படுத்திருந்தகட்டிலண்டை வந்தாள். அவன் நன்றாகத்தூங்கிக் கொண்டிருந்தான்.

வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறினாள் அவள். அரண்மனை பூராவும் நித்திரையில் ஆழ்ந்திருந்தது. தோட்டத்துகதவைத்திறந்துகொண்டு வேகமாகத் தோட்டதினுள் நுழைதாள். அவள் கைகள் அந்தத் தாவணியைத் தலையில் போர்த்தின. கண்கள் சுற்று முற்றும் பார்த்தன. கால்கள் 'விடு விடு' என்று அந்தப் பளிங்கு மண்டபத்தை நோக்கி நடந்தன.

அரை நாழிகைக்குள் பளிங்கு மண்டபத்தை யடைந்த அவள், மண்டபத்தின் நடுவே பொருத்தியிருந்த பலகையைத் தள்ளினாள். உள்ளே காணப்பட்ட படிக்கட்டுகளில் இறங்கினான். பலகையை மறுபடியும் மூடினாள்.

அந்தப் பாதாள வழியில் ஒரே 'கும்' மிருட்டு. ஜாக்கிரதையாக அடிமேல் அடி வைத்து நடந்தாள் காஞ்சனா. அரை நாழிகை நேரம் கழித்து சற்று ஒளி தெரிந்தது. அவள் மறுபடியும் மேலே வந்தாள்.

ஊரை அடுத்த நந்தவனம் ;அடர்ந்த மரங்களின் ஊடே அஷ்டமிச் சந்திரனின் கிரணங்கள் திட்டுத் திட்டாய்த்தரையில் விழுந்தன. சுரங்க வாயிலை விட்டு மேலேறிய அவள், மறுபடியும் சுற்று முற்றும் ஒரு முறை பார்த்து விட்டு, அங்கு யாரும் இல்லை என்பதைத் தீர்மானப்படுத்திக் கொண்டு 'விடு விடு' வென்று அந்த ஒற்றையடிப்பாதை வழியாக நடந்தாள்.

'சல சல' வென்ற சப்தம் திடுக்கிட்டு நின்றாள், அவள். அடுத்த கணம் "காஞ்சனா! பயந்து விட்டாயா? நான் தான்..." பரிச்சியமான குரல்.

ஒரு ஆண் உருவம் ஒரு மரத்தடியிலிருந்து எழுந்து வந்தது.

"காஞ்சனாவுக்கு உயிர் வந்தது,

"யாரோ என்று நான் பயந்து

விட்டேன்"-காஞ்சனு. காஞ்சனுவும் அந்த வாலிபனும் இருட்டில் அந்த மாத்தடியில், அமர்ந்தனர்.

"காஞ்சனு! வெகு நாழியாக நான் காத்திருக்கிறேன்..."—ஒரு பெருமூச்சுவிட்டான் வாலிபன்.

"எல்லாரும் தூங்கின பிறகு வர வேண்டும். ஜாக்கிரதையாக வரவேடும்..." காஞ்சனு.

"நீ இங்கு வந்து போவது மகாராஜாவுக்குத் தெரியாதோ?..." — ஆணின் குரல்.

"தெரிந்தால் நம் இருவரையும், சும்மா விடுவாரா?...'

"விஷயத்தை மாத்திரம் வெளிவிடாதே, நம் திட்டம் நிறை வேறிவிட்டால் பிறகு..." — மெதுவாக அவன் குரலைத்தாழ்த்திக் கொண்டான். அதன் பிறகு அவர்கள் இருவரும் மிகவும் மெதுவான குரலில் சுமார் ஒரு நாழிகை நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

திடுமென காஞ்சனு எழுந்தாள்.

"ரொம்ப நாழிகையாகிவிட்டது... ராஜா விழித்துக்கொண்டால் ஆபத்து நான் வருகிறேன்..."—காஞ்சனு.

"நாளைக்கும் இதே.நேரத்தில் வந்துவிடு...நான் காத்துக் கொண்டிருப்பேன்...நாளைக்கு முடிவு..."

காஞ்சனு தலையையாட்டினுள்.

"இந்தா...இதை"—அவன் ஏதோ ஒன்றை அவளிடம நீட்டினுன். அவள் அதை வாங்கிமடியில் வைத்துக் கொண்டாள்.

சுரங்க வாயில் வரை அவன் அவளைக் கொண்டு விட்டுச் சென்றுன்.

அரண்மனையில் நுழைந்து தன் படுக்கையறையை அடைந்தாள் அவள். மங்களசிம்மன் ஒரு முறை புரண்டு படுத்தான். 'திக்' கென்றது காஞ்சனுவுக்கு.

தான் வெளியே போயிருந்தபோது தன் கணவன் விழித்துக் கொண்டு தான் கட்டிலில் இல்லாததை ஒரு



எப்பொழுதும் சருமத்திற்கு அழகையும் மிருதுத் தன்மையையும் அளிப்பதில் நம்பிக்கையானது "ரவி கிலிஸரின் சோப்". எல்லா வயதினரும் எல்லா காலத்திலும் உபயோகிக்கலாம்.

கூந்தல் அழகாக வளர வேண்டுமானுல், "ரவி வெஜிடபிள்" கூந்தல் தைலத்தை உபயோகியுங்கள். சுகந்த பரிமளமுடையது. மூளைக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து, வசீகரமாக வைத்திருக்கக் கூடியது.

வியாபார விவரங்களுக்கு:

திநியூ ஸ்டார் அண்ட் கோ.,

10, வைத்தியநாத முதலி தெரு.

தண்டயார்பேட்டை, சென்னை-21.

சமயம் கவனித்து விட்டானே? விஷயம் வெளிப்பட்டு விடுமோ?

ஆனால் அடுத்த கணமே அவள் மனம் சமாதானம் அடைந்தது. மங்கள சிம்மன் அசந்து தூங்குவதன் அடையாளமாய் பலத்த மூச்சு எழுந்தது.

தன் கட்டிலில் படுத்தாள் காஞ்சனா. கண்களை மூடிக் கொண்டாள்.

2

மெதுவாகக் கண்களைத் திறந்தான் மங்கள சிம்மன். தூரத்தில் இருந்த கட்டிலின் மேல் நாட்டத்தைச் செலுத்தினான். ஒரு பக்கமாகத் திரும்பிப் படுத்திருந்தாள் காஞ்சனா.

மங்களசிம்மனின் பற்கள் 'நறநற' வென்றன. அவளுக்கு முன் தான் படுக்கையில் வந்து படுத்துவிட வேண்டும். தான் அவளைத் தொடர்ந்து சென்று அவள் செய்கைகளையும், அவளும் அவனும் பேசியதையும், கவனித்ததை அவள் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அவன் அவளுக்கு முன்னால் வேகமாக, சுரங்கவழியில் ஓடிவந்து படுக்கையில் படுத்துக் கொண்டு, அவள் வந்தபோது நன்றாகத் தூங்குவது போல் பாசாங்கு செய்தானே தவிர, இன்னும் அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது.

'சண்டாளி! துரோகி! கள்ள நட்பு' அவன் உள்ளம் எரிமலைபோல் வெடித்தது.

அவள்மேல் அவன் உயிரையே வைத்திருந்தான்; அவளைப் பற்றி எப்படியெல்லாமோ உயர்வாக நினைத்து வந்தான். அவளை மணக்க எவ்வளவு எதிர்ப்புகளைச் சமாளித்தான். இத்தனையும் எதற்காக? அவள் அந்நிய புருஷனுடன் காதல் நாடகம் நடத்தவா?

தன்னுடன் அவள் தினம் எவ்வளவு கொஞ்சுகிறாள். எவ்வளவு அன்பாக இருப்பது போல் காட்டிக் கொள்கிறாள். இத்தனையும் மேல் பூச்சா? உள்ளே இருக்கும் விஷத்தை மறைக்க மோகனப் புன்னகையா? கட்டின புருஷன் அசந்துதூங்க, அவனை ஏமாற்றி விட்டு, சுரங்கப் பாதை வழியாகச் சென்று கள்ளக்காதலன் சந்திப்பா?'

அவன் உள்ளம் திடித்தது.

'இப்படிப்பட்டவளுக்குச் சரியான தண்டனை இதுதான்'—அவன் கைகள் படுக்கைக்கு அடியில் இருந்த உடை வாளை எடுத்தன. அவன் மெதுவாக எழுந்தான். அதை அவள் மார்பில் குத்திவிட. ஆனால் அடுத்த கணம் அவன் விவேகம் அவனைத் தடுத்தது.

'இவளை மாத்திரம் ஒழித்துக்கட்டு வதில் பிரயோசனம் இல்லை. அவனை யும் ஒரே வெட்டில் மேலுலகுக்கு அனுப்பவேண்டும். காதலர்கள் இரு வரும் மரணத்தையும் ஒரே சமயத்தில் தழுவட்டும்...நாளை இரவு இவளுடன் கூடவே போய் காரியத்தை முடித்து விடவேண்டியது. இப்படிப்பட்டவர் களுக்கு முடிவு அதுதான்' தீர்மானம் செய்து கொண்டது அவன் மனம்.

கண்களை இறுக மூடினான். அவன் ஆனால் தூக்கம் வரவில்லை.

* * *

மங்களபுரியின் சிம்மாஸனத்தில் அவன் ஏறும் போதே காஞ்சனை யைத் தன் பட்ட மகிஷியாக்கிக் கொள்ள உறுதி பூண்டான்.

காஞ்சனா மங்களபுரியின் சேனாதி பதி மகள். நல்ல அழகி. சிறு பிரா யம் முதலே அடிக்கடி அவள் மங்கள சிம்மனைச் சந்தித்திருக்கிறாள். இளம் இதயங்கள் இரண்டும் காதற்கயிற்றால் கட்டுண்டன. மங்களசிம்மனின் தாய ருக்கு மட்டும் தன் மகனுக்கு ஒரு இள வரசியை மணமுடிக்கவேண்டும் என் பது. ஆனால் மங்களசிம்மன் ஒரே பிடி வாதமாக காஞ்சனாவையே மணந் தான்.

சிறிது நாட்களாக அரசன் தன் மனைவி இரவு வேளைகளில், அடிக்கடி, படுக்கையில் காணாமல் இருப்பதைக் கவனித்தான். முதல் நாள் அவள் எங்கோ எழுந்து சென்றாள். வர வெகு நேரமாயிற்று. மன்னன் மனத் தில் சந்தேகம் மூண்டது. இன்று அவள் சென்றவுடன் எழுந்து அவ ளைப் பின் தொடர்ந்தான். நிதர்சன மாகக் கண்டான்.

3

மறுநாள் இரவு, அரசன் வழக்கம் போல் படுக்கையில் படுத்தான். அன்று தன் தீர்மானத்தை நிறைவேற்றி விட உறுதி பூண்டிருந்தான்.

எப்பொழுது அவள் புறப்படப் போகிறாள் என்று கவனித்துக் கொண்டே இருந்தான். உஷாராக இருந்த அவன் சமயத்தில் ஏமாந்து விட்டான். தூக்கம் அவனைச் சதி செய்து விட்டது.

சட்டென்று தூங்கத்திலிருந்து விழித்துக் கொண்டான். எதிர்க் கட்டிலைப் பார்த்தான். காஞ்சனா அங்கு காணப்படவில்லை, 'விடுவிடு' வென்று எழுந்தான், உடை வாளை எடுத்துக்கொண்டு பளிங்கு மண்ட பத்தை நோக்கி நடந்தான். அவன் மண்டபத்தின் மரக்கதவைத் திறப்ப தற்கும், சுரங்க வழியிலிருந்து காஞ் சனா வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

அடுத்த கணம் அவன் கை உயர்ந் தது; உடைவாள் உயர்ந்தது. காஞ் சனாவின் மார்பில் அது பாய்ந்தது.

மங்கள சிம்மன், பற்களை 'நறநற' வென்று கடித்தது, அந்த இரவின் நிசப்தத்தைக் கலைத்தது.

"துரோகி! கட்டின கணவனுக்குத் துரோகம் செய்த சண்டாளி!...அவன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த வார்த்தைகள் அந்த மண்டபத் தில் எதிரொலித்தன.

மங்களசிம்மன் அங்கு நிற்கவில்லை, தன் அறைக்கு வந்துவிட்டான். எரி மலை போல் கொதித்துக் கொண்டி ருந்த மனம் அப்போது தான் நிம்மதி கண்டது.

பொழுது விடியும் நேரம். ஒரு தாதி அவசரமாக ஓடிவந்தாள்.

"மகாராஜ்" மகாராணியை யாரோ குத்தி விட்டார்கள். தோட் டத்தில் பளிங்கு பண்டபத்தில் விழுந்து கிடந்தார்கள். நாங்கள் தூக்கிக் கொண்டு வந்து கட்டலில்

கிடத்தி இருக்கிறோம்......அவர்கள் விழுந்திருந்த இடத்தில் இது கிடந்தது..." என்று பரபரப்புடன் ஒரு மடிக்கப்பட்ட காகிதத்தை அரசனிடம் நீட்டினாள்.

அரசன் அதை வாங்கிக் கொண்டான். சகி போய்விட்டாள்.

விகிதத்தைப் பிரித்தான் அவன்.

அவன் தலை சுழன்றது.

அதில் மங்களபுரியின் படம் வரையப்பட்டிருந்தது; நான்கு பக்கங்களிலும் உள்ள மதில் . சுவர், கோட்டை வாயில்கள் குறிக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் வெளிப்புறத்தில் பீரங்கிகள் என்றும், மற்றொரு பக்கத்தில் குதிரைகள் என்றும். தெற்குப் பக்கத்தில் காலாட் படை யென்றும் குறிக்கப்பட்டிருந்தது. ஒரு இடத்தில் 'சுரங்க வழி' என்று கண்டிருந்தது. மங்கள சிம்மனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

அதே சமயத்தில் கோட்டைக் காவலாளி ஒருவன் மேல் மூச்சு வாங்க அரசன் முன் வந்து நின்று மண்டியிட்டான்.

"அரசே! ஜெயபுரியின் பெரிய சைனியம் நம் தலைநகர் மேல் படையெடுத்து வருகின்றன..." என்றான் இரைக்க இரைக்க.

அடுத்த கணமே முதலில் வந்த தாதி அங்கு வந்தாள்.

"மகாராஜ்! மகாராணி இப்பொழுதுதான் கண் விழித்தார்கள். தங்களை உடனே பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்..." என்றாள்:

ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாக நிகழ்ச்சிகள் கனவேகத்தி நடக்க அரசன் தன் மனைவியின் அறைக்குள் ஓடினான்.

காஞ்சனா ஈனஸ்வரத்தில், "என் அண்ணன் சக்தசிம்மன் இப்போது ஜெயபுரி படையில் இருக்கிறான். நம் தலைநகரைத் திடுமெனத் தாக்க வேண்டும் என்று ஜெயபுரி மன்னன் திட்டம் வகுத்திருக்கிறானாம்...தங்களிடம் அது விஷயமாகச் சொல்லி எச்சரிக்க என் அண்ணன் எண்ணினானாம். ஆனால் என் கல்யாண வியஷமாக அவன் என்னைத் தங்களுக்கு மணம் செய்விக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்த காரணத்தால் தாங்கள் அவனை தேசப்பிரஷ்டம் செய்து விட்டதால் அவன் இங்கு வராமல், ரகசியமாக என்னை வந்து நகரத்துக்கு வெளியில் சந்திக்கும்படி செய்தியனுப்பினான். சென்ற ஒரு வாரமாக தினம் இரவில் நான் ரகசியமாக அவனை சந்தித்துவந்தேன். அவர்கள் ஏற்பாடுகளை அவ்வப்போது சொல்லியும் அவர்கள் போட்டிருக்கும் தாக்குதல் திட்டத்தின் படம் ஒன்றையும் எனக்குக் கொடுத்தான். ஆனால் தாங்கள் என்னைத் தவறாக நினைத்துக் கொண்டு..." என்றான். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

மங்கள சிம்மன் சட்டென்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"காஞ்சனா! நான் மகா பாவி! தீர ஆராயாமல் உன்னைக் குத்திவிட்டேன்...காஞ்சனா, காஞ்ச!..."— அவன் இதயம் வெடித்து விடும் போல் விம்மினான்.

ஆனால் அவன் விம்மலுக்கு அவள் அளிதத பதில் கடைசி புன் சிரிப்பு தான்.

நாட்டுக்கு வா இருக்கும் அபாயத்தை முன் கூட்டியே அறிவித்து விட்டோம் என்றப் பெருமையுடன் அவள் நயனங்கள் அப்படியே நின்று விட்டன. அவளுடைய இதயஒலி அவன் காதுகளில் விழவேயில்லை. ○

எமது அடுத்த மாலா இதழ்
டிஸம்பர் முதல் வாரத்தில் வெளிவரும்

DEEPAVALI GREETINGS

PAPER & BOARDS

LARGEST STOCKISTS & DISTRIBUTORS,

GENERAL PAPERS LTD.,

ARMENIAN STREET, MADRAS-1

Branches:

BANGALORE CITY, COIMBATORE,
MADURAI, TIRUCHIRAPALLI,
and
TIRUNELVELI.

பல பத்திரிகைகளில் உயர்வான முறையில் விமர்சனம் செய்யப்பட்ட நாவல்
வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக்கொண்டு பின்னப்பட்ட நாவல்

சந்திரா

விலை ரூ. 1 0 0

By

S. S. சர்மா

சொற்ப பிரதிகளே மீதமுள்ளன.

இன்றே ரூ. 1 0 0 M. O. அனுப்பி வரவழைத்துப் படியுங்கள்.

விபரத்திற்கு எழுதுங்கள் :—

மாலா

சதர்ன் அவின்யூ—மதராஸ் 18 ஆள்வார்பேட்டை

சிறந்த அமெச்சூர் நடிகர்

தமிழ்நாட்டில் தற்காலத்தில் ஓர் மிகச் சிறந்த அமெச்சூர் நடிகர் டாக்டர். வி. ராமமூர்த்தியாவார். நல்ல ரூபம், கம்பீரமான குரல் நல்ல பயிற்சி இவை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற ஸ்ரீராமமூர்த்தி சிறந்து விளங்குவதில் ஆச்சர்யமில்லை. இன்னார் கலைத்துறையில் சம்பந்தப் பட்ட ஸ்ரீ. வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார், ஸ்ரீ. வி. வி. கோபலரத்தினம் முதலிய வர்களது உறவினர். வி. வி. ஜியின் நேர்மாப்பிள்ளை. ஆகவே கலைக் குடும் பத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீ. ராமமூர்த்தி. டாக்டர் தொழிலில் நல்ல கியாதி இவ ருக்கு. ஆனந்தவிகடன் முதலிய ஸ்தா பனங்களின் ஊழியர்களது தேக ஆரோக்கியம், மருத்துவப் பணி இவரி டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.



இவர் வருபவர்களிடம் பேசும் பாணியே அலாதி. மித 'பாபுலர்' டாக் டர். அலுவல்களுக் கிடையே நண்பர் களிடம் அளவளாவும் செய்வார். இவர் ஓர் அவதானிதான்.

1927-ம் வருடம் இவர் நடிக்க ஆரம் பித்து விட்டார். பூந்தமலி ஹைஸ் கூலில் தான் அங்குரார்ப்பணம். முதலில் இவர் ஸ்திரீ வேஷத்தில் பிரமாதமாய் நடித்தார் என்று சொன் னால் இப்போது நம்பமாட்டார்கள். 1930-ல் சென்னையிலே முதல் முதல் வள்ளியில் சுப்பிரமண்யராக நடித்தார். 1931 லிருந்து இவரது நடிப்பிற்கு மெருகு ஏறிற்று. பிரபல சுகுண விலாஸ சபாவில் பல சில்லரை வேஷங்களில் நடித்து முன்னேறினார். 1937 ல் எழும்பூர் டிராமடிக்சொஸைட் டியில் சேர்ந்தார். பல பிரதம பாகங் களில் நடித்து நல்ல பெயர் வாங்கி னார். பக்த ராவணாவில், நாரதர் ராவணன், பக்த கபீரில், கபீர் இவ் விதம் பாகங்களை ஏற்றுத் திறனை வெளிப்படுத்தினார். 1948 ல் கிருபா அமச்சூஸ் கோஷ்டியில் சேர்ந்தார். இப்போதும் அங்குதான் கலைப்பணி புரிகிறார்.

கல்கியின் சிவகாமியின் சபதத்தை தொடர் கதையாகப் படித்து ரஸித்த மக்கள் நாடகமாகக் கண்டு களிக்க ஸ்ரீ ராமமூர்த்தி ஒரு பொறுப்பாளி. இந் நாடகத்தில் நாகநந்தியாகத் தோன்றி பலவித ரஸபாவங்களிலே இவர் நடித் தது கண்களிலேயே நிற்கிறது.

ஆயனர் வீட்டில், சிவகாமியினிடம் சம்வாத சந்தர்ப்பத்தில், புலிகேசி யுடன் ஆக்ரோஷமான விவாதத்தில், கடைசியில் கையில் வெட்டுப்பட்டு பேசுகையில் இவர் நடிப்பு மறக்கக் கூடியது அல்ல. பல பாவங்களில் நடிக்கக் கூடியவர்.

ராமமூர்த்தியின் அபிப்பிராயங்கள் வரவேற்க வேண்டியவை. அவருக்கு பழைய கலாசாரம், பண்பு இவைகளை பரிகசிக்கும் கருத்துக்கள் பிடிக்காது. புதுமை என்று நல்ல பழக்கங்கள் கொள்கைகள் பலியிடப்படவிரும்பாத வர். ராமமூர்த்தியின் சேவை நாடக உலகிற்கு இன்றியமையாதது.

(ராஜு)

நான்காவது குழந்தைப் புத்தகக் காட்சி



குழந்தை எழுத்தாளர் சங்க ஆதரவில் வருஷா வருஷம் நடந்து வரும் குழந்தைப் புத்தகக் காட்சி இவ் வருஷம் சென்னை புரசைவாக்கத்திலுள்ள லேடி எம். ஸி. டி. எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. காட்சியில் சுமார் 400 தமிழ்ப் புத்தகங்களும், 800 ஆங்கிலப் புத்தகங்களும், சில ரஷ்ய, சீன மொழிப் புத்தகங்களும் இருந்தன. காட்சியைத் திறந்து வைத்த நிதி மந்திரி கனம் ஸி. சிப்பிரமணியம் அவர்கள் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட கண்ணைக் கவரும் கையெழுத்துப் பிரதிகளைப் பார்வையிடுகிறார். அவருடைய குமாரிகள் இருவரும் ஏதோ ஒரு புத்தகத்தை சுவாரஸ்யமாகப் பார்க்கிறார்கள். சங்கத் தலைவர் வை. கோவிந்தன் அவர்களும் காரியதரிசி வள்ளியப்பாவும் அருகிலே நிற்கிறார்கள்.

எல்லாவிதமான உயர்தர

அச்சு வேலைகளுக்கும்,

கலர் வேலைகளுக்கும்

எங்களிடம் கலந்து

ஆலோசியுங்கள்

★

சாந்தி பிரஸ்

135, பவழக்காரத் தெரு, சென்னை-1

Symbol of Prompt Service and Fair Price

For anything in automobile spare parts
and Accessories

Contact:

THE MOTOR & GENERAL TRADING COMPANY

Jobbers for GM Genuine Spare parts & Accessories
Also importers of parts for all popular Makes of cars

Head Office:
159, Mount Road, Madras-2

Branch:
Gandhinagar, Vijayawada

29 ஆண்டுகளாக

சென்னையிலேயே சிறந்து விளங்குவது

விஜயகர் மார்க்கு

சுருட்டுகள்.

காரம், குணம் மணம், நிறைந்தது

தயாரிப்பவர் :—

V. ஆறுமுக செட்டி

18, அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1

N. B. பொடி தயாரிப்பதற்கு உயர்ந்த புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

எமது வாடிக்கைக்காரர்களுக்கும், மற்றும் அபிமானிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

Phone: 88249

NEELA & CO.

DISPENSING CHEMISTS & DRUGGISTS

3/13, PONDY BAZAAR, T. NAGAR

Available here at moderate rate :

INFANT FOODS
PATENT MEDICINES
TOILET PREPARATIONS AND PERFUMES

We dispense all kinds of prescription with quality drugs by qualified and experienced pharmacies.

Our branch :

No. 63, Bridge Road, Gandhi Nagar, ADAYAR

பிழைக்கும் வழி *(உழவு)*

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லோரும் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற முதுமொழிக்கிணங்க உணவுக்காக உழைக்கிறான் இவ்விவசாயி.

பிழைக்கும் வழி (செம்படவன்)

விரிந்த கடலில் வலை விரித்து, வயிறு வளர்க்க விளையாடுகிறார்கள் இவ்வலைஞர்கள்.

பிழைக்கும் வழி (கம்பத்தின்மேல்)



"ககனத்தை எட்டும் கம்பத்தின்மீதேறி; கம்பிகளைச் சுற்றினலும் கவலையற்று வாழலாம்" என்பதை நிரூபிக்கிருர்கள் இத்தொழிலாளிகள்,

பிழைக்கும் வழி (குயவன்)



சக்கரத்தைச் சுற்றி சட்டிப்பானை செய்து காலச் சக்கரத்தை சுற்று
கிறார்கள் இவர்கள்.

பிழைக்கும் வழி (காவடி)

காவடி தூக்கி கால் கடுக்க நடந்து, காலம் கடத்துகிறார் இக் கிழவர்.

பிழைக்கும் வழி (தறி)



"நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை கண்டீர்" என்று இவர் தறியினிடையே உட்கார்ந்து நெசவு செய்து வாழ்கிறார்.



கருமமே கண்ணுகக்கொண்டு கட்டையைக் கடைந்து கருத்தோடு வாழ்கிருன்.

பிழைக்கும் வழி (செக்காட்டி)

சாண் வயிறு வளர்க்க, கடும் வெயிலில் செக்காட்டி செயல்புரிந்து சலியாது உழைக்கிறான்.

அன்புக்காணிக்கை

கே.ஆர்.கௌசல்யா

வெளியே ‘பிசு’ ‘பிசு’ என்று தூறிக் கொண்டிருந்தது.” நல்ல மழை வரதுக்குள்ளே நான் கிளம்பிடறேண்டா...” என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் நாராயணன்.

“எல்லாம் கொஞ்சநாழி இருந்துட்டுப் போகலாம். நீவந்து அரைமணி கூட ஆகலே...வீட்டிலே போய் வெட்டி முறிக்கப் போறே!...” என்று அவன் தோளைப்பிடித்து உட்கார வைத்தான் ரங்கராஜன்.

லேசான தூற்றல் படபட வென்று கனத்தது. ‘உஸ்’ ‘உஸ்’ என்ற பெருங்காற்றுடன் மழை சீறியடிக்க ஆரம்பித்தது.

“நல்லமழை வேறே பெய்ய ஆரம்பிச்சுடுத்து...நான் இன்னிக்கு வீட்டுக்குப் போனாப்போலேதான்...உங்காத்துக்கு வந்தா மட்டும் இரண்டு மணி நேரத்துக்குக் குறைஞ்சு போக முடியலேடா!...” என்று பொய்க் கோபத்துடன் கூறினான் நாராயணன்.

“ஸார்!...ஸார்!...” என்று யாரோ பலமாகக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு ஓடிச் சென்று கதவைத் திறந்தான் ரங்கராஜன். சுமார் முப்பத்தைந்து நாற்பது வ்யது மதிக்கக் கூடிய நடுத்தர வயது மனிதர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

“ஸார்! எங்கேயோ காரியமா போயிண்டிருந்தேன். வழியிலே மழை பிடிச்சுண்டுடுத்து... கொஞ்சம் இங்கே இருந்துட்டு மழை நின்னப்புறம் போகலாம்னு வந்தேன்...”—தலையிலிருந்து ஈரம் சொட்ட சைக்கிளைப் பிடித்தவாறு நின்று கொண்டிருந்தார் அவர்.

“அதற்கென்ன ஸார்!... வாங்களேன்...” என்று அவரைவரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான் ரங்கராஜன். சைக்கிளை ரேழியில் வைத்துவிட்டு அவர் வாயிற்புற அறைக்கு வந்தார். நேரே இழுத்துப் போட்டு அவரை உட்கார சொன்னான் ரங்கராஜன். தம் கையில் கொண்டு வந்திருந்த சாமான்களின் ஈரத்தைத் துடைத்துவைக்க ஆரம்பித்தார். பையிலிருந்து அவர் எடுத்த வஸ்துக்களில் கண்ணாடி டம்ளர் ஒன்று ரங்கராஜனின் கவனத்தைக் கவர்ந்தது.

“அட!... ரொம்ப நன்னாயிருக்கே ஸார் இது!...நிறம், மாதிரி எல்லாம் கவர்ச்சியாயிருக்கே!...” என்றான் ரங்கராஜன், அதைக் கையிலெடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தவாறே.

“ஆமாம் ஸார்!...ரொம்ப நாளாகவே சரித்திர சம்பந்தமான சின்னங்கள், வஸ்துக்கள் எல்லாம் சேகரிப்பதிலே எனக்கு ஆர்வம் ரொம்ப அதிகம்...அதுதான் என்னோட ‘ஹாபி’.

ஒரு ஆங்கிலோ இந்தியன் கிட்டே யிருந்து இத்தட்டம்ளரை வாங்கினேன் ராபர்ட் கிளைவ் இருந்த காலத்திலே அவன் தண்ணீர் குடிப்பதற்காக உப யோகித்துக் கொண்டிருந்தது இது... அவனிடம் பணம் கொடுத்து இதை வாங்கிக் கொண்டேன்...—'' அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது கூடத்தில் கு ழ ந் தை க ள் போடும் இரைச்சல் கேட்டு எழுந்து சென் றான் ரங்கராஜன்.

"யாராவது வந்திருக்கான்னு கூட அடக்கமா இல்லாம இப்படியா அட்ட காசம் பண்றது?...உம்!...புஸ்தகங் களை வ ச் சு ண் டு படியுங்கோ!... இப்போ நான் வந்து பார்ப்பேன்..." என்று அதட்டி விட்டு உள்ளே சென் றான். சில நிமிஷங்கள் கழித்து மறு படியும் அவன் கோபத்துடன் இரை வது கேட்டது.

"வரவர உனக்கு ஏன் தான் இப் படி புத்தி கெட்டுப் போச்சோ தெரியலே...அன்னிக்கே இது பத்தி ரமா இருக்கா இல்லையான்னு ஆயிரம் தரம் கேட்டேன்....நீயும் தலை ஆட்டினே. இப்போ இப்படி ஒரு மூலையிலே அலட்சியமா போட்டுக் கிடக்கிறது. இவ்வளவு முக்கியமான விஷயத்திலே இப்படியா அஜாக்கிர தையா இருக்கிறது?..."

"இல்லே... அன்னிக்கு ராஜு பீரோவிலே ஏதோ குடைஞ்சிண்டு இருந்தான்...அவனோட வேலையாகத் தான் இருக்கும் இது..." சாவதான மாகப் பதில் சொல்லும் ஒரு பெண் குரல் கேட்டது.

"...அதை நீயும் பார்த்துண்டு சும் மாத்தானே இருந்தே!...என் பழி யைக் கழிக்கச்க என்னமோ சால் ஜாப்பு சொல்றே!..." என்று உறு மிக் கொண்டே வாசல்புற அறைக்கு வந்தான் ரங்கராஜன். தான் கையில் எடுத்து வந்த பழைய கம்பளம்ஒன்றை மிகவும் சிரத்தையுடன் மடித்து பீரோ வைத் திறந்து அதில் பத்திரமாக வைத்து பூட்டினான்.

"என்ன ஸார்!...அது என்ன?... அவ்வளவு முக்கியமான வஸ்துவா?... கிழிஞ்சுபோன பழைய கம்பளமாக இருக்கு...அதை இ த் தனை ச ர் ம சிரத்தையா பீரோவிலே வச்சுப் பூட்டறளே!..." என்று வியப்புடன் கேட்டார் வந்த மனிதர். நாராயண னும் ரங்கராஜனின் செய்கையை ஆச்சரியத்துடனும், பிரமிப்புடனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆமாம் ஸார்!... எவ்வளவோ வருஷங்களாக பத்திரமாக வச்சுக்காப் பாத்திண்டு வரேன் அதை!...இப்படி அஜாக்கிரதையாக அதைப் போட்டி ருந்தால் எனக்கு ஏன் கோபம் வராது?..." என்று கூறும் போது ரங்காராஜனின் குரல் கம்மியது. அவ னுடைய கண்கள் கலங்கிக் காணப் பட்டன.

"ஏன்!...இப்படி வருத்தப்படும் படியாக அது என்ன அவ்வளவு முக்கியமான வஸ்து?...அதை எடுங்கோ பார்க்கலாம்...." என்று கேட்டார் வந்த மனிதர்.

"ஒன்னுமில்லே ஸார்!..." என்று துயரத்துடன் கூறினான் ரங்கராஜன்.

"ஏன்! அதை நாங்கள் பார்க்கக் கூடாதா?" என்று வியப்புடன் கேட் டான் நாராயணன்.

'உம்' என்று சோகத்துடன் கூடிய நீண்ட பெருமூச் சொன்றை எறிந்து கொண்டே பீரோவைத்திறந்து அந் தக் கம்பளத்தை எடுத்து மேஜையின் மேல் வைத்தான் ரங்கராஜன்.

ஒரு புறத்தில் தீய்ந்து கருகிப் போயிருந்த அந்தக் கம்பளத்தின் ஒரு மூலையில் ஏதோ பாஷையில் சில எழுத்துக்கள் காணப்பட்டன. அதைத் திருப்பித்திருப்பிப் பார்த்தனர் நாரா யணனும் வந்திருந்தவரும்.

"ஆமாம்...இது ஏன் ஒரு புறத் தில் கருகி யிருக்கிறது?..." என்றார் வந்தவர்.

"அது ஒரு பெரிய கதை!..." என்று கூறியவாறே கம்பளத்தைப் பீரோவில் வைத்து பூட்டிவிட்டு வந்து


போலிகள்
ஸ்டூடன்ஸின்
எதிரில்!
REGD. NO. 1515
SPECIAL
STUDENTS
ஸ்பெஷல்
NUT
எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பவர்கள்:-
P.R. வடிவேலு முதலியார்
28. முல்லாசாயபு தெருவு,
சௌக்கார் பேட்டை, மதரூஸ்.1.

உட்கார்ந்தான் ரங்கராஜன். அவன் முகத்தில் ஆரம்பத்தில் இருந்த குதூகலம் மறைந்து சோகம் அவனை ஆட்கொண்டதிலிருந்து அவன் தான் சொல்ல ஆரம்பித்த வரலாற்றுடன் லயித்து விட்டான் என்று தெரிந்தது.

* * *

மொகலாய சாம்ராஜ்யத்தில் அதிபதி என்று பேரும் புகழும் பெற்று வட இந்தியாவை ஷாஇன்ஷா ஷாஜஹான் ஆண்டு வந்த காலம் அது. அவனுடைப் போர்ப்படையில் சிறுவயதாக இருக்கையிலேயே வந்து சேர்ந்தான், அப்துல் ரஹ்மான். தன்னுடைய முயற்சியாலும், உழைப்பாலும் படிப்படியாக உயர்ந்து கொண்டு வந்த அவன் வெகு சீக்கிரத்திலேயே குதிரைப் படைத்தலைவனாக ஆகி ஷாஜஹானின் அன்பையும், மதிப்பையும் பெற்று விட்டதோடு அவனுடைய மகள் ஜஹனாராவின் உள்ளத்தையும் கவர்ந்து விட்டான்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் அதிபதியின் பெண்ணை மணந்து கொள்ளக்கூடிய அந்தஸ்து உள்ள பிள்ளை அந்த ராஜ்யத்தில் கிடைக்கமாட்டாளு ஆகையால் அந்தக்காலத்தில் அனேகமாக மொகலாய வம்சத்தில் பிறந்த பெண்கள் மணம் செய்து கொள்ளாமல் கன்னிகளாகவே இருந்துவிடுவது வழக்கம். ஷாஜஹானின் பெண் ஜஹானராவும் இந்த ஒரு காரணத்தினாலேயே மணம் செய்து கொள்ளாமல் கன்னிப் பெண்ணாகவே இருந்தாள். சிறுவயதில்—அப்துல் ரஹ்மான் ஷாஜஹானின் படையில் வந்து சேர்ந்த புதிதில்—அவள் அவனுடன் பழகிவந்ததைத் தவறாக நினைக்காமல் விட்டு வந்த ஷாஜஹான், ஜஹானரா மணப்பருவம் எய்திய பின்பு அவனுடன் இழைந்து பழகியதைத் துளிக்கூட விரும்பவில்லை. நாளடைவில் அவர்களுடைய உள்ளங்கள் ஒருவரையொருவர் மணக்க விரும்பம் கொண்டுள்ளன என்பதை நன்றாகப் புரிந்து கொண்டபோது அவன் அளவற்ற சினமும் வெறுப்பும் கொண்டான். மொகலாய சாம்ராஜ்யத்தின் அதிபதி என்று பேரும் புகழும் பெற்றுசிறந்து விளங்கும் தன்னுடையமகளின் அன்பு கேவலம் ஒரு குதிரைப் படைத்தலைவனின் பால் செல்வதாவது அவனை மணந்து கொள்ள அவள் விருப்பம் கொள்ளுவதாவது என்று அவன் அடிப்பட்ட சர்ப்பம் போல் சீறினான்.

ஜஹானரா அப்துல் ரஹ்மானைச் சந்திக்கவே கூடாது என்று கண்டிப்பான தடையுத்திரவு விதித்தான். அரண்மனை அந்தப்புரத்தை விட்டு அவள் வெளியே எங்கும் செல்ல முடியாதவாறு காவற்காரர்களை அமர்த்தினான். தன் தந்தையின் உத்தரவு கிடைக்காவிட்டாலும் கூட எப்படியாவது சாம்ராஜ்யத்தை விட்டு வெளியே பாரசீகம் சென்று மணந்து கொள்வது என்று திட்டமிட்டிருந்த ஜஹானரா, அப்துல் ரஹ்மானின் எண்ணம் தவிடு பொடியாகியது. உள்ளுக்குள்ளேயே வெம்பி வெடித்துக் கொண்டிருந்தன அன்பால் பிணைக்கப்பட்டிருந்த இரு உள்ளங்களும்.

இதனிடையில் தான் அப்துல் ரஹ்மான் காஷ்மீரத்திலிருந்து கொண்டு வந்த உயர்ந்த ஆட்டு ரோமத்தைக் கொண்டு கம்பளம் ஒன்று நெய்யத் தொடங்கினான். தன் கைத்திறமையையெல்லாம் ஒன்றாகத் திரட்டி உருவாக்கிய அந்தக் கம்பளத்தை ஜஹானராவுக்குத் தன் அன்புக்காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டுவிட்டான் அவன். நாட்கள் பல கடந்தன. கண்ணைக் கவரும் வனப்புடன் அழகிய கம்பளம் ஒன்றை நெய்துமுடித்த அப்துல் ரஹ்மான் அதை எடுத்துக் கொண்டு ஒருநாள் ரகசியமாக ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனையில் காவல் காத்துக் கொண்டிருந்த காவற்காரர்களுக்குப் பணம் கொடுத்துச் சரிப்படுத்திவிட்டு அந்தப்புரத்தையடைந்து விட்டான். எவ்வளவோ

காட்களுக்குப் பிறகுஅவனைச் சற்றும் எதிர்பாராத சமயத்தில்சந்தித்துவிட்ட சந்தோஷத்தில் ஜஹானராவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அளவிட முடியாது உணர்ச்சிப் பெருக்கால் அவள்பேசும் சக்தியைக் கூட இழந்து ஒரு கணம் சிலையேபோல் உட்கார்ந்திருந்தான். அடுத்த கணம், "அப்துல்!..." என்று அழைத்த அவள் கண்களில் கண்ணீர் துளித்தது. தொண்டையை அடைத்துக் கொண்டது அப்துல் ரஹ்மானின் கண்களும் கண்ணீரைக்கக்கின."... ஜஹானரா!...உன்மேல் நான் வைத்துள்ள அன்பின் அடையாளமாக இந்தக் கம்பளத்தை உனக்குத்தர வேண்டும் என்பதற்காகவே காஷ்மீரத்திலிருந்து வரவழைத்த உயர்ந்தரகஆட்டு ரோமத்தைக் கொண்டு என்கையாலேயே நெய்தேன். "இதோ!..." அவன் நீட்டிய அன்புக் காணிக்கையைப் பெற்றுக் கொண்டபோது ஜஹானராவின் கண்களில் துளிர்த்து நின்ற கண்ணீர் முத்துக்கள் அந்தக் கம்பளத்தில் விழுந்து உருண்டன.

"...ஜஹானரா!... நாம் எப்படியாவது உன் தந்தைக்குத் தெரியாமல் இந்த அரண்மனையை விட்டுவிட்டு...'? என்று அப்துல் ரஹ்மான் சொல்லிக் கொண்டிருக்கும் போது அந்தப்புர வாயிலுக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

வந்து கொண்டிருந்தவர் ஷாஜஹான். எரிமலையே புரண்டு தம் தலையில் விழுந்துவிட்டதைப் போன்ற பிரமை ஏற்பட்டது ஜஹானராவுக்கும், அப்துல் ரஹ்மானுக்கும் பயம் பீறிட்ட மொழியும் விழிகளால் சுற்றுமுற்றும் விழித்துப் பார்த்த அவள் "அப்துல்!... அப்துல்!... அப்பா வருகிறாரே!...நீங்கள் இங்கிருப்பது தெரிந்தால் உங்கள் தலை போய்விடுமே!..." என்று தடுமாறினாள்.

சட்டென்று அங்கு சற்றுதூரத்தில் வைக்கப்பட்டிருந்த வென்னீர்போடும் பெரிய அண்டா அவள் கவனத்தைக் கவர்ந்தது. அதைச் சுட்டிக்காட்டி அதற்குள் புகுந்து கொள்ளும்படியாக அப்துலுக்குக் கூறினாள் அவள். அப்துல் ரஹ்மான் மின்னல்வேகத்தில் அவள் சொன்னதை நிறைவேற்றினான்.

அந்தப் புரத்திற்குள் நுழைந்த ஷாஜஹான் அங்கு நின்றிருந்த தாதிப் பெண்களை அழைத்து ஸ்நானம் செய்வதற்காக வென்னீர் போடும்படி உத்தரவிட்டு நேராக ஜஹானரா நின்றிருந்த இடத்தை நோக்கி வந்தான். விறகைத்திணித்து அந்தத் தாதிப் பெண் அண்டாவிருந்த அடுப்பில் தீ மூட்டியபோது. ஜஹானராவுக்குத் தான், அந்த அரண்மனை எல்லாமே தலைக்கீழாகச் சுற்றுவது போன்ற

இந்தியாவின் தலைசிறந்த
இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்

ஓரியண்டல்

தீபாவளி வாழ்த்துகள்
புதுவருட நல்லாசிகள்
கூறுகிறது

ஓரியண்டல் கவர்ன்
மெண்ட் செக்யூரிடி
லைப் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.,

ஓரியண்டல் பயர்
அண்ட் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.,

தலைமைக் காரியாலயம் பம்பாய்-1

DEEPAVALI ATTRACTION

VISIT our SHOWROOM early for your DEEPAVALI PURCHASES. You will find a rich collection of latest BENARES GEORGETTE, MYSORE CREPE AND CHIFFON SAREES.

THE PRICE & QUALITY OFFERED ARE SO ATTRACTIVE THAT THE WHOLE TOWN WILL BE TALKING ABOUT IT.

BUY EARLY AND BUY THE BEST.

Benares SAREE MUSEUM

191, Mount Road,	'Phone 86555	MADRAS-2
Big Bazaar,	'Phone 456	COIMBATORE

பிரமை ஏற்பட்டது. அண்டாவிற்குள் புகுந்து கொண்டு மூச்சு முட்டிப் போய் திணறும் அப்துலின் கதியை எண்ணி ஜஹானராவுக்கு உடல் வேர்த்துக் கொட்டியது. கைகால்கள் நடுங்கத் தொடங்கின. அப்துல் ரஹ்மான் தனக்களித்த கம்பளத்தை மறைத்து வைக்கக் கூட முடியாமல் திணறினாள் அவள். ஷாஜஹான் அந்தப்புரத்தில் நுழைந்த குற்றத்திற்காகத்தரும் தண்டனையை அடைந்து அவமான மடைவதைவிட கொதிக்கும் வெந்நீரில் இருந்து அவன் இறப்பதே மேல் என்று அவமானத்திற்கு அஞ்சிய அப்துல் உடல்வெந்து உயிரை விட்டுவிட்டான்.

''ஜஹானரா!...என்று அன்புத் ததும்ப அழைத்து ஏதோ சொல்வதற்காக வாயைத்திறந்த ஷாஜஹானின் பார்வை சட்டென்று அந்தக் கம்பளத்தின் மீது சென்றது. அவன் உற்சாகமெல்லாம் ஒரு கணத்தில் பறந்து விட்டது. பரபரப்புடன் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த அவன் அதன் ஒரு ஓரத்தில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களை உற்றுக்கவனித்தான். அவனுக்கு விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை. கோபத்தினால் அவன் கண்கள் சிவந்தன. பற்களை நறநறவென்று கடித்தவாறே சற்றுத் தூரத்தில் எரிந்து கொண்டிருந்த அடுப்பை நோக்கி அந்தக் கம்பளத்தைச் சுழற்றி எறிந்து விட்டு ஜஹானராவை வெறித்துப் பார்த்துவிட்டு விடுவிடு வென்று சென்றுவிட்டான். அடுக்கடுக்காக ஏற்பட்ட அதிர்ச்சிகளைத் தாக்க முடியாமல் ஆ!...வென்று அலறிக் கொண்டே ஜஹானரா மயங்கிக் கீழே விழுந்து விட்டாள். கொதிக்கும் வெந்நீரில் வெந்து கொண்டிருந்த அப்துல்லின் உடலைப் போலவே அவன் ஆசையுடன் ஜஹானராவுக்காக நெய்த கம்பளமும் தீயில் கருகிக் கொண்டிருந்தது.''

இந்த இடத்தில் கதையைச் சற்று நிறுத்திய ரங்கராஜன் கண்களிலிருந்து மடைதிறந்த வெள்ளம் போல் பொங்கி வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் தொடர்ந்தான். நாராயணனும், வந்திருந்த மனிதரும் சூள் கொட்டிவிட்டு நீண்டதொரு பெருமூச்சை எறிந்தனர்.

''அவ்வளவு நேரமும் அங்கே நடந்தவைகளைச் சற்றுத் தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த அரண்மனை வேலைக்காரன் ஹுசேன் வேகமாக ஓடி தீய்ந்து கொண்டிருந்த கம்பளத்தை வெளியே இழுத்துப் போட்டு நெருப்பை அவித்துவிட்டு அதைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டான்,

அரண்மனையிலிருந்து கிடைத்த அதை ஒரு கிடைத்தற்கரிய பொக்கிஷமாகக் கருதிய ஹுசேன் அதை மிகவும் பத்திரமாகக் காப்பாற்றி வந்தான். அவனுக்குப் பிறகு அவனுடைய பிள்ளை, பேரன் கொள்ளுப் பேரன் என்று வம்ச பரம் பரையாக அந்தக்கம்பளமும் வரலாறும்கைமாறிக் கொண்டே வந்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத் தேழாம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்து பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது. என்னுடைய தந்தை டெல்லியில் இருந்தார். அப்போது அவரிடம் வேலையாக இருந்தான் முஸ்லீம் வேலைக்காரன் ஒருவன். அவன் ஹுசேனின் பரம்பரையில் வந்தவன். அப்போது அவனிடம் தான் அந்தக் கம்பளம் இருந்தது. டெல்லியை விட்டு விட்டுத்தான் காஷ்மீருக்கு தன் உறவினர்கள் இருக்கு மிடத்திற்குச் செல்லப் போவதாகவும், அதற்குச் செலவிற்குக் கூடப் பணம் இல்லாததால் வேறு வழியின்றி வருத்தத்துடன் அந்தக் கம்பளத்தை என் தந்தையிடம் விற்று பணம் வாங்கிக் கொண்டான்.

எவ்வளவோ வருடங்களுக்கு முன்பு நெய்யப்பட்டதால் பாழகி அங்கங்கே உருமாறிப் போயிருந்த போதிலும் கூட ஷாஜஹான் காலத்துக் கம்ளம்ப

என்ற ஒரு ஆசையில் தான் அதை என் தந்தை வாங்கினார்.

எனக்கும் தங்களைப் போலவே பழங்கால சரித்திர சம்பந்தமான சின்னங்களைச் சேர்ப்பதில் ஆர்வம் உண்டு. அதனால் என் தந்தையிடமிருந்து வாங்கி—ஷாஜகான் காலத்திய கம்பளமாகிய இந்த கிடைத்தற்கரிய வஸ்துவை நான் என்னுடைய பொக்கிஷம் போல் காப்பாற்றி வருகிறேன். இதைப் பார்க்கும் போதெல்லாம் என் நினைவில் அப்துல் ரஹ்மானும், ஜஹானாராவும் நிழலாடாமலிருப்பதில்லை; அவர்களுடைய சிதைந்த காதலுக்காக என் கண்கள் கண்ணீர் வடிக்கத்தவறுவதும் இல்லை.”

* * *

கதையை முடித்து விட்டு நிமிர்ந்தான் ரங்காராஜன். சிறிது நேரம் அவர்களிடையே அமைதி நிலவியிருந்தது. “ஸார்!...நான் ஒன்று கேட்கிறேன்...” என்று ஆரம்பித்தார் வந்தவர்.

“என்ன?...” என்றான் ரங்காராஜன்.

“வந்து...நான் கேட்கிறேனென்று நீங்கள் கோபமோ, வருத்தமோ கொள்ளக் கூடாது...உங்களுக்கு விருப்பமிருந்தால் அந்தக் கம்பளத்தை ...எனக்கு...விலைக்குக் கொடுக்க முடியுமா?...” தயங்கித்தயங்கிக் கேட்டார் அவர்.

“...நான் அதை என் ஆஸ்தி போலக் காப்பாற்றி வருகிறேன். ...அதை நீங்கள் கேட்டால்...என்ன செய்வது?...” என்று கட்டைவிரலால் தரையைக் கீறியவாறே சொன்னான் ரங்காராஜன்.

“இல்லை...நான் உங்களுக்கு ஐம்பது ரூபாய் வரை கொடுக்கத் தயாராயிருக்கிறேன்...உங்களுடைய இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்...” கெஞ்சினார் அவர். அவர் மன்றாடியதைப் பார்ப்பதற்கு ரொம்ப சங்கடமாக இருந்தது ரங்காராஜனுக்கு. பீரோவைத்திறந்து அந்தக் கம்பளத்தைக் கையில் எடுத்து அதை ஏக்கம், வருத்தம், ஆசை முதலியன பிரதிபலிக்கும் பார்வையால் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு என்ன செய்வதென்று தெரியாமல் நாராயணனைத் திரும்பிப்பார்த்தான். அதற்குள் வந்திருந்தவர் ரூபாய் நோட்டுக்களை எண்ணி மேஜைமேல் வைத்து விட்டார்.

“ஸார்!... யோசிக்காதீர்கள்!... இதைக் கொண்டு போய் என் சிநேகிதர்களிடம் காண்பித்து, இந்தவரலாற்றையும் கூறினால் அவர்கள் ரொம்ப சந்தோஷப்படுவார்கள்... அவர்களிடம் கிடைத்தற்கரிய ஒரு பொக்கிஷம் எனக்குக் கிடைத்து விட்டது என்று சொல்லிக் காண்பிக்க நான் ஆசைப் படுகிறேன். இது எத்தனை நாள் இருந்தாலும் உங்கள் பீரோவில் தங்கத்தானே போகிறது?—”— விடாப்பிடியா கேட்டார் அவர்.

அவ்வளவு நாட்களோடு உயிர் போல் காப்பாற்றிவந்த அந்தக் கம்பளத்தை அவரிடம் கொடுத்தபோது ரங்கராஜனின் முகம் வாடியது. கன்றைப் பிரியும் பசுவைப்போல் அவன் ஏக்கத்துடன் ரூபாயை எடுத்துக் கொள்ளப் பிடிக்காமல் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

‘சோ’ வென்று கொட்டிக் கொண்டிருந்த மழை நின்றது.

நான் போய்ட்டு வரேன் ஸார்!... உங்க உதவிக்கு மிகவும் நன்றி...” என்று எழுந்தார் வந்தவர். கம்பளத்தைப் பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டு சைக்கிளில் ஏறிக் கொண்டு கிளம்பினார். ஏதோ ஒரு விருப்பமில்லாத—தவிர்க்க முடியாத காரியத்தைச் செய்து விட்ட முகபாவத்துடன் வாயில் வரை வந்தது. அவரை வழியனுப்பினான் ரங்காராஜன். சைக்கில் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு வாசற்கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தான் ரங்காராஜன்.

“ஏண்டா! ரங்காராஜா!... என்

மூளை ஒரேயடியாகச் குழம்பிப் போயிருக்குடா!... உங்கப்பா எங்கேயோ கும்ப கோணத்தில் தானேடா சாகிற வரைக்கும் இருந்தார்!...இவ்வளவு ஆப்த நண்பனுன என்கிட்ட கூட அவர் டெல்லியில் இருந்ததை நீ சொல்லவேயில்லையே...',— என்றான் நாராயணன் பாதிக் கோபத்துடனும் கலவரத்துடனும்.

"டேய் நாராயணு!...நீ ஒரு சரியான 'மூனுடா'. என்று சொல்லி விட்டு விழுந்து விழுந்து சிரித்தான் ரங்கராஜன். நாராயணன் திகைப்புடன் உட்கார்ந்திருந்தகன்.

"ஏண்டா!...நீயும் இப்படி என் கட்டுக்கதையை நம்பி ஏமாறுவேன்னு நான் கனவில் கூட நினைக்கலே... கொஞ்ச நாழி முந்தி வந்ததே ஒரு பைத்தியம்...அது ஒருகிளாஸ் டம்ளரைக் காண்பிச்சு, அது 'கிளேவ் தண்ணீர்' குடிக்க உபயோகிச்சது்னு யாா கிட்டேருந்தோ விலை கொடுத்து வாங்கினேன்னு சொல்லச்சேயே அதன் அசட்டுத்தனம்நன்ன வெளியாயிடலையா?... அப்போ திடீர்னு எனக்கு ஒரு யோசனை தோணித்து...எங்காத்திலே பழைய கம்பளம் ஒண்ணு இருந்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அது எப்போ நெருப்புப் பட்டுத் தீய்ஞ்சு போச்சோ தெரியலே...உள்ளே அப்போ எழுந்து போய் என் 'ஒய்ப்' கிட்டே ரகசியமா விஷயத்தைச் சொல்லி விட்டு அதட்டற மாதிரி பாவனை பண்ணிட்டுக் கம்பளத்தையும் எடுத்துண்டு வந்தேன். அந்த பிரகஸ்பதி என்ன சொன்னுலும் நம்பிடும்னுதான் அதை வச்சுண்டு கதையும் ஒண்ணு சொல்லி நம்ப வச்சேன் ..வந்த சிரிப்பை அடக்கிண்டு எங்க அப்பா, அம்மா செத்துப் போனதை யெல்லாம் நினைச்சுக் கண்ணீரை வரவழைச்சுண்டு நாடகம் நடிக்கப்பட்ட பாடு வீணுகாதுன்னு எனக்கு நிச்சயமா தெரியும்...அந்த நம்பிக்கை வீணுகவும் போகலே...இந்த இருபதாவது நூற்றாண்டிலேயும் இப்படிப்பட்டப் பிரகஸ்பதிகள் சிலர் இருக்கிறதைத் நினைச்சாத்தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது...ஆனுல் எவ்வளவோ கெட்டிக்காரனுன நீயும் அல்லவா நான் அடிச்ச 'கப்'பை நம்பிட்டே!..."

"டேய்!... ரங்கராஜா!... உன் மூளையே அபாரம்டா!..." என்று அவன் முதுகில் ஒரு ஷொட்டு கொடுத்த நாராயணன், "ஆமாம்! நாளைக்கு விஷயம் தெரிந்த அந்த ஆசாமி உன்னை தேடிண்டு வரமாட்டார்னு நீ கண்டாயா?... அப்போ என்ன செய்வே?..."—என்றான் திகிலுடன்.

"எனக்குத்தான் பம்பாய்க்கு 'டிரான்ஸ்வர்' ஆகிடுத்தே...நாளைக்குப் புறப்படப் போறேன்...அவ்வளவு தெரியாதா எனக்கு?...அந்த அசடு திரும்பிவந்தா வீட்டு வாசலிலே நாளைக்குத் தொங்கப்போற 'டுலெட்' போர்டு தான் அதுக்குப் பதில் சொல்லப்போறது...."—என்று கூறிவிட்டு உரக்கச் சிரித்தான்.

ரங்கராஜனின் சாமர்த்தியத்தை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை நாராயணனுக்கு.



அக்கௌண்ட் புத்தகமும் கையுமாக மானேஜர் அறையிலிருந்து வெளியே வந்த ரகுராமன், தன்பால் எளனப் பார்வையைச் சிதறவிட்டுக் கொண்டு நிற்கும் மற்ற குமாஸ்தாக்களைக் கவனியாதவன் போல தன்னிடத்திற்குச் சென்று அமர்ந்தான்.

அருகிலிருந்த கிருஷ்ணமூர்த்தியிடம் சுந்தரம் கூறினான். 'டேய் கிட்டு, பார்த்தாயா ரகுராமனை?. முன்பிருந்த ரகுவாகவா இப்போது இருக்கிறான்? நிமிஷத்திற்கொரு முறை மானேஜர் அறைக்குப் போவதும் வருவதுமாக வல்லவா இருக்கிறான்?...மானேஜருக்கு ஏதேனும் சந்தேகம் வந்தால் இந்தக் கத்துக்குட்டி ரகுவைக் கூப்பிடுகிறாரே தவிர மற்ற அனுபவம் மிக்க குமாஸ்தாக்களை லட்சியம் செய்கிறாரா?......"

"இது தொலைந்து போகிறதடா, சுந்தரம். ரகு நம்மையெல்லாம் லட்சியம் செய்யாவிட்டால் கூடப் பாதகமில்லை. நம்ப கிட்டுவிடம் அவனுக்கென்ன விரோதம்? ரகுவுக்கு வேலை வாங்கிக் கொடுத்ததே இவன் தானே?...அந்த நன்றியாவது அவனுக்கு இருக்க வேண்டாமா?..." இது ராமநாதன்.

"ஹூம், நன்றியாவது பன்றியாவது! அண்ணன் தம்பிகளுக்குள்ளேயே உறவு சுமுகமா இல்லாத இந்தக் காலத்திலே அதெல்லாம் எதிர்பார்க்கப்படாதப்பா...சுயநலம் முன்னேற்றத்திற்கு ஓரளவு அவசியமல்லவா?—மிஸ்டர் ஆபத்பாந்தவனின் அறிவுரை இது!

"அட, அது சரி ஐயா! ரகு முன்னேறுவதை யாரும் தடுக்கவில்லையே? கிருஷ்ணமூர்த்தியுடன் சிரித்துப் பேசிக்கொண்டு நட்பு முறையிலே பழகக் கூடக்கூடாதா? 'தானுண்டு, தன் வேலையுண்டு' என்பது போல என் இந்தப் பூனைவேஷம்? கிருஷ்ணமூர்த்தியிடம் வெகு அன்பாக இருந்த மானேஜர் இப்போது அவனிடம் அவ்வளவு அன்பாகப் பேசுவதே

இல்லையே—சுந்தரத்தின் முடிவுரை இது.

கிருஷ்ணமூர்த்தி சிந்தனையி வாழ்ந்தான். அவல நிலையிலிருந்த ரகுராமனை இன்றைய நிலைக்கு—அமர நிலைக்கு என்று தான் சொல்லவேண்டும்—கொண்டு வந்தவனே கிருஷ்ணமூர்த்திதானே! அவனைக்கூட ரகு அலட்சியம் செய்வது என்றால்......?

கிருஷ்ணமூர்த்தியின் உள்ளம் துடித்து பரந்து விரிந்து விசுவரூபம் எடுத்தபோது, முதல் காட்சியாக பங்கஜா ஹோட்டல் தான் அவன் அகக் கண்களில் பட்டது.

* * *

இன்று போல அன்றும் கிருஷ்ணமூர்த்தி ஒரு பிரிம்மசாரி தான். பிரும்மசாரி என்றால் அறைவாசம், ஹோட்டல் சாப்பாடு, கவலையற்ற வாழ்வு என்று தானே அர்த்தம்! இந்த நியதிக்கு உட்பட்டுத்தான் இருந்தான் கிருஷ்ணமூர்த்தியும்.

ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்கிறதா? மேலும், ஒரே ஹோட்டலில் பல மாதங்கள் சேர்ந்தாற் போல் உணவருந்தினால், அர்த்தமில்லாத அலுப்பு வேறு தட்டத் தொடங்கி விடுகிறது! இந்த அலுப்பை மாற்றிக் கொள்ள புது ஹோட்டலை நாடிச் செல்லவேண்டும். சில மாதங்களில் அந்த ஹோட்டல் பேரிலும் வெறுப்பு! பின், வேறு ஒரு ஹோட்டல்! முடிவில்லாத இந்த சக்கிரத்தில் கிருஷ்ணமூர்த்தியும் அகப்பட்டுக் கொண்டு தானிருந்தான்.

வாழை மரங்களாலும் மாவிலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டு, புத்தகம் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருந்த பங்கஜா ஹோட்டல், நாகரீகப் பிசாசின் கர்ண கடூரக் குரலான ஒலிபெருக்கியின் மூலம். மனைவி மக்களின்றி உப்பு சப்பற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த பிரும்மசாரிக் கட்டைகளை "வா வா" என்று அன்பு சுரக்கக் கூவி அழைத்தது ஒரு நாள். இன்றைய தினம் மட்டுமாவது நல்ல சாப்பாடாகச் சாப்பிடலாமே" என்ற எண்ணத்தில் உள்ளே புகுந்த கிருஷ்ணமூர்த்தி, என்ன காரணத்தாலோ அந்த ஹோட்டலின் மாதாந்திர வாடிக்கைக்காரனாக மாறிவிட்டான்.

பங்கஜா ஹோட்டலின் ஒன்பதாவது மாதச் சாப்பாட்டு டிக்கட்டிற்குப் பணத்தைக் கொடுக்க மணிபர்ஸைத் திறந்தபோது திடீரென்று அவன் உள்ளத்தில் ஒரு வெடிப்பு ஏற்பட்டது. அதனுள்ளிருந்து எட்டிப் பார்த்த ஏதோ ஒன்று—ஒரு வேளை மனச்சாட்சியாக இருக்கலாம்—"அடமானுடா, மூன்று மாதத்திற்கொரு முறை ஹோட்டல் மாற்றும் பரம பவித்திரமான காரியத்தைச் செய்து கொண்டிருந்த நீ, பங்கஜா ஹோட்டலில் ஒன்பதாவது மாதச் சாப்பாட்டிற்கு டிக்கட் வாங்குவதற்குக் கவலையில்லாமல் பணத்தை எடுக்கிறாயே? இது நியாயமா? இது தருமமா? முறையா?" என்று உபதேச முறையில் கேட்டது.

கிருஷ்ணமூர்த்தி உடனே பதிலை சிருஷ்டி செய்து விடவில்லை.

"என்ன அண்ணா, தயங்கறேள்? பணம் கொண்டு வரமறந்துட்டேளா? பாதகமில்லை. சாப்பிட்டுட்டுப் போங்கே...மெதுவா நாளைக்குக் கொண்டுவந்து கொடுங்களேன்..."

கிருஷ்ணமூர்த்தியின் உணர்வுக்குச் சுருதி கூட்டின, கல்லாப் பெட்டியைக் காத்துக்கொண்டிருந்த கோபால் ராயரின் இவ் வார்த்தைகள்.

"இல்லே, இல்லே...வேறே ஒரு யோசனை..."

டிக்கட் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்ற கிருஷ்ணமூர்த்தியைத் திணற அடித்து விட்டன, "வாங்கோ அண்ணா" "உட்காருங்கோ அண்ணா" "டேய், அண்ணாவுக்கு மேஜையில் இலை போடு" "யாரடா அவன், அண்ணாவைக் கவனி" என்பன போன்ற சின்னஞ் சிறு வரவேற்பு வாக்கியங்கள்!

எத்தனை ‘அண்ணாக்கள்! எவ்வளவு அனாயாசமாக உதிர்க்கிறார்கள்!

பங்கஜா ஹோட்டலுக்கு கிருஷ்ண மூர்த்தி என்ற ஒரு அண்ணாமட்டும் இல்லை. ஹோட்டலின் வாடிக்கைக் காரர்களெல்லாம் கோபால் ராயருக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் அண்ணா தான்!

நுனி இலையில் தண்ணீரை விட்டுத் துடைத்துக்கொண்ட கிருஷ்ணமூர்த்திக்குச் சிரிப்பு வந்தது. ஊரில் இருக்கும் அவன் தம்பி சாம்பசிவம் அவனை ‘அண்ணா’வென்று ஒரு முறைகூடக் கூப்பிட்டது இல்லை. அவன் அம்மா கூட ஆயிரம் முறை சொல்லிவிட்டாள், அவனை ‘டேய் கிட்டு’ என்று கூப்பிடாதே என்று சாம்பசிவம் இந்த அதட்டல் உருட்டல்களுக்கெல்லாம் பணிந்து விடுபவன் அல்ல. கடிதம் எழுதும்போது கூட “கிட்டுவுக்கு அநேக நமஸ்காரம்” என்று எழுதுவானே தவிர, “கிட்டு அண்ணாவுக்கு அநேக நமஸ்காரம்” என்று எழுத மாட்டான்!

ஆனால், இங்கே? பங்கஜா ஹோட்டலுக்குள் நுழைந்து விட்டால் ஆயிரம் ‘அண்ணாக்கள் அவனுக்கு வரவேற்பு அளிக்கின்றன!

அது மட்டுமா? அந்த ‘ஹோட்டல் நாடகமே’ அவனுக்கு வற்றாத இன்பம் கொடுக்கும் காட்சியாக இருந்தது.

முதலாளி ராயரின் கவனிப்பே அலாதியானது. தன்னிடத்தி லிருந்தபடியே ஒவ்வொருவரையும் கவனிப்பார். அவரது கூர்மைக் கண்களுக்கு இலக்காகமல் எந்த இலையும் இருக்க முடியாது.

“டேய், டேபிளுக்கு ரைஸ்...” என்று கூவுவார். அவர் ‘ரைஸ்’ என்று கூவும்போது அவர் குரலின் ‘நைஸ்’ இருக்கிறதே, அதில் அப்படியே சொக்கிப் போய்விடுவான் கிருஷ்ணமூர்த்தி!

“அண்ணாவுக்கு ஊறுகா போடடா, டேய்...” என்று அவர் கூக்குரலிட்டால், அந்தக் குரலில் மத்தள நாதத்தின் இனிமையைக் கேட்கலாம்!

வாஸ்தவமாக, சாப்பாடு நன்றாயிருக்கிறது என்பதற்காக பங்கஜா ஹோட்டலுக்குப் போகிறானா? அல்லது ராயரின் சொல்-இசைக்கா? அல்லது உப்பு அதிகமாகிவிட்டதால் யாரும் விரும்பாத உருளைக் கிழங்குக் கறியை பின்னால் வருபவர்கள் இலையில் சாண்டி காண்டியாகத் தள்ளுவதைப் போல, அபரிமிதமாக உதிர்க்கப்படும் ‘அண்ணா’க்களைக் கேட்பதற்காக? என்று கேட்டால், கிருஷ்ணமூர்த்திக்கே பதில் சொல்லத் தெரியாது!

* * *

ஒரு நாள். தன் நட்புக்குழாம் புடை சூழ பங்கஜா ஹோட்டலைப் படையெடுத்தான் கிருஷ்ண மூர்த்தி “உட்காருங்கோ அண்ணா” என்று முகமன் கூறிவிட்டு நுனி இலைகளை எடுத்து போடும் பையனைக் கவனித்



செஞ்சிக் கோட்டையில் மரப்பாலம்
போட்டோ: விருதபநாத்

தான் கிருஷ்ணமூர்த்தி. ஹோட்டலின் இயந்திர வாழ்க்கையில் கட்டுப்பட்டிருந்த போதிலும் கூட அவன் செய்கைகளில் காணப்பட்ட ஒரு துடிப்பு கிருஷ்ணமூர்த்திக்குவியப்பை அளித்தது.

கறி, கூட்டைப் பரிமாறிவிட்டு உள்ளே சென்றான் பையன், சாதம் எடுத்துவர. அவன் நடையிலே விறுவிறுப்பு காணப்படுவது போல கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு நினைப்பு.

"சாதம் போடட்டுமா, அண்ணா? ..."

"உம்..." என்றான் கிருஷ்ணமூர்த்தி, பையனை உற்று நோக்கியவாறே. அவன் கண்களில் இருந்த அந்தக் குறுகுறுப்பு...!

பையன் பரிமாறிக் கொண்டிருந்தான்.

கிருஷ்ணமூர்த்தி தன் அருகிலிருந்த நண்பனிடம் ஆங்கிலத்தில் சொன்னான்: "சுந்தரம், இந்த ஹோட்டலிலேயே இவன் ஒருவன்தான் சுறுசுறுப்பாகவும், சுத்தமாகவும், வினயமுள்ளவனாகவும் இருக்கிறான். அவன் முகத்திலே ஒரு கவர்ச்சியைக் கவனித்தாயா?...பாவம், நன்றாகப் படித்திருந்தால் நம்மைப் போல ஒரு சாதாரண குமஸ்தாவாகவாவது ஆகியிருப்பான்..."

பையன் கடகட வென்று சிரித்தான்.

"என்?" என்று கேட்கும் பாவனையில் கிருஷ்ணமூர்த்தி தன் முகத்தை வைத்துக் கொண்டான்.

பையனின் மறுமொழி ஆங்கிலத்திலேயே வந்தது!

"ஓ! குமாஸ்தாவேலை அவ்வளவு சாதாரணமானதாகி விட்டதா, உங்களுக்கு? எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருந்தும் கூட, நீங்கள் அலட்சியமாகக் கூறும் அந்த குமாஸ்தா வேலை கிடைக்காததால் தான், இந்த தட்டைத் தூக்கும் வேலையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்!..."



கல்யாண மண்டபம்
போட்டோ : ஹிருதயநாத்

கிருஷ்ணமூர்த்திக்கு ஆச்சரியமாகவும் அவமானமாகவும் இருந்தது. பையனுக்கு ஆங்கிலம் தெரியாது என்று நினைத்துத் தான் சுந்தரத்திடம் அவன் ஆங்கிலத்தில் பேசினான். ஆனால், அந்தப் பையன் எவ்வளவு அழகாக, இனிமையாக ஆங்கிலம் பேசுகிறான்!...

கிருஷ்ணமூர்த்திக்கும், அந்தப் பையனுக்கும் ரகுராமனுக்கும் - இப்படித்தான் உறவு ஆரம்பமாகிற்று.

* * *

தன் வாராந்திர ஓய்வுநாளன்று கிருஷ்ணமூர்த்தியின் அறைக்குச் சென்றான் ரகு. ரகுவின் கதை முழுவதையும் கேட்டறிந்தான் அவன்.

ரகுவுக்குத் தந்தை கிடையாது. அன்னையும் இரு தங்கையும்தான் இருந்தார்கள். இந்த நால்வரும் வசிப்பதற்குப் போதுமான வீட்



ரங்கநாதர் கோயிலும் ராணி மண்டபமும்
போட்டோ : ஹிருதயநாத்

டைத்தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லை. தான் கஷ்டப்பட்டாவது ரகுவை எப்படியோ ஆறாவது பாரம் வரைபடிக்க வைத்து விட்டாள் அவன் அன்னை. நல்ல மார்க்கு எடுத்துத்தான் பாஸ் செய்திருந்தான் அவன். ஆனால், ஆயிரம் அலுவலகங்களில் ஏறிஇறங்கியும் வேலை கிடைக்கவில்லை. நல்ல வேலை கிடைக்கும் வரையில் சோம்பித் திரிந்து கொண்டிருக்க அவனுக்கு இஷ்டமில்லை. ஆகவேதான் பங்கஜா ஹோட்டலில் சேர்ந்து விட்டான். பத்திரிகைகளில் குமாஸ்தா வேலைக்கு விளம்பரங்கள் வரும் போதெல்லாம் அவனும் மனுச் செய்து கொண்டு தானிருந்தான்.

தன் தாய், தங்கைகளிடம் ரகு கொண்டிருந்த பாசமும், வாழ்க்கையிலே அவனுக்கு இருந்த உறுதியும் கிருஷ்ணமூர்த்தியின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. எப்பாடுபட்டாகிலும் அவனை முன்னுக்குக் கொண்டு வருவது தன்னுடைய கடமை என்று தீர்மானித்துக் கொண்டான் அவன்.

அலுவலகத்தில், கிருஷ்ணமூர்த்திக்கு நல்ல மதிப்பு இருந்த காலம் அது. குமாஸ்தாக்கள், மானேஜர், அக்கவுண்டண்ட், ஆடிட்டர் என்று எல்லோருடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தான் அவன்.

அலுவலகத்தில் வேலை அதிகரித்து கொண்டிருப்பதை சுட்டிக் காட்டி இன்னுமொரு குமாஸ்தாவை சேர்த்துக் கொள்ள மானேஜரிடமிருந்து அனுமதி பெற்றான் கிருஷ்ணமூர்த்தி. ரகுராமனை ஒரு மனு எழுதச் செய்து அவன் மனுவைத் தானே மானேஜரிடம் எடுத்துச் சென்றான்.

கிருஷ்ணமூர்த்தியே தேர்ந்தெடுத்து விட்ட ஒருவனை தள்ளி விடுவாரா மானேஜர்? அவரும் ஒப்புக் கொண்டு விட்டார்.

பங்கஜா ஹோட்டல் ஸர்வராக இருந்த ரகுராமன் "உமா அண்ட் ரமா" கம்பெனியில் பதிவுக் குமாஸ்தாவாக மாறிவிட்டான்.

நாட்கள் ஓடின.

குமாஸ்தாக்கள் லீவு பெற்றுக் கொண்டு போகும் போதெல்லாம் அந்தப் பிரிவுகளில் வேலை செய்து ரகுராமனுக்கு எல்லாப் பிரிவு வேலைகளும் அத்துபடியாகிவிட்டன. கலங்காது வேலை செய்து, எல்லோரிடமும் கணீரென்று பேசி வந்த அவன் சீக்கிரத்திலேயே மானேஜரின் பிரத்தியேக அன்பைப் பெற்றதில் ஆச்சரியமில்லை.

ஏதேனும் சந்தேகங்கள் தெளிய வேண்டுமென்றால், யோசனைதேவைப்

பட்டால், ரகுராமனைத் தான் கூப்பிடுவார் மானேஜர். இதனால், ரகுராமனின் வேலை அதிகரித்தது, மற்ற குமாஸ்தாக்களை விட அதிக நேரம் அவன் உழைக்க வேண்டியிருந்தது. உழைப்பு அதிகமாகி விட்டப்பின் பேச்சுக்கு நேர மேது? ஆபீஸ் குமாஸ்தாக்கள் அனைவரிடமும் சௌஜன்யமாக சல்லாபித்துக் கொண்டிருந்த அவனுக்கு, இப்போது ஓரிரு வார்த்தைகள் பேசக் கூட நேரமில்லை. ஆனால், மற்ற குமாஸ்தாக்கள் இதை வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்டு விட்டார்கள்.



மணிக் கூண்டு

போட்டோ விருதயநாத்

* * *

வருடாந்திர சம்பள உயர்வை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள், 'உமா அண்ட் ரமா' கம்பெனி சிப்பந்திகள்.

"வேய், நான் சொல்கிறேன் என்று வேண்டுமானால் பார்—ரகுவுக்கு நூறு ரூபாய் கிரேடு நிச்சயம்! நான் நீ கிருஷ்ணமூர்த்தி எல்லோரும் என்பத்தைந்து ரூபாயும் பஞ்சப்படியும் வாங்கப் போகிறோம்..."—சுந்தரம் பேச்சைத் துவக்கிவைத்தான்.

"பின்னே? ராப் பகலாய் மானேஜரை காக்காய் பிடித்ததற்கு அவர் அது கூடச் செய்யமாட்டாரா, என்ன?—ராமநாதன்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே கிருஷ்ணமூர்த்திக்கு மானேஜரிடமிருந்து அழைப்பு வந்தது. என்னமோ, ஏதோ என்று நினைத்துக்கொண்டே அவர் அறைக்குள் நுழைந்தான் அவன்.

"கங்கிராஜுலேஷன்ஸ், மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி!... நூறு ரூபாய் கிரேடுக்கு உங்களை உயர்த்த டைரக்களின் அனுமதி கிடைத்து விட்டது... உங்கள் யோசனை நமது கம்பெனிக்கு நல்ல லாபம் கொடுத்துள்ளதை அறிய அவர்களுக்கு வெகு சந்தோஷம்..."

கிருஷ்ணமூர்த்திக்கு ஒரே வியப்பாகி விட்டது. யோசனையா? என்ன யோசனை? எப்போது சொன்னேன்?...

"ஸார்...நீங்கள்...வந்து..."

"ஆமாம், நான் தான் சிபாரிசு செய்தேன். ரகுவிடம் நீங்கள் கூறி அனுப்பிய யோசனை பிரமாதம் போங்கள்..."

"...!"

"இப்போது கையிலிருந்த ஸ்டாக்கெல்லாம் தீர்ந்து விட்டன. மேலும் ஆர்டர்களை வந்து குவிந்து கொண்டிருக்கின்றன!... நீங்கள் லீவில் சென்ற அன்று, நீங்கள் என்னிடம் சொல்லச் சொல்லியதாக ரகுதான் கூறினான். அவன் கூறியபடியே, நாம் உற்பத்தி செய்யும் பொருள்கட் கெல்

லாம் பழைய பெயர்களை விட்டு நவ நாகரீகப் பெயர்களாகக் கொடுத்தோம். விளம்பரங்களில் காஷ்மீரக் காட்சிகளையும், அஜந்தா சித்திரங்களையும், தஞ்சை சிற்பங்களையும் போட்டு விற்பனைப் பொருள்களுக்கும் அவைகளுக்கும் ஏதோ முடிச்சுப் போட்டு வைத்தோம்!...பலன், பிரமாதம்!... இந்த யோசனை ரகுவினுடையதுதான் என்று நினைத்து, அவன் பெயரை சம்பள உயர்வுக்கு சிபாரிசு செய்யப் போவதாக நான்கு நாட்களுக்கு முன் அவனிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அவன் உண்மையைக் கூறினான். நேற்றைய டைரக்டர்களின் கூட்டத்தில் உங்கள் பெயரை சிபாரிசு செய்து அவர்கள் அனுமதியையும்பெற்றுவிட்டேன்..."

மானேஜர் அறையிலிருந்து வெளியே வந்த கிருஷ்ணமூர்த்தி, ஓடிச் சென்று ரகுராமனை அணைத்துக் கொண்டதற்குக் காரணம் புரியாமல் திகைத்து நின்றனர், மற்ற குமாஸ்தாக்கள்! ★



உல்லாஸ வேளையில் ஸ்விட்ஸர்லாந்தில் மலைக்கு மலை தாவிச் செல்கின்றனர்.

மதிப்புரை

புகைநடுவில் :—நாவல் — ஆசிரியர் கிருத்திகா. வெளியிட்டோர் G. A. நடேசன் அண்டு கோ., சென்னை 1. விலை ரூ. 2—8—0.

உயர்ந்த பண்பாடு; உயர்ந்த லட்சியம்; உயர்ந்த கதாபாத்திரங்கள்; உயர்தரமான நிகழ்ச்சிகள் இவைகளைக் கொண்டே இந்நாவலை தொகுத்திருக்கிறார் ஆசிரியர். இன்றைய நாவலுலகத்திற்கு இதுபோன்ற சிறந்த நாவல்கள் வரவேற்கக்கூடியதாகும். இந்நாவலில் ஆபாச பாத்திரங்களுக்கோ, ஆபாச நிகழ்ச்சிகளுக்கோ சிறிதும் இடமில்லாமல் கதையை ஸ்வாரஸ்யமாக எழுதியிருப்பதானது ஆசிரியரின் உயர்ந்த கருத்துக்களை கண்ணாடிபோல் காட்டுகிறது.

கதை நடக்குமிடம் டெல்லி, கதாபாத்திரங்கள் டெல்லி செக்ரெடிரியேட்டில் உயர்தர உத்தியோகஸ்தர்களில் சிலர். இவர்களுக்குத் துணை பாத்திரங்கள் ஒரு டாக்டர், ஒரு சட்டசபை மெம்பர். மேற்கண்ட கதா பாத்திரங்களின் மனைவிமார்களின் தொடர்புடன் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இடையிடையே அரசியல் வாதங்கள், காந்தீயம்—கம்யூனிஸம் போன்ற சர்ச்சைகள் (சத்தியம்) அஹிம்சை வாதங்கள் இந்நாவலில் இடம் பெறுகின்றன. சமூகப் பழைய பண்பாடு, சமூகப் புரட்சியின் மந்தம் இவைகளையும் ஆசிரியர் நுணுக்கமாக கதா ரூபத்தில் புகுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லி செக்ரெட்டேரியட்டில் உயர்ந்த உத்யோகம் பார்க்கும் விதர்ப்பன், அழகே உருவான தன் மனைவி சந்திராவதியைத் தொட்டும் தொடாமல் நடத்துகிறான். இதினால் சந்திராவதியின் மணம் நெருப்பிலிட்ட மெழுகுபோல் வாடுகிறது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, விதர்ப்பனின் நண்பன் சத்தியன் சந்திராவதியைக் காதலிக்கிறான். அவன் மணமானவன், ஒரு குழந்தையை ஈன்றெடுத்தவன் என்பதையும் மறந்து விடுகிறான். சந்திராவதியும் அவனுடைய பேச்சு சாதுர்யத்திலும், நடையுடைபாவனையிலும் மயங்கி அவன்மீது ஆவலுறுகிறாள். ஆனால் பதி துரோகம் கூடாதென நினைக்கிறாள். இதன் முடிவு சத்தியன் பயித்தியமாக மாறி, தற்கொலை செய்து கொள்ளுகிறான். இவ்விஷயம் இவர்களுடன் உத்யோகம் பார்க்கும் உத்யோகஸ்தர்கள் வாஸன், பத்ரி (சட்டசபை அங்கத்தினரின் மனைவி) சீதா இவர்களுக்குத் தெரிந்துவிடுகிறது. பல விவாதங்கள் நடக்கின்றன. முடிவில் சந்திராவதியும், விதர்ப்பனும் அன்பால் பிணைக்கப்படுகிறார்கள்.

இடையில் டாக்டர் ஸ்ரீராமின் லீலாவினோதங்கள் குறுக்கிடுகின்றன. அவருடைய மாயமோக வலையில் உஷா என்னும் ஓவியப் பெண் விழுந்துவிடுகிறாள். சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர் தான் பதவியை விட்டுவிட்டு, புதிய இந்தியாவை சிருஷ்டிக்கப் போவதாகக் கூறும் காட்சி வினோதமாகவும், சுவையாகவுமிருக்கிறது. இந்நாவலை எல்லோரும் வாங்கிப் படிக்கலாம். பொழுது போக்குக்கு மட்டுமின்றி தற்கால அரசிய விஷயங்களை யும் புரிந்துகொள்ள இந்நாவல் உதவி செய்கிறது.

A BUSINESS CLOSE UP 1952

Figures in lakhs

New Business written in the year	...	Rs. 10.07
Total Business in force at the end of the year	...	Rs. 50,44
Total Claims paid till the end of the year	...	Rs. 7,86
Total Funds at the end of the year	...	Rs. 11,62
Total Assets	...	Rs. 12,54

★

NATIONAL INSURANCE CO., LTD.

Head Office:

7, COUNCIL HOUSE STREET, CALCUTTA

Madras Branch:

362, Netaji Subhas Chandra Bose Road,

ESPLANADE.

For Safety you must use

MINTEX

Brake Lining on your Cars & Trucks

●

Distributors:

The Madras Mercantile Agencies Ltd.

MOUNT ROAD, MADRAS-2

Phone: 86886

தேவர்கள் தோற்றனர்

சுப்பு

" அழகான பெண், அரச குமாரி; யௌவன பருவம்; தானே தனக்கிசைந்த மணவாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் போகிருள் "; என்ற செய்தி தேவ லோகத்திற்கும் எட்டுகிறது. தேவர்கள் அப் பெண்ணின் அழகையும், அவள் யாரை விரும்புகிருள்? என்பதையும் தங்கள் தூதுவர்கள் மூலம் தெரிந்து கொள்ளுகின்றனர்.

அப்பெண் காதலிக்கும் காதலனிடமே தேவர்கள் வருகின்றனர் அவனிடம், தேவேந்திரன் வணங்குகிருன் பிறகு 'உன்னுல் எங்களுக்கு ஒரு காரியம் நடக்கவேண்டும். அதை நீ நிறைவேற்றிக் கொடுப்பதாக உறுதி யளித்தால், சொல்லுகிருேம்' என்கிருன்.

அரச குமாரன் சிந்தனையிலாழ்ந்தான். " தேவர்களுக்கு அதிபனும், தேவர்களும் நம்மிடம் வந்து யாசிக்கக் கூடிய பெருமை நமக்கு வந்ததென்ருல், அது நம் முன்னோர்கள் செய்த தவப்பயனல்லவா?" என்று எண்ணுகிருன்.

பிறகு அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களிக்கிருன்.

அரச குமாரனின் வாக்குறுதியைக் கேட்ட தேவேந்திரன், நாதடுமாற,

வெயில் விரி மணிமுடி
வீமன் நல்கிய
மயிலியல் மதர்விழி
வளைக்கை மங்கைபால்
செயிரறு தூது
நீ செல்ல வேண்டுமென்று
உயிரிரப் போரினும்
உளையக் கூறினுன்.

இதைக்கேட்ட அரச குமாரன் கலங்கினுன். "என்ன என் காதலியிடம் நானே தூது போய், தேவர்களுக்கு மாலையிடும்படி கூற வேண்டுமா? அன்னத்திடம் நான் கொடுத்த வாக்கு பொய்த்ததாகி விடுமே!... ஊழ்வினை என்னை, என் வாக்கைக் கொண்டே சோதிக்கிறது போலும்" என பலவாறு சிந்திக்கிருன். தேவேந்திரனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் காதலி தமயந்தி வாழும் நகருக்குப் புறப்படுகிருன் நளன். தேவர்களின் அருளால் அவன் உருவம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படவில்லை.

நளன் எல்லா காவலையும் கடந்து தமயந்தியின் கன்னி மாடத்தை அணுகுகிருன்.

தமயந்தி தன் தோழிகளுடன் விளையாடுகிருள். தோழிகள் சிறு நாடக விளையாட்டு நடித்துக் காட்டுகின்றனர்,

ஒருத்தியான் நளனென
இருப்ப உள்ளுறும்
விருப்பினுல் ஒருத்தியான்
வீமன் மாதென
மருக்கமழ் பூந்தொடை
சூட்ட மன்னவன்
பொருப்புறம், தடம்புயம்
புளகம் பூத்தவே.

தோழிகளில் ஒருத்தி நளனுகவும், மற்ருெருத்தி தமயந்தியாகவும் நடிக்கின்றனர். நளன் கழுத்தில் தமயந்தி மாலையிடும் காட்சியைக் காண்கிருன் நளன்.

நாடகக் காட்சியைக் கண்டு புன்முறுவல் செய்யும் தமயந்தி

யின் பேரழகைக் கண்டு அசையாது நின்று விடுகிறான், நளன். அவனுடைய நிழல் தோழிகளின் கண்களுக்குத் தெரிகிறது. உடனே தமயந்தியிடம் நிழலைக் காட்டுகின்றனர்.

நளன் தன் உருவத்தைத் தமயந்திக்குக் காட்டி, தான் "தேவர்களின் தூதன்" என்னும் தேவர்கள் தமயந்திமீது கொண்டுள்ள காதலையும் கூறுகிறான்.

தமயந்தி, நளனுடைய எழிலில் மயங்கி, இவன்தான் தேவனோ என்று ஏங்குகிறாள்.

அதுசமயம் அன்னம் அங்கு வந்து, இவனே நளன் என்றும், அவன் கொடுத்த வாக்கையும் கூறுகிறது.

அதைக்கேட்ட தமயந்தி,

வையகம் ஒரு கோலோச்சி
வான்புகழ் நிடதம்காக்கும்
ஐயனை மணப்பதன்றி அரிமதர்
நெடுங்கட் செல்வத்தை
தையல் வேறொருவர் நாமஞ்
சாற்றினும் ஆற்றாளாகி
வெய்ய செந்தழலின் மூழ்கி
விளிவதற்கையமின்றே

"உலகத்தை ஒரு குடையிலாளும் நளனை மணப்பேனே தவிர, வேறு ஒருவர் பெயரை எனக்கு மணாளன் என்று சொன்னாலும் தீக்குளித்தே திருவேன்?" என்று தோழி மூலம் பதில் கூறி நளனை. தன் கடைக் கண்ணால் நோக்குகிறாள் தமயந்தி.

இருவர் கண்களும் பேசிக் கொண்டன.

"தேவர்கள் தோற்றனர்" என்று கூறி பெருமூச்சொன்று விட்டு விட்டு, நிடத நாடு திரும்பினான் நளன்.



அழகான முகவெட்டும் கவர்ச்சியான உடலமைப்பும் உடைய M. K. சரோஜா "அவள்," 'ராஜ ராஜேஸ்வரி' முதலிய படங்களில் பங்கெடுத்துக்கொண்டுள்ளார்.

இவரது திறமை மிக்க நடிப்பு அதிசீக்கிரம் நட்சத்திரப் பதவிக்குக் கொண்டுவந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

PREMIER

LIFE & GENERAL INSURANCE CO., LTD. MADRAS

LARGEST

MOTOR INSURANCE CO. OF S. INDIA

Yearly premium income 13,00,000

No. of vehicles insured 20,000

Head Office: 289, Thambu Chetty Street, MADRAS

பரத நாட்டியத்திலும் ஓரியண்டல் நடனத்திலும் நாளுக்கு நாள் மிகவும் தேர்ச்சி பெற்று வருகிறார் ரேணுகாதேவி.

★

SOUND AS EVER

VALUATION AS AT 31ST DECEMBER 1951
REVEALS EXCELLENT POSITION OF THE COMPANY

BONUS DECLARED

Rs. 9/- PER THOUSAND SUM ASSURED PER YEAR ON ALL WITH-PROFITS POLICIES

A PROGRESSIVE

COMPOSITE INSURANCE COMPANY
Transacting Business in Life, Fire, Marine, and
Miscellaneous Accidents

CALCUTTA INSURANCE LTD.,

Head Office : 135, Canning Street, Calcutta
Madras Branch : 5. Sunkurama Chetty Street, Madras

நேர்த்தியான

விளக்குகள் விற்பனையிலும்

விசித்திரமான

அலங்கார ஒளியமைப்பிலும்

தலைசிறந்த தொழிலாளர்

✱

சேதுராம் தியாகராஜன் & கம்பெனி

272, அங்கப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-1

Telegrams: "FIREPROOF" Telephone: 73238, 73239

THE

NOBLE STEEL PRODUCTS LTD.

HEAD OFFICE & WORKS:

Near Wireless Station, WORLI, BOMBAY-18

BEFORE YOU BUY ANY FURNITURE

Either for office, Home or Hospital inquire with us for

STEEL FURNITURE OF ALL KINDS

Good Quality at Competative Price

TO SUIT ALL

*

We Manufacture:

FIRE & BURGLAR RESISTING SAFES, STEEL
CABINETS CUPBOARDS & MODERN STEEL
FURNITURE & HOSPITAL FURNITURE
on Govt. Municipal & Railways lists

*

All communications to be addressed to Head office at WORLI

SHOW ROOMS:

27. Churchgate Street
BOMBAY-1

288, Kalbadevi Road
BOMBAY-2

வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும்

தீபாவளி வாழ்த்துக்கள்

ஆர்டிஸ்ட், என்கிரேவிங், ஆப்டோன்,

லயன், ட்ரைகலர், பிளாக்குகள்

ரப்பர் ஸ்டாம்புகள்

முதலியவைகளுக்கு

86729

நம்பருக்கு டெலிபோன் செய்யுங்கள்

அல்லது

நேரிடை ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

நியூடோன் & கம்பெனி

வாலாஜா ரோடு, மவுண்டு ரோடு, :: மதராஸ் - 2

Managing Editor and Publisher: M. D. Raman, Southern Avenue Alwarpet, Madras-18 and Printed by Rama Arunachalam at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1.

Associate Editor: S. Sethurama Sarma.

உங்கள் நவீன வீடுகளை

பீஹைவ் வாசல் கேட்டுகள், ஜன்னல் கம்பிகள், வேலிகள்
முதலியவைகளால் அமையுங்கள். அவைகள் சிறந்த
வேலைப்பாடும், நூதன அமைப்புடனும் கூடியவை.

BEEHIVE FOUNDRY ENGINEERING WORKS





புரொப்ரைட்டர்கள்:

Indian Commerce & Industries
Co., Ltd.
"BEEHIVE BUILDINGS"
95, பிராட்வே, சென்னை-1
போன்: 2020 தந்தி: "LUCKY"

ஒர்க்ஸ் விஸ்தரிப்பு:

கௌதா ஸ்டீல் ப்ராடக்ட்ஸ்
ராமவரப்பாடு
கிருஷ்ணா ஜில்லா

பிரான்ச்:

கௌதா பில்டிங்ஸ்
பக்கிங்ஹாம் பேட்டை
விஜயவாடா

ஆயில் மில்கள்:

எக்ஸல்ஸியர் ஆயில் மில்ஸ்
ஹனுமான்லு பேட்டை
விஜயவாடா